# சரபேந்திர வைத்திய முறைகள்

## (பித்தரோக சிகிச்சை)



சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 101

# சரபேந்திர வைத்திய முறைகள்

## [பித்தரோக சிகிச்சை]

பதிப்பாசிரியர்கள் :

**Dr. V. G. சந்திரன்,** L. I. M.. A. M. I. H., (Regd.)

**Dr. நளினி சந்திரன்,** L. I. M., M. Sc., (Regd.)

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்,**

தஞ்சாவூர்.

2005] [விலை : ரூ.60-00

## நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

| | |
|---|---|
| நூற்பெயர் | : சரபேந்திர வைத்திய முறைகள் (பித்தரோக சிகிச்சை) |
| பதிப்பாசிரியர்கள் | : டாக்டர். V. G. சந்திரன்<br>டாக்டர். நளினி சந்திரன் |
| வெளியிடுபவர் | : இயக்குநர்,<br>சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : 101 |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு | : நான்காம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : , 2005 |
| தாள் | : TNPL 18.6 கி. கி |
| நூல் அளவு | : 21 x 14 செ. மீ. |
| பக்கங்கள் | : 176 |
| படிகள் | : 500 |
| எழுத்து | : 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : ஒளி அச்சுக்கோப்பு மற்றும் ஒளி அச்சு,<br>சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : மெலிந்த அட்டை |
| பொருள் | : மருத்துவம் |
| விலை | : ரூ. 60-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

தமிழ் நாட்டுச் சித்த மருத்துவ முறையில் வாதம், பித்தம், சிலேட்சுமம் என்ற மூன்று உடற்கூறியல் வகைகளாகப் பிரித்து அதற்குரிய மருத்துவ முறைகளைப் பின்பற்றுபவர் அவ்வகையில் பித்தம் அடிப்படையில் தோன்றும் நோய்களுக்கு உரிய மருந்துகளாக லேகியம், கஷாயம், எண்ணெய், இரசாயனம், குழம்பு, ஔஷதம், சூரணம் போன்ற பல்வேறு மருந்துகள் தயாரிப்பு பற்றிக் கூறுவதே பித்தரோக சிகிச்சை முறையாகும்.

இரண்டாம் சரபோஜி மன்னரின் மருத்துவ நிபுணர்களால் தொகுக்கப்பெற்ற பித்த ரோக மருந்துகளின் தொகுப்பாக சரபேந்திர வைத்திய முறைகள் (பித்தரோக சிகிச்சை) எனும் தலைப்பில் இந்நூல் விளங்குகின்றது. மருத்துவர் பி. கே. சந்திரன் மற்றும் அவரது துணைவியார் நளினி சந்திரன் ஆகியோர் 1963ஆம் ஆண்டு இணைந்து இச்சுவடி நூலைப் பதிப்பித்துத் தந்துள்ளனர். தற்பொழுது நான்காம் பதிப்பாக இந்நூல் உரிய திருத்தங்களுடன் வெளியிடப் பெறுகின்றது.

இந்நூல் சிறப்பாக வெளிவரச் செயலாற்றிய சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் திரு. இரா. சுப்பிரமணியன், வெளியீட்டு மேலாளர் முனைவர். குடவாயில் பாலசுப்ரமணியன் ஆகியோருக்கும், நூலகப் பதிப்புத்துறை பணியாளர்களுக்கும் என் பாராட்டுக்கள்.

இந்நூலினை அச்சிட நிதி உதவி நல்கிய நடுவண் அரசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மா. வீர சண்முக மணி,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
2-9-2005

# PREFACE

We have already published fourteen volumes in the Sarabhendra Vaidya Muraigal Series, each containing collection of tested prescriptions for many ailments and disesase including Diabetes. The present work is yet another publication in the series, containing tested prescriptions for **"PITHA ROGAS".**

The term PITHA is often attributed to bilious disorder. According to Ayurvedis conecption there are five kinds of PITHAS which fall under two groups 1. VYAKTA PITHA (visible), 2. GOODHA PITHA (invisible). So Bile a visibie liquid falls under the cateogry of Vyakta Pitha.

The Editors Dr. V. G. Chandran and Dr. Nalini Chandran have done a thorough and excellent job of their work especially in their exposition of the different kinds of PITHAS, their respective functions and their relative glandular secretions according to the Western system, thus making the introduction a regular thesis on the subject. The relevant taburlar columns which they have prepared with great pains reveal a thorough and careful study of both systems of Ayurveda and allopahy. Thay have also given the substitutes for some of the rare drugs which are not available now.

We are greatful to the learned Editors for the very useful work they have done. Wd have no doubt that their achivement will be found useful by physicians as well as the lay public.

We express our deep gratitute to the Union Government and to the Government of Madras for their timely grants that have helped us to publish this an other precious manuscripts in our Library.

20-3-1963
Thanjavur.

**S. GOPALAN**
Honorary Secretary,
T.M.S.S.M. LIBRARY.

## காப்பு

ஆதியடி நடுவாகி முடிவுமாகி
    அருளொளியாய்ப் பரவெளியா யெங்குமாகி
நீதியெனும் பொருளாய்நிஷ் களங்கமாகி
    நித்தியா னந்தசுகா தீதமாகி
வீதியெனும் மேருமுடி மீதுமாகி
    வீரான கதிர்மதியு மிரண்டுமாகி
சோதியெனு மம்பலத்தில் நடனஞ்செய்யும்
    சுத்தபரம் பொருள்பாதங் காப்பதாமே.

ஆதியென்ற மகரிஷிகள் பாதங்காப்பு
    அனாதியென்ற ஜோதிரூப வடிவேகாப்பு
நீதியென்ற பராபரியாள் பாதங்காப்பு
    நிஷ்களமாய் நாதாந்த வெளியேகாப்பு
கோதில்லா மாமுனியோர் முதலாயுள்ள
    கோடான கோடிசித்தர் பாதங்காப்பு
சோதியென்ற சின்மயத்தைக் கருத்தில்வைத்து
    செப்புவேன் சரபோசி முறையைத்தானே.

## நூன்முகம்

சீருலவும் சதுர்மறைக்கு மெட்டாதாகிச்
சித்தறிந்து நின்றவர்க்கு ஒளியுமாகி
ஏருலவும் அண்டபிண்ட மிரண்டுமாகி
எப்பொருட்கும் எவ்வுயிற்கும் இறைவனாகிப்
பேருலவும் ப்ரணவசற் குருவுமாகிப்
பேச்சற்ற மோனமெய் ஞானமாகிப்
பாருலவும் வித்துள்ளவஸ்து வாகிநின்ற
பரவெளியின் சரணமலர்ப் பாதவீடே.

வீட்டிலே பெண்டுமக்க ளுடன்கூடி
விளையாடிக் கொண்டிருந்தால் வருமோ ஞானம்
நாட்டிலே யிதறியா தநேகம்பேர்கள்
ஞானமென்ன வாதமென்ன வைத்யமென்ன
ஏட்டிலே சுரைக்காயென் றிருந்தாலத்தை
என்செயலாம் கறிசமைக்க ஹேதுவுண்டோ
பாட்டிலே யிருந்தென்ன பலிக்குமோதான்
பக்தியுடன் சரபோசி முறையைப்பாரே.

பாரப்பா மானிடர்கள் பிணிகள் தீர்த்தால்
பராபரத்தின் அருளுனக்கு பலிக்குமன்றோ
ஆரப்பா யிவ்விதமாய் போதித்தார்கள்
அனுபோக சரபோசி முறைகளெல்லாம்
கூறப்பா சித்தருட நூலுக்கானால்
குருவருளு மில்லாவிட்டால் குப்பையாகும்.
நேரப்பா யின்னூலுக் காசான்வேண்டாம்
நீயாகச் செய்துகொண்டு நெறியைக்காரே.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| முகவுரை | | |
| அயிலேய லேகியம் | - | 1 |
| சீதத்திற்கு, பித்தரோகத்திற்கு வில்வாதி கஷாயம் | - | 2 |
| பித்தரோகத்திற்கு நெல்லிக்காய் எண்ணெய் | - | 2 |
| பித்தத்திற்கு அச்வகெந்தாதி ரஸாயனம் | - | 3 |
| முசுமுசுக்கை லேகியம் | - | 4 |
| பித்தத்திற்கு வில்வக்குழம்பு | - | 4 |
| பித்தத்திற்கு சதாவேரித் தைலம் | - | 5 |
| பித்தத்திற்கு வில்வாதி லேகியம் | - | 6 |
| இரத்தபித்தத்திற்கு எடுத்த அவுடதம் | - | 7 |
| பித்த விகாரத்திற்கு | - | 8 |
| பித்தத்திற்கு ஏலாதிச் சூரணம் | - | 8 |
| வேறு ஏலாதிச் சூரணம் | - | 9 |
| பித்தத்திற்கு வில்வாதி லேகியம் | - | 9 |
| பித்தம், வாய்க்கசப்பு, வயிறெரிவு, கிருகிருப்பு, மயக்கத்திற்கு மருந்து | - | 10 |
| பித்தத்திற்கு ஏலாதி மாத்திரை | - | 11 |
| பித்தத்திற்கு சதாவரி நெய் | - | 11 |
| வேறு சதாவரி கிருதம் | - | 12 |
| பித்தத்திற்கு வில்வாதி லேகியம் | - | 12 |
| பித்த ரோகத்திற்கு திரிகடுகு திரிபலாச சூர்ணம் | - | 13 |
| பித்தத்திற்கு உருண்டை | - | 14 |
| சதாவரிகிருதம் | - | 14 |
| பித்தவாணத்திற்கு அயிலேபகத் தைலம் | - | 15 |
| பித்தசூட்டிற்கு பிருங்காமலகம் | - | 15 |
| இளநீர் குழம்பு (கல்பம்) | - | 16 |
| பித்த ரோகங்களுக்கு அயிலாதி லேகியம் | - | 16 |
| பித்தத்ததிற்கு லகுகண்டாமலக லேகியம் | - | 17 |

பித்தத்திற்கு எண்ணெய் - 18

பித்தத்திற்கு - 19

பித்தத்திற்கு மகா ஏலாதிச் சூரணம் - 20

பித்தத்திற்கு திராட்சாதிச் சூரணம் - 21

பித்தத்திற்கு லேகியம் - 21

இதுவுமது - 22

பித்தத்திற்கு வேறு - 22

40 வகை பித்தத்ததிற்கு எண்ணெய் - 22

இன்னமொன்று - 23

வேறு தைலம் - 23

பித்தம், மருந்தீட்டிற்கு - 24

பித்தரோக குணம் - 24

பித்தரோக நெய் - 25

பித்தம் சகலத்திற்கும் உருண்டை - 27

பித்தகுண நிதானம் - 27

பித்தகுணத்துக்கு மருந்து - 28

பித்தக்கொதிப்பு, குடல்சோர்வு, வறட்சிக்கு மருந்து நெய் - 30

வறட்சி, பித்தத்ததிற்கு மருந்து நெய் - 30

பித்தம், சத்திக்கு அயிலாதிச் சூரணம் - 31

தலைசுழல் பித்தத்திற்கு - 32

பித்தம், வாய்வு, வெட்டைக்கு மஹாவில்வாதி லேகியம் - 33

உந்மாத பித்தத்திற்கு காகநிம்பாதி கிருதம் - 35

பித்த பிரமை, தலை கிறுகிறுப்பு, சத்தி, தலைவலி, காதிரைச்சல் இவைகளுக்கு எண்ணெய் - 36

பயித்தியம், கிறுகிறுப்பு, மயக்கம், தியக்கம், தாகம், எரிவு, சுரம், வயிற்றெரிவு இவைகளுக்குக் கஷாயம் - 36

வேறு விழுது - 37

வேறு உள்ளுக்கு நெய் - 37

பயித்திய வியாதி சகலத்திற்கும் - 37

பித்த மயக்கத்திற்கு - 38

பயித்திய வாயுவுக்கு - 38

| | | |
|---|---|---|
| ஓடிக்கொண்டு திரிகிற பைத்தியத்திற்கு | - | 39 |
| பயித்தியம் எடுக்கிறதற்கு | - | 39 |
| பயித்தியம் பிடித்தவனுக்கு நசியம் | - | 39 |
| வேறு நசியம் | - | 39 |
| பயித்தியத்திற்கு மருந்து | - | 40 |
| பயித்தியத்திற்கு | - | 41 |
| வேறு | - | 41 |
| பயித்தியம் பிடித்தவனுக்குச் சூரணம் | - | 41 |
| பயித்தியத்திற்கு நெய் பண்ணும் வகை | - | 42 |
| பயித்தியத்திற்கு மருந்துகள் | - | 42 |
| பயித்தியத்திற்கு மருந்து | - | 43 |
| வில்வாதி லேகியம் (பயித்தியம் முதலானதற்கு) | - | 43 |
| பித்த வகைகள் | - | 45 |
| பயித்தியத்திற்கு சீதேவி செங்கழுநீர் எண்ணெய் | - | 45 |
| சர்வ பயித்தியத்திற்கும் நெல்லிக்காய் எண்ணெய் | - | 46 |
| 40 வகை பயித்தியத்திற்கும் இளநீர் எண்ணெய் | - | 46 |
| பயித்தியத்திற்கு மருந்து | - | 47 |
| பித்தபாண்டுவுக்கு | - | 47 |
| வெறிகொண்ட பயித்தியம்தீர மருந்தும், துவாலையும் | - | 47 |
| வெள்ளோக்காளத்திற்கு | - | 48 |
| வெள்ளோக்காளத்திற்கு வேறு | - | 48 |
| வெள்ளோக்காளம் க்ஷயத்திற்கு | - | 48 |
| வெள்ளோக்காளத்திற்கு மருந்துகள் | - | 49 |
| வாந்திக்குக் கஷாயம் | - | 49 |
| வாந்திக்கு வில்வாதி லேகியம் | - | 50 |
| வாந்தி நிற்க ஏலாதிச் சூரணம் | - | 50 |
| வாந்திக்குக் கண்டாத்திரக லேகியம் | - | 51 |
| வாந்திக்குச் சூரணம் | - | 52 |
| வாந்திக்கு மருந்துகள் | - | 52 |
| வாந்திக்கு வில்வாதி லேகியம் | - | 52 |
| வாந்திக்கு | - | 52 |

| | |
|---|---|
| வாந்திக்குக் கஷாயம் | - 54 |
| வாந்தி பண்ண | - 54 |
| வாந்திக்குச் சூரணம் | - 54 |
| வேறு | - 54 |
| சத்திக்கு (வாந்திக்கு) உள்ளுக்கு மருந்து | - 55 |
| சத்தி விக்கலுக்கு வில்வக்குழம்பு | - 55 |
| சத்திக்கு கெண்டூஷம் | - 56 |
| மத்தனை செய்யுங்குணம் | - 56 |
| பயித்தியத்தின் குணங்கள் | - 57 |
| சத்திக்கு வில்வாதி லேகியம் | - 57 |
| சத்திக்குக் கஷாயம் | - 57 |
| வேறு கஷாயம் | - 58 |
| ஒக்காளம், வாந்திக்கு காற்பாசச் சூரணம் | - 58 |
| இதுவுமது | - 59 |
| சத்திக்கும் வெள்ளோக்காளத்திற்கும் மருந்துகள் | - 59 |
| வாந்தி அருசிக்குச் சூரணம் | - 59 |
| சர்தி, விக்கல், அருச்சிக்கு | - 60 |
| சத்திக்கு காற்பசச் சூரணம் | - 61 |
| சத்திக்கு மருந்து | - 61 |
| சத்திக்கு தூமம் | - 61 |
| இதுவுமது | - 62 |
| வேறு வர்த்தி | - 62 |
| இரத்த பித்தத்திற்கு வாசாதி கிருதம் | - 62 |
| மஞ்சள்போல் வாந்தி எடுப்பதற்கு | - 63 |
| வாய் நீரூறலுக்கு | - 63 |
| சத்திக்கும் விக்கலுக்கும் கெண்டூஷம் | - 63 |
| வாந்தி, விக்கலுக்கு ஏலாதிச் சூரணம் | - 64 |
| விக்கலுக்கு மருந்துகள் | - 64 |
| விக்கல், ஒக்காளத்திற்கு மருந்துகள் | - 65 |
| உடம்பு மெலிய மருந்து | - 65 |
| விக்கல், ஒக்காளத்திற்கு | - 65 |

விக்கலுக்கு - 65

சோர அஞ்சனம் - 66

விக்கலுக்கு மருந்து - 66

இதுவுமது - 66

விக்கலுக்கு நாகராதிச் சூரணம் - 67

விக்கலுக்கு - 67

விக்கலுக்கும் வாந்திக்கும் கஷாயம் - 67

வேறு கஷாயம் - 68

விக்கலுக்கு நசியம் - 68

விக்கல், சத்திக்கு - 68

இதுவுமது - 68

விக்கலுக்கு மருந்து - 69

விக்கலுக்குச் சூரணம் - 69

உளமாந்தை, ரக்தபித்தத்திற்கு ஆடாதோடை நெய் - 69

வேறு - 70

பித்தம், ரத்தபித்தம், சகல பித்தத்திற்கும் - 70

இரக்த பித்தத்தில் எடுத்த ஔடதம் - 71

கீழ்நோக்கின இரத்தபித்தத்திற்கு எடுத்த அவுடதம் - 71

இரத்த பித்தத்திற்கு - 71

இரத்த பயித்தியத்திற்கு, எலும்புருக்கிக்கு கிருதம் - 72

சதாவரி கிருதம் - 72

இரத்தபித்தம், உட்சுரம், சருமபயித்தியம்
இவைதீர லேகியம் - 73

மூலிகைப் பிரயோகம் - 73

இரத்த பித்தத்திற்குக் கஷாயம் - 73

இரத்தபித்தத்திற்குச் சுரசம் - 73

இதுவுமது - 74

இரத்தபித்தம், பெரும்பாடு, சிகதாமேகம்
முதலியவைகளுக்குக் கஷாயம் - 74

இரத்தபித்தத்திற்கு ஆடாதோடை நெய் - 74

இரத்தபித்தத்திற்கு - 75

இரத்தபித்தத்திற்கு வேறு மருந்துகள் - 75

மூலிகைப் பிரயோகம் - 77

பித்தம் எடுக்க மருந்து - 77

இரத்தபித்தத்திற்கு - 77

இரத்தபித்தத்திற்கு எண்ணெய் - 78

இரத்தபித்தம் பெரும்பாட்டுக்கு - 78

அரோசிகத்திற்கு - 78

அரோசிகத்திற்குக் கெண்டூஷம் - 79

வேர்வைக்கு - 79

பித்த விகாரத்திற்கும், சரீர புஷ்டிக்கும் கூஷ்மாண்ட கிருதம் - 80

வாதபித்தமுள்ளிட்ட வியாதிகளுக்கு - 80

வாதபித்தத்திற்கு - 81

சுரம், வாந்தி, விக்கல், அரோசிகம், இருமல், இளைப்பு இவைகளுக்கு மஹாவில்வாதிக் கஷாயம் - 81

ஆந்திரசூலை, உட்காய்ச்சல், பித்தத்திற்கு தேத்தான்கொட்டை நெய் - 82

அறிவுமயல்தீர - 82

பிரகடம் பேசுவது தீர - 82

மருட்கொண்ட பித்தத்திற்குத் தைலம் - 83

பயித்தியம் பிடித்தவனுக்குக் கஷாயம் - 83

பயித்தியம் பிடித்தவனுக்குச் சுரசம் - 83

சாராயக்குடி வெறுக்க - 84

மூர்ச்சை சோஷைக்குக் கஷாயம் - 84

மதமூர்ச்சைக்குத் திராட்சாதி கஷாயம் - 84

வேறு கஷாயம் - 84

குத்துக்காயம், வெட்டுக்காயத்திற்கு - 85

பிப்பல்யாதி லேகியம் - 85

பித்த முதலானதற்கும், வாதத்திற்கும் எண்ணெய் - 86

மயக்கத்திற்கு நெய் - 86

கைகாலெரிவு, உடம்பெரிவு, பயித்தியம் அஸ்தியில்
உஷ்ணம் முதலியவை தீர சந்தனாதிச் சூரணம் - 87
பத்துவகை பயித்தியம், உந்மாதம், கைகால்,
உடம்பெரிவுக்கு ஏலாதிச் சூரணம் - 87
வாய்நீர் கோளுதிர்தற்கு மருந்து - 88
சீதபித்தத்தின் குணம் - 88
சீதபித்தம் அல்லது பேய்ச்சொறிக்குக் குடிநீர் - 88
வேறு - 88
உவாந்தித் திரவியம் - 89
வாந்திக்கு ஏற்ற அவுடதங்களான - 89
பேதித்திரவியங்கள் - 89
உடம்பெரிவுக்குச் சுரசம் - 89
சீதபித்தத்திற்கு சீந்தில் நெய் - 90
பித்தமாய் வாய் கசந்திருப்பதற்கும், கிறுகிறுப்பிற்கும்
மருந்து, கஷாயம் - 90
விக்கல், சத்திக்கு ஏலாதிச் சூரணம் - 90
வாந்தி, விக்கல், வாய் நீரூறலுக்கு - 90
காமாலைக்கு எண்ணெய் - 91
வறட்சி, எலும்புருக்கி, பிரமேகத்திற்கு பூசணி நெய் - 91
விக்கல், சத்திக்கு நெய் - 92
சகல உஷ்ணத்திற்கும் ஏலாதிச்சூரணம் இதற்கு
(சஞ்சீவிச் சூரணம்) என்றும் பெயர் - 92
பல பித்தத்திற்கு வேறு ஏலாதிச் சூரணம் - 93
அம்லபித்தம், தலைகிறுகிறுப்புக்கு ஏலாதிச்சூரணம் - 93
பழவெதுப்புக்கு சிருங்காதிச் சூரணம் - 94
அக்கினி மாந்தியம், அரோசிகத்திற்குப்
பஞ்சகோலாதிச் சூரணம் - 95
பயித்திய வாய்வு, பழஞ்சுரம், அக்கினிமாந்தியம்
முதலியவைகளுக்கு மகாதாளிசைச் சூரணம் - 95
சுகவிரோசனத்திற்கு அவிபத்தி சூரணம் - 96
அக்கினிமாந்தியத்திற்கு அஷ்டாதிச்சூரணம் - 96

இரத்தபித்தம், அம்லபித்தத்திற்கு கற்பூராதி ரஸாயனம் - 97

அரோசிகம், மேக உஷ்ணம், தாது விருத்திக்கு மதுஸ்நுகி ரஸாயனம் - 98

உஷ்ணம், மேகசுரம், பயித்தியத்திற்கு அச்வகெந்தி ரஸாயனம் - 99

பித்தவாயுவுக்கு கண்டாமலக லேகியம் - 100

எரிவு, மயக்கம், பயித்தியத்திற்கு வில்வாதி லேகியம் - 100

பயித்தியம், மேகம் இவைகளுக்கு கற்சூராதி லேகியம் - 101

இருமல், அக்கினிமாந்தியம், பழஞ்சும் இவைகளுக்கு அச்வகெந்தாதி லேகியம் - 102

பாண்டு, சோகை, காமாலை இவைகளுக்கு அஷ்டசிந்தாதி லேகியம் - 102

பாண்டுவிற்கு சிஞ்சாதி லேகியம் - 103

பித்தம், விக்கலுக்கு நிம்பாதி லேகியம் - 104

உஷ்ணவாயு, பயித்திய வாயுவுக்கு சரபங்க வில்வாதி லேகியம் - 104

வாதசிலேத்துமங்களுக்கும், அக்கினிமாந்தியத்திற்கும் தாளிசை வடகம் - 105

பாண்டு வீக்கத்திற்குத் தேங்காய் மாத்திரை - 106

பித்தபாண்டு, விஷபாகத்திற்கு மாத்திரை - 106

சகல வாய்விற்கும், தீபனத்திற்கும் இங்குவாஷ்டகம் - 107

அரோசிக மாத்திரை - 107

விரோசனத்திற்கு உருண்டை - 107

தீபனத்திற்குப் பற்பம் - 108

அக்கினிமாந்தியத்திற்கு சுயமக்கினி - 108

காமாலை, சோகை, பாண்டு சகல வியாதிகளுக்கும் செம்பீரக்கடுகு - 108

கால்கையெரிவுக்குப் பூச்சு - 109

மூலிகை அகராதி - 111

## வியாதிகளுக்குற்ற மருந்துகளின் அட்டவணை

| | |
|---|---|
| *அக்கினிமாந்தியம்* | - அசுவகெந்தாதி லேகியம் |
| | அச்வகெந்தாதி ரஸாயனம் |
| | அச்வகெந்தி ரஸாயனம் |
| | அஷ்டாதிச் சூரணம் |
| | கற்சூராதி ரஸாயனம் |
| | சுயமக்கினி |
| | பஞ்சகோலாதிச் சூரணம் |
| | மஹாதாளிசைச் சூரணம் |
| | வில்வாதி லேகியம் |
| *அங்கதாகம்* | - அயிலேய லேகியம் |
| | கற்சூராதி லேகியம் |
| *அசீரணம்* | - கற்சூராதி ரஸாயனம் |
| | மகாதாளிசைச் சூரணம் |
| | வில்வாதி லேகியம் |
| *அசுரவிரணம்* | - மகாதாளிசைச் சூரணம் |
| *அதிசாரம்* | - அயிலேய லேகியம் |
| | மகாதாளிசைச் சூரணம் |
| | வில்வாதி லேகியம் |
| *அபஸ்மாரம்* | - காகநிம்பாதி கிருதம் |
| | வில்வக்குழம்பு |
| *அம்லபித்தம்* | - ஏலாதிச் சூரணம் |
| *அரோசகம்* | - அரோசிக மாத்திரை |
| | கற்சூராதி ரஸாயனம் |
| | கற்சூராதி லேகியம் |
| | சிருங்காதிச் சூரணம் |
| | திராட்சாதிச் சூரணம் |
| | நிம்பாதி லேகியம் |
| | பஞ்சகோலாதிச் சூரணம் |
| | பிப்பல்யாதி லேகியம் |

மகாஏலாதிச் சூரணம்
மகாதாளிசைச் சூரணம்
மதுஸ்நுகி ரஸாயனம்
மஹாவில்வாதிக் கஷாயம்
வில்வாதி லேகியம்.

*அலரும்பித்தம்* - ஏலாதிச் சூரணம்

*அனல்பைத்தியம்* - கற்சூராதி ரஸாயனம்

*அன்னத்துவேஷம்* - மகாதாளிசைச் சூரணம்
வில்வாதி லேகியம்

*அஸ்தி உஷ்ணம்* - சந்தனாதி சூரணம்

*அஸ்தி சுரம்* - அச்வகெந்தி ரஸாயனம்
சிருங்காதிச் சூரணம்
வில்வாதி லேகியம்

*ஆகிரண பைத்தியம்* - கற்சூராதி லேகியம்

*ஆத்மானம்* - மகாதாளிசைச் சூரணம்

*ஆந்திரசூக்ஷி* - தேத்தான்கொட்டை நெய்

*ஆம்பல் பயித்தியம்* - ஏலாதிச் சூரணம்

*அம்பல் பித்தம்* - கற்சூராதிச் சூரணம்

*ஆவ்ருத பித்தம்* - அயிலாதிச் சூரணம்

*இருமல்* - அசுவகெந்தாதி லேகியம்
அஷ்டசிந்தாதி லேகியம்
தாளிசை வடகம்
மஹாவில்வாதிக் கஷாயம்
வில்வாதி லேகியம்

*இளைப்பு* - மஹாவில்வாதிக் கஷாயம்

*ஈரல் நோய்* - வில்வக் குழம்பு

*ஈளை* - மகாதாளிசைச் சூரணம்

| | | |
|---|---|---|
| உடம்பு உணர்ந்து போதல் | - | சிருங்காதிச் சூரணம் |
| உடம்பெரிவு | - | ஏலாதிச் சூரணம்<br>சதாவரி கிருதம்<br>சந்தனாதிச் சூரணம்<br>பூசணி நெய் |
| உட்காய்ச்சல் | - | அசுவகெந்தி லேகியம்<br>தேத்தான்கொட்டை நெய்<br>வில்வாதி லேகியம் |
| உப்பிசம் | - | தாளிசை வடகம்<br>பஞ்சகோலாதிச் சூரணம் |
| உதிரசூலை | - | வில்வாதி லேகியம் |
| உத்காரம் | - | கற்சூராதி ரஸாயனம்<br>மகாதாளிசைச் சூரணம் |
| உந்மாதம் | - | ஏலாதிச் சூரணம்<br>காகநிம்பாதி கிருதம்<br>திரிகடு திரிபலாச சூர்ணம் |
| உழலை | - | பிப்பல்யாதி லேகியம் |
| உளமாந்தை | - | ஆடாதோடை நெய்<br>கற்சூராதி ரஸாயனம் |
| உஷ்ணம் | - | அச்வகெந்தி ரஸாயனம்<br>சஞ்சீவிச் சூரணம் |
| உஷ்ணவாயு | - | சரபங்கவில்வாதி லேகியம் |
| எரிகுல்மம் | - | ஏலாதிச் சூரணம் |
| எரிவு | - | வில்வாதி லேகியம் |
| எலும்புருக்கி | - | பூசணி நெய் |
| ஒக்காளம் | - | காற்பாசச் சூரணம் |
| கண்டதோஷம் | - | மகாதாளிசைச் சூரணம் |

| | |
|---|---|
| ***கண்ணெரிவு*** | - கற்சூராதி லேகியம் |
| ***கண்தோஷங்கள்*** | - இளநீர் குழம்பு |
| ***காக்கைவலிம்*** | - காகநிம்பாதி கிருதம். |
| ***காசம்*** | - வில்வாதி லேகியம். |
| ***காது வலி*** | - பூசணி நெய் |
| ***காந்தி*** | - கூஷ்பாண்ட கிருதம் |
| ***காமாலை*** | - அயிலேய லேகியம்<br>அஷ்டிசிந்தாதி லேகியம்<br>செம்பீரக்கடுகு<br>திராட்சாதிச் சூரணம்<br>மகாஏலாதிச் சூரணம் |
| ***கிராணி*** | - தாளிசை வடகம்<br>வில்வாதி லேகியம் |
| ***கிறுகிறுப்பு*** | - ஏலாதிச் சூரணம் |
| ***குல்மம்*** | - தாளிசை வடகம்<br>வில்வக் குழம்பு<br>வில்வாதி லேகியம் |
| ***குடல் எரிவு*** | - பூசணி நெய்<br>வில்வாதி லேகியம் |
| ***குடல் வாதம்*** | - அஷ்டசிந்தாதி லேகியம்<br>செம்பீரக்கடுகு |
| ***கைகாலெரிவு*** | - இளநீர் குழம்பு<br>ஏலாதிச் சூரணம்<br>கற்சூராதி லேகியம்<br>சந்தனாதிச் சூரணம்<br>பூசணி நெய்<br>வில்வாதி லேகியம் |
| ***சரீரபுஷ்டி*** | - கூஷ்பாண்ட கிருதம் |

| | | |
|---|---|---|
| *சர்வமேகம்* | - | கற்சூராதி லேகியம் |
| *சர்வாங்க வாதம்* | - | அஷ்டாதிச் சூரணம்<br>மகாதாளிசைச் சூரணம். |
| *சளி* | - | தாளிசை வடகம் |
| *சிரோதாகம்* | - | கற்சூராதி லேகியம் |
| *சிரோபிரமை* | - | கற்சூராதி லேகியம்<br>மகாதாளிசைச் சூரணம் |
| *சிலேஷ்மம்* | - | மகாதாளிசைச் சூரணம்<br>வில்வாதி லேகியம் |
| *சிறுசிறங்கு* | - | பூசணி நெய் |
| *சீதசுரம்* | - | மகாதாளிசைச் சூரணம்<br>வில்வாதிக் கஷாயம் |
| *சுகவிரேசனம்* | - | அவிபத்திச் சூரணம் |
| *சுவாசகாசம்* | - | அஷ்டசிந்தாதி லேகியம்<br>கூஷ்பாண்ட கிருதம்<br>மகாதாளிசைச் சூரணம்<br>வாசாதி கிருதம் |
| *சுவாசம்* | - | வில்வாதி லேகியம் |
| *சுரத்தில் பிறந்த பாண்டு* | - | தாளிசை வடகம் |
| *சுரம்* | - | மகாஏலாதிச் சூரணம்<br>மஹாவில்வாதிக் கஷாயம்<br>வில்வாதி லேகியம் |
| *சூலம்* | - | மகாதாளிசைச் சூரணம் |
| *சூலை* | - | கற்சூராதி ரஸாயனம்<br>திரிகடு திரிபலாச சூர்ணம்<br>பஞ்சகோலாதிச் சூரணம் |
| *சூலையெரிவு* | - | வில்வாதி லேகியம் |

| | |
|---|---|
| சோகை | - அஷ்டசிந்தாதி லேகியம்<br>செம்பீரக்கடுகு<br>மகாதாளிசைச் சூரணம் |
| தலைசுற்றல் | - அயிலேய லேகியம்<br>ஏலாதிச் சூரணம்<br>சதாவரி கிருதம் |
| தாகம் | - கற்சூராதி ரஸாயனம்<br>சதாவரி கிருதம்<br>திராட்சாதிச் சூரணம்<br>மகாஏலாதிச் சூரணம்<br>வில்வக் குழம்பு |
| தாது நஷ்டம் | - அயிலேய லேகியம்<br>மகாதாளிசைச் சூரணம்<br>பூசணி நெய்<br>மதுஸ்நுகி ரஸாயனம் |
| திமிரம் | - திரிகடு திரிபலாச சூரணம் |
| தியக்கம் | - வில்வாதி லேகியம் |
| தீபனம் | - இங்குவாஷ்டகம் |
| துர்கந்த பித்தமம் | - கற்சூராதி ரஸாயனம் |
| தேக இளைப்பு | - மகாதாளிசைச் சூரணம் |
| தேககாங்கை | - நெல்லிக்காய் எண்ணெய் |
| தொடர்பித்தம் | - கற்சூராதி ரஸாயனம் |
| நஷ்டவீரியம் | - சதாவரி கிருதம் |
| நாவறட்சி | - தாளிசை வடகம் |
| நானாவித சுரம் | - கற்சூராதி ரஸாயனம்<br>மகாதாளிசைச் சூரணம் |
| நீர்க்கடுப்பு | - அயிலேய லேகியம் |

| | | |
|---|---|---|
| *நீராம்பல்* | - | அஷ்டசிந்தாதி லேகியம் |
| | | செம்பீரக்கடுகு |
| *நெஞ்சுக்கடுப்பு* | - | பிப்பல்யாதி லேகியம் |
| *பயித்தியம்* | - | அயிலேய லேகியம் |
| | | இளநீர் எண்ணெய் |
| | | ஏலாதிச் சூரணம் |
| | | கூஷ்பாண்ட கிருதம் |
| | | சந்தனாதிச் சூரணம் |
| | | ஸ்ரீதேவி செங்கழுநீர் எண்ணெய் |
| | | நெல்லிக்காய் எண்ணெய் |
| | | வில்வாதி லேகியம் |
| *பயித்திய வாய்வு* | - | மகாதாளிசைச் சூரணம் |
| *பலம் புஷ்டி* | - | ஏலாதிச்சூரணம் |
| *பழம் சுரம்* | - | சதாவரி கிருதம் |
| | | மகாதாளிசைச் சூரணம் |
| *பழவெதுப்பு* | - | ஏலாதிச் சூரணம் |
| | | சிருங்காதிச் சூரணம் |
| *பாண்டு* | - | அஷ்டசிந்தாதி லேகியம் |
| | | கூஷ்பாண்ட கிருதம் |
| | | சிஞ்சாதி லேகியம் |
| | | செம்பீரக்கடுகு |
| | | தாளிசை வடகம் |
| | | திராட்சாதிச் சூரணம் |
| | | தேங்காய் மாத்திரை |
| | | மகாஏலாதிச் சூரணம் |
| | | மகாதாளிசைச் சூரணம் |
| | | வில்வாதி லேகியம் |
| *பிடகம்* | - | கற்சூராதி ரஸாயனம் |
| *பித்தரோகம்* | - | அசுவகந்தி ரஸாயனம் |
| | | அயிலாதி லேகியம் |
| | | அயிலேய லேகியம் |

| | | |
|---|---|---|
| | | ஏலாதிச் சூரணம் |
| | | கூஷ்பாண்ட கிருதம் |
| | | சதாவேரித் தைலம் |
| | | சதாவரி நெய் |
| | | திராட்சாதிச் சூரணம் |
| | | திரிகடு திரிபலாச சூரணம் |
| | | தேத்தான்கொட்டை நெய் |
| | | நிம்பாதி லேகியம் |
| | | பூசணி நெய் |
| | | மகாதாளிசைச் சூரணம் |
| | | மஹாவில்வாதி லேகியம் |
| | | முசுமுசுக்கை லேகியம் |
| | | லகுகண்டாமலக லேகியம் |
| | | வில்வக் குழம்பு |
| | | வில்வாதி லேகியம் |
| *பித்த எரிவு* | - | அயிலாதிச் சூரணம் |
| | | பிருங்காமலகம் |
| *பித்தத்திலுண்டான தலைவலி* | - | சதாவரி கிருதம் |
| *பித்த பாண்டு* | - | ஏலாதிச்சூரணம் |
| *பித்தவாணம்* | - | அயிலேபகத் தைலம் |
| *பித்த வாயு* | - | கண்டாமலக லேகியம் |
| *பிரமேகம்* | - | சந்தனாதிச் சூரணம் |
| | | பூசணி நெய் |
| *பிரமை* | - | அயிலேய லேகியம் |
| *பீனிசம்* | - | ஏலாதிச் சூரணம் |
| | | தாளிசை வடகம் |
| *பெருவயிறு* | - | அஷ்டசிந்தாதி லேகியம் |
| *பைத்தியம்* | - | சரபங்கவில்வாதி லேகியம் |
| *மகோதரம்* | - | அஷ்டசிந்தாதி லேகியம் |

| | | |
|---|---|---|
| | | செம்பீரக்கடுகு<br>திராட்சாதிச் சூரணம்<br>வில்வாதி லேகியம் |
| *மதமூர்ச்சை* | - | திராட்சாதிக் கஷாயம் |
| *மதிப்பிரமை* | - | காகநிம்பாதி கிருதம் |
| *மயக்கம்* | - | வில்வாதி லேகியம் |
| *மரண வேதனை* | - | மகாதாளிசைச் சூரணம் |
| *மருந்தீடு* | - | வில்வாதி லேகியம் |
| *மனப்பயித்தியம்* | - | கற்சூராதி ரஸாயனம் |
| *மார்நோவு* | - | ஏலாதிச் சூரணம்<br>தாளிசை வடகம்<br>வில்வாதி லேகியம் |
| *முழங்கால் வலி* | - | மகாதாளிசைச் சூரணம் |
| *மூக்கு நீர்ப்பாய்ச்சல்* | - | ஏலாதிச்சூரணம் |
| *மூத்திர கிருச்சிரம்* | - | கற்சூராதி லேகியம்<br>கூஷ்பாண்ட கிருதம்<br>சதாவரி கிருதம் |
| *மூர்ச்சை* | - | அயிலேய லேகியம்<br>கற்சூராதி ரஸாயனம்<br>பிப்பல்யாதி லேகியம்<br>மகாதாளிசைச் சூரணம் |
| *மேக உஷ்ணம்* | - | மதுஸ்நுகி ரஸாயனம் |
| *மேகசுரம்* | - | அச்வகெந்தி ரஸாயனம் |
| *மேகம்* | - | கூஷ்பாண்ட கிருதம்<br>திராட்சாதிச் சூரணம்<br>மகாஏலாதிச் சூரணம் |
| *மேகசுவாசம்* | - | வில்வாதி லேகியம் |
| *யோனிசூலை* | - | சதாவரி கிருதம் |

| | | |
|---|---|---|
| *யோனி எரிவு* | - | சதாவரி கிருதம் |
| *ரக்தபித்தம்* | - | அச்வகெந்தி ரஸாயனம் |
| | | ஆடாதோடை நெய் |
| | | ஏலாதிச் சூரணம் |
| | | கற்சூராதிச் சூரணம் |
| | | சதாவரி கிருதம் |
| | | திராட்சாதிச் சூரணம் |
| | | மகாஏலாதிச் சூரணம் |
| | | வாசாதி கிருதம் |
| *ரக்தரோகம்* | - | பூசணி நெய் |
| | | வில்வாதி லேகியம் |
| *ரக்தக்ஷயம்* | - | திராட்சாதிச் சூரணம் |
| | | மகாஏலாதிச் சூரணம் |
| *ருதுசூலை* | - | மகாதாளிசைச் சூரணம் |
| *வயிற்றெரிவு* | - | ஏலாதிச் சூரணம் |
| *வறட்சி* | - | பூசணி நெய் |
| *வாதசிலேஷ்மம்* | - | தாளிசை வடகம் |
| *வாதம்* | - | மகாதாளிசைச் சூரணம் |
| | | வில்வாதி லேகியம் |
| *வாந்தி* | - | அயிலாதிச் சூரணம் |
| | | ஏலாதிச் சூரணம் |
| | | கண்டாத்திரக லேகியம் |
| | | சதாவரி கிருதம் |
| | | பிப்பல்யாதி லேகியம் |
| | | மகாவில்வாதிக் கஷாயம் |
| | | வில்வாதி லேகியம் |
| *வாயுகுன்மம்* | - | செம்பீரக் கடுகு |
| *வாய்வில் பிறந்த மூலம்* | - | தாளிசை வடகம் |
| *வாய் நீருறல்* | - | வில்வக் குழம்பு |
| | | வில்வாதி லேகியம் |

| | | |
|---|---|---|
| *விகரம்* | - | அயிலேய லேகியம் |
| *விக்கல்* | - | ஏலாதிச் சூரணம்<br>நாகராதிச் சூரணம்<br>நிம்பாதி லேகியம்<br>மகாதாளிசைச் சூரணம்<br>மகாவில்வாதிக் கஷாயம்<br>வில்வக் குழம்பு<br>வில்வாதி லேகியம் |
| *விலாபுறத்துவலி* | - | மகாதாளிசைச் சூரணம் |
| *வீரிய விருத்திக்கு* | - | ஏலாதிச் சூரணம் |
| *வீக்கம்* | - | ஏலாதிச் சூரணம்<br>நாகராதிச் சூரணம்<br>நிம்பாதி லேகியம்<br>மகாதாளிசைச் சூரணம்<br>மகாவில்வாதிக் கஷாயம்<br>வில்வக்குழம்பு<br>வில்வாதி லேகியம் |
| *விலாபுறத்து வலி* | - | மகாதாளிசைச் சூரம் |
| *வீரிய விருத்திக்கு* | - | ஏலாதிச் சூரணம் |
| *வீக்கம்* | - | தேங்காய் மாத்திரை<br>வில்வாதி லேகியம் |
| *வெள்ளோக்காளம்* | - | வில்வாதி லேகியம் |
| *க்ஷயம்* | - | கற்சூராதி ரஸாயனம்<br>திராட்சாதிச் சூரணம்<br>திரிகடு திரிபலாச சூர்ணம்<br>மகாஏலாதிச் சூரணம்<br>வாசாதி கிருதம்<br>வில்வாதி லேகியம். |

# மருந்துகளின் அட்டவணை


| | |
|---|---|
| அச்வகெந்தாதி லேகியம் | 102 |
| அச்வகெந்தாதி ரஸாயனம் | 3 |
| அச்வகெந்தி ரஸாயனம் | 99 |
| அயிலாதிச் சூரணம் | 31 |
| அயிலாதி லேகியம் | 16 |
| அயிலேபகத் தைலம் | 15 |
| அயிலேய லேகியம் | 1 |
| அரோசிக மாத்திரை | 107 |
| அவிபத்தி சூரணம் | 96 |
| அஷ்டசிந்தாதி லேகியம் | 102 |
| அஷ்டாதிச் சூரணம் | 96 |
| ஆடாதோடை நெய் | 69, 74 |
| இங்குவாஷ்டகம் | 107 |
| இளநீர் எண்ணெய் | 46 |
| இளநீர்க் குழம்பு | 16 |
| ஏலாதிச் சூரணம் | 8, 50, 64, 87, 93 |
| ஏலாதி மாத்திரை | 11 |
| கண்டாத்திரக லேகியம் | 51 |
| கண்டாமலக லேகியம் | 100 |
| கற்சூராதி ரஸாயனம் | 97 |
| கற்சூராதி லேகியம் | 101 |
| காகநிம்பாதி கிருதம் | 35 |
| காற்பாசச் சூரணம் | 58, 61 |
| கூஷ்பாண்ட கிருதம் | 80 |
| சஞ்சீவிச் சூரணம் | 92 |
| சதாவரி கிருதம் | 12,14 |
| சதாவரி நெய் | 11 |
| சதாவேரித் தைலம் | 5 |
| சந்தனாதிச் சூரணம் | 87 |

| | |
|---|---|
| சரபங்கவில்வாதி லேகியம் | *104* |
| சிஞ்சாதி லேகியம் | *103* |
| சிருங்காதிச் சூரணம் | *94* |
| சீதேவி செங்கழுநீர் எண்ணெய் | *45* |
| சீந்தில் நெய் | *90* |
| சுயமக்கினி | *108* |
| செம்பீரக்கடுகு | *108* |
| தாளிசை வடகம் | *105* |
| திராட்சாதிச் சூரணம் | *21* |
| திரிகிடு திருபலாச சூரணம் | *13* |
| தேங்காய் மாத்திரை | *106* |
| தேத்தான்கொட்டை நெய் | *82* |
| நாகராதிச் சூரணம் | *67* |
| நிம்பாதி லேகியம் | *104* |
| நெல்லிக்காய் எண்ணெய் | *2, 46* |
| பஞ்சகோலாதிச் சூரணம் | *95* |
| பிருங்காமலகம் | *18* |
| பூசணி நெய் | *91* |
| மகாஏலாதிச் சூரணம் | *20* |
| மகாதாளிசைச் சூரணம் | *95* |
| மதுஸ்நுகி ரஸாயனம் | *98* |
| மஹாவிவாதிக் கஷாயம் | *81* |
| மஹாவில்வாதி லேகியம் | *33* |
| முசுமுசுக்கை லேகியம் | *4* |
| லகுகண்டாமலக லேகியம் | *17* |
| வாசாதி லேகியம் | *62* |
| வில்வக் குழம்பு | *4, 5* |
| வில்வாதி கஷாயம் | *2* |
| வில்வாதி லேகியம் | *6, 12, 43, 50, 52, 57, 100* |

# முகவுரை

***"பித்தரோக சிகித்ஸை"*** என்பது இந்நூலின் பெயர். பித்தத்தினால் உண்டாகும் பல்வேறு ரோகங்களிலும் பயன்பெறக் கொடுக்கக்கூடிய மருந்துகள் இங்கு விளக்கப் பட்டுள்ளன என்பது இத்தலைப்பின் பொருள்.

இங்கு குறிப்பிட்ட ரோகங்களோ அல்லது வேறு எந்த நோயாயினும் சரி, இதர தோஷங்களான வாதம், கபம் இவற்றின் சம்பந்தமே இல்லாமல் தனித்த பித்தத்தினால் மட்டும் உண்டாகமுடியுமா? என்ற கேள்வி எழுகிறது.

இரண்டாவதாக, அவ்வாறு உண்டாகும் வியாதி சரீரத்தை மட்டும் சம்பந்தித்ததாக இருக்குமா? அல்லது மனதை மட்டும் சம்பந்தித்த மானஸிக ரோகமாக இருக்குமா? அல்லது இரண்டையுமே சம்பந்தித்த ரோகங்கள் உண்டாக நேருமா? என்ற கேள்வியும் எழுகிறது.

அவ்வளவில் சரீரம் என்பது என்ன? மனம் என்பது என்ன? இவ்விரண்டிற்கும் உள்ள சம்பந்தம் என்ன? சரீரத்தை மட்டும் பாதிக்கும் ரோகங்கள் என்றும், மனதை மட்டும் பாதிக்கும் ரோகங்கள் என்றும், தனித்தனியாக ரோகங்களைப் பிரிக்கமுடியுமா என்ற கேள்வியும் எழுகிறது.

நான்காவதாக ரோகத்திற்குள்ள காரணங்களைச் சீர்தூக்கிப் பார்க்குங்கால் குறிப்பிட்ட காரணங்கள் சாரீரிக ரோகத்தை மட்டுமோ அல்லது மானஸிக ரோகத்தை மட்டுமோ உண்டாக்கும் என்ற நியாயம் உண்டா?

அடுத்துபடியாக ரோகம் என்பதுதான் என்ன? ஆரோக்யம் என்பது என்ன? ரோகி என்பவனின் இலக்கணம் என்ன? அரோகி என்பவனின் இலக்கணங்கள் என்ன? என்ற இவ்வாறான கேள்விகளும் இடைச்சொருகலாக எழுகின்றன.

இக்கேள்விகளுக்கு முறையே விடைகளைக் காண்போம் :-

நைக தோஷ: ததோ ரோக: என்றபடி ஏகதோஷஜமான ரோகமே கிடையாது என்பது நமது சாஸ்திரங்கள் தெளிவிக்கும் முடிவாகும். அதிலும்,

பித்த: பங்கு: கப: பங்கு: பங்கவோ மல தாதவ: I
வாயுனா யத்ர நீயந்தே தத்ர கச்சந்தி மேகவத் II

இ-ள் : பித்தம் என்னும் தோஷம் ஒரு நொண்டிக்குச் சமானம், கபம் என்ற தோஷமும், மலமும், சிறுநீர், வியர்வை முதலிய கழிவுப்பொருள்களும், ரஸாதி தாதுக்களும் அவ்விதமே நொண்டிகள்தான். (வானத்திலுள்ள) மேகங்கள் காற்றினால் உந்திக் கடத்தப்படுவதுபோல் நொண்டியாகிய பித்தகபங்களும், தாதுக்களும், மலங்களும் வாதம் என்ற தோஷத்தால் சரீரத்தின் வெவ்வேறு பாகங்களுக்கு ஈர்த்தும், உந்தியும் செல்லப்பட்டு, ரோகத்தை உண்டாக்கக் காரணமாகின்றன. ஆகவே, விகாரமடைந்த பித்தத்தினால் மட்டும் ரோகம் உண்டாகும் என்ற சித்தாந்தம் கொள்கை அளவில் ஏற்கத்தக்கதல்ல.

அவ்வாறாயின் **பித்தரோக சிகித்ஸை** என்ற தலைப்பின் பொருளையும், பொருத்தத்தையும் என்னவென்று தெளிவது? குறிப்பிட்ட ரோகத்தில் சம்பந்தப்பட்ட தோஷ, தாது, மலங்களின் இயற்கைக்கு வேறுபட்ட நிலையை சீர்தூக்கிப் பார்க்குங்கால், பித்தத்தின் சீர்கேடு மற்றுள்ளவை களின் சீர்க்கேட்டைவிட மிகவும் மீசுரமுற்று இருப்பதை தெளிவிக்கும் லக்ஷணங்களைக் கருத்தில் ஏற்றும், அந்நிலையை உடனடியாக சரிகட்டவேண்டிய சிகிச்சைகளை உடனடியாகச் செய்யவேண்டியது முதல் கருமமாகும் என்பதையும் எண்ணி அதைப் பித்தரோகம் என்று அழைத்திட நேர்ந்தது என்றுதான் தெளியவேண்டும்.

இதனால் வாதம், கபம், மலங்கள், தாதுக்கள் இவற்றின் தொடர்பு இல்லவே இல்லை என்று சொல்லமுடியாது. இவற்றுள் சில துணைக்காரணமாகவு இருக்கும்.

ஒன்றிரண்டு உதாரணங்களை இதற்கு விளக்கமாக இங்கு விசாரிப்போம். சுரம் என்பது எவ்விதமான ரோகம் என்று எல்லோருக்கும் தெரிந்ததே. தொட்டால் உடம்பில் உஷ்ணம் ஏற்படுகிறது என்பது இதன்பொதுவான லக்ஷணமும் சிறப்பான லக்ஷணமுமாகும். தொட்டால் சுடுதல் என்பது அக்னியின் குணம். பித்தமோ அக்னியின் மறுதோற்றம். ஆகவே,

***ஊஷ்மா பித்தாத்ருதே நாஸ்தி***
***ஜ்வரே நாஸ்தி ஊஷ்மணா வினா***

தொட்டால் சூடுள்ள நிலை என்னும் லக்ஷணமில்லாத ஜ்வரமே கிடையாது. இந்த சூடோ பித்தத்தினால் அல்லாது ஏற்பட நியாயமில்லை. ஆகவே எந்தச் சுரமானாலும் சரி பித்தத்தினாலல்லாது உண்டாகாது என்பது ஏற்படுகிறது. ஆயினும் ஜ்வரத்தில் தொட்டால் சுடும் நிலை என்ற ஒரே லக்ஷணம் மட்டுமா இருக்கிறது? வேறு லக்ஷணங்களும் ஏற்படுகின்றன அல்லவா? உடலெல்லாம் வலி, சளி, இருமல், மூக்கடைப்பு, தலைவலி, வயிற்றுப்பொருமல், மல மூத்திர பந்தம், வியர்வையில்லாமை என்றிவ்வாறுள்ள பற்பல லக்ஷணங்களும் ஜ்வரத்தில் ஏற்படுவதைக் காண்கிறோம். இக்குறிகள் சுரத்துக்குக் காரணமான பித்தத்துடன் துணைக் காரணங்களாய் நிற்கும் வாதம், கபம், மலங்கள், தாதுக்கள் முதலியவற்றை அனுசரித்து ஏற்படுகின்றன. சில நேரங்களில் சிகிச்சையின் சௌகர்யத்ததை உத்தேசித்து இத்துணைக் காரணங்களையே முதலில் சரிகட்டவேண்டும் என்ற நிலைமை ஏற்படும். அதை ஒட்டித்தான் ஜ்வரத்தில் பாகுபாடுகளும், பெயரில் மாற்றங்களும் ஏற்படலாயின. ஆகவே, ஜ்வரத்தை ***வாதஜ்வரம், பித்தஜ்வரம், கபஜ்வரம், சந்நிபாத ஜ்வரம்*** என்று இவ்வாறு பிரித்துப் பெயருமிட்டு சாஸ்திரங்கள் தெரிவிக்கின்றன. வாத ஜ்வரம் என்ற விடத்து ***ஜ்வரம்*** என்ற பதத்தினாலேயே பித்தத்தின் கோளாறு அங்கிருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்தி, துணைக்காரணமாக நிற்பது வாதம் என்றும், கோளாறுற்ற நிலையில் அத்துணைக்

காரணமான வாதத்தின் லக்ஷணங்கள் மீசுரமுற்று நிற்கின்றன என்பதையும் அல்லது அத்துணைக் காரணத்தைச் சரிக்கட்டுவதே சிகிச்சையில் முதல் செயலாகும் என்பதையும் தெரிவிக்கவும் வேண்டிதான் **வாதம்** என்ற சொல்லையும் சேர்த்து **வாதஜ்வரம்** என்று பெயர் வழங்கப்பட்டது. ஆகவே ஜ்வரத்திற்கு பொதுச் சிகிச்சையைச் சொல்லும்பொழுது

***தஸ்மாத் பித்தவிருத்தானி த்யஜேத்***
***பித்தாதிகே அதிகம்***

என்ற ஜ்வரத்திலும் பித்தத்திற்கு விரோதமான - அபத்யமான - அஹிதமான வஸ்த்துக்களைத் தவிர்த்திடல் வேண்டும். அதிலும் பித்தாதிகமான பித்தஜ்வரத்தில் மிகவும் கவனத்துடன் பித்த விருத்தங்களைத் தவிர்த்திடல் வேண்டும் என்று சாஸ்திரம் தெளிவுபடுத்துகின்றது.

இவ்விதமேதான் ஒவ்வொரு வியாதியிலும் பித்தப் பிரதானமான நிலையைத் தெளிந்திடவேண்டி பித்தகுன்மம், பித்தபாண்டு, பித்தசூலம் என்பவை போன்ற பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆகவே, பித்தம் பிரதானமான நிலையிலுள்ள பல்வேறு ரோகங்களுக்கும் சிகிச்சையை விளக்கிடும் நூலாகும் என்று தெரிவிக்கும் வகையில், இந்நூலுக்கு நாமம் சூட்டியுள்ளார். இதைத் தொகுத்திடற்கு முக்கிய காரணகர்த்தாவாகவும், காரயிதாவாகவும் இருந்த ஸ்ரீசரபோஜி மஹாராஜா அவர்கள் என்பது தெளிவு.

இரண்டாவது கேள்வியைக் கவனிப்போம். ரோகமானது சரீரத்தைச் சம்பந்தித்தது அல்லது ரோகத்திற்கு அதிஷ்டானம் சரீரம் என்றும், அவ்வாறே ரோகத்திற்கு அதிஷ்டானம் மனம் என்றும், ரோகத்தின் அதிஷ்டானத்தை நோக்கி சாஸ்திரங்கள் இருவகையாகப் பிரித்துத் தெரிவிக்கின்றன.

***தேஷாம் காயமனோ பேதாத் அதிஷ்டானமபி த்விதா***

என்று காயிக அல்லது சாரீரிக ரோகங்கள் என்றும் மனோ ரோகங்கள் அல்லது மானஸிக ரோகங்கள் என்றும் இரண்டு வகையில் ரோகங்களைத் தொகுத்துச் சொல்லும் சாஸ்திரம்.

மனம் என்பது சரீரத்தினின்று தனித்து நிற்கும் ஒரு தத்துவமாகவோ அல்லது உறுப்பாகவோ ஏற்கப்படவில்லை. சரீரம், மனம் இவ்விரண்டிற்கும் உள்ள தொடர்பை அன்யோன்யாச்ரயம் ஒன்றைத் தழுவி நிற்கும் மற்றொன்று என்று தெளியக்கிடக்கிறது. ஆகவே மேற்சொன்ன விதத்தில் காயிக ரோகங்கள் என்றவளவில், அங்கு மனத்தில் சம்பந்தமே இல்லை என்றோ, தீர்மானத்திடல் முற்றும் சரியாகாது. சொல்லப்போனால் இச்சரீரம் ஒன்றினுள் ஒன்றாய்ப் பொருத்தப்பட்ட ஐந்து உறைகள் - பஞ்சகோசங்கள் - என்பதாகும். இதில் பொதுவாக அன்னமயகோசம் என்பதை இந்த ஸ்தூல உடலென்று ஏற்போமானால் அதனுடன் மற்றைய ப்ராணமய, மனோமய, விஞ்ஞானமய, ஆனந்தமய கோசங்களும் இரண்டற்ற நிலையில் ஒன்றியே நிற்கின்றன என்பதை மறுத்திடல் இயலாது. ஒன்றின்றி மற்றொன்று இல்லை என்னும் இத்தொடர்பை அறிவோமானால் காயிக ரோகங்களிலும் சரீரம் ஓரளவாவது சம்பந்தப்பட்டுதான் இருக்கின்றது என்றும், சித்தாந்தம் செய்வது கடினமாகாது. உன்மாதம் முதலான மானஸிக ரோகங்கள் மணிந்திர உபாயங்களால் நிவர்த்திப்பது போலவே சாரீரிகமான சிகிச்சை வகையில் ஏற்பட்ட அப்யங்கம், ஸ்நானம், க்ருதபானம், சிரோவஸ்தி, தாரை முதலிய சிகிச்சைகளாலும் குணப்படுத்முடிகிறது என்பது நாம் கண்கூடாகக் கண்ட ஒரு தெளிவு. ஆகவே, மனோவியாதியில் சரீரத்திற்குச் சம்பந்தமே இல்லையென்றோ, சாரீரிக ரோகங்களில் மனதுக்குச் சம்பந்தமே இல்லையென்றோ வரையறுத்துச் சொல்வது சரியாகாது. மற்றொரு உதாரணத்தையும் காண்போம்.

ஏதோ ஒரு காரணத்தால் கடுமையான துக்கத்தை அனுபவிக்கிறாள் ஒரு தாய். துக்கம் என்பது மனதைச் சம்பந்தித்த உணர்ச்சிநிலை. இதில் சரீரத்திற்குச் சம்பந்தமே இல்லை. இதற்கு, **தீ: தைர்ய ஆத்மவிஞ்ஞானம்** - அறிவைக் கூர்மையாக்கி வந்துற்ற நிலையை பராமர்சம் செய்திடல், பிறகு தவிர்க்க முடியாததும் வந்துற்றதுமான நிலையை கோழைத்தனத்தை விடுத்து தைர்யத்துடன் ஏற்றிடல் வேண்டும் என்று தெளிதல், தனக்கு அவ்வன்மை போதுமான

மட்டும் உளதாயென்று ஆய்ந்து, தேவையானால் அதைப் பெற்றிடற்கு ஆவன செய்திட முயற்சித்தல், என்னும் இவைதான் துக்கத்தில் பீடிக்கப்பட்ட மனத்தினனுக்குச் செய்யத்தக்க சிகிச்சையாகும். இவ்வகை இயல்பு பெற்றதும் மனதைச்சம்பந்தித்ததுமான இந்நிலையில் அவ்வன்னையின் சரீரநிலை எப்படியிருக்கிறது என்று பார்ப்போம். அழுது அழுது வீங்கித் தொங்கும் நிலையிலுள்ள அவ்வன்னைக்குப் பசியே இராது. மலசலங்கள் சரிவர வெளியாகாது. ஆகாரத்தைக் கொடுத்தாலும் ஏற்க மறுப்பாள். வயிறு நிரம்பியதுபோல் இருக்கிறது என்பாள். ஆயினும் வயிறு முதுகோடு ஒட்டியதுபோல்தான் இருக்கும். மனத்தில் கோளாறினால் எப்படி இச்சரீரக் கோளாறு ஏற்பட்டது? இவ்வன்னை க்ஷீராசி என்னும் இனத்தைச் சேர்ந்த தன் குழந்தைக்குப் பால் ஊட்டுகிறாள். அச்சிசுவுக்கு ஆகாரம் கிடைக்கப்போகிறது. ஆயினும் ஏதோ ஒருசில துளிகள் கிடைத்து, அதையும் பருகுமானால், அச்சிசு அப்பாலை ஜரித்துக்கொள்ள சக்தியற்றதாய் வயிற்றுப்போக்கினால் பீடிக்கப்படுகிறது. இது எவ்வாறு? எவ்வாறு என்பது ஒருபுறம் இருக்கட்டும். இவ்வுதாரணங்களிலிருந்து நமக்குக் கிடைக்கும் தெளிவு மறுக்கமுடியாதது. அது என்ன? மனமோ உடலோ நோயுற்றக்கால் ஒன்றை ஒன்று ஓரளவாவது நோயுறச் செய்யும் என்னும் ஓர் உண்மையாகும். ஆரோக்கிய நிலையிலோ சோகம், குரோதம், பயம் முதலிய உணர்ச்சிகளால் பீடிக்கப்பட்ட நிலையிலுள்ளவன் உண்ணும் சோற்றை ஜரித்துக்கொள்ள முடியாமல், ஜீர்ண கோசத்தைச் சம்பந்தித்த ரோகத்திற்கு இலக்காகிறான்; அஜீரணத்தால் பீடிக்கப்படுபவன் என்று சாஸ்திரம் அறிவிக்கிறது; அனுபவத்திலும் காண்கிறோம். இவ்வாறு ஆரோக்ய, அனாரோக்ய நிலைகளில் ஒன்றையொன்று தழுவி நிற்கும் இத்தொடர்பை "அன்யோன்ய ஆச்ரயம்" என்பர். ஆகவே கேவலம் உடலை மட்டும் சம்பந்தித்த ரோகங்கள், அதிலும் பித்தத்தின் சீர்கேட்டினால் உண்டாகத்தக்கவை என்று நிர்ணயித்தல் சாத்யமில்லை; சரியுமாகாது. அதனால் **"பித்தரோக சிகிச்சை"** என்ற இந்நூலில் பித்தத்தின் சீர்கெட்ட

நிலையினால் ஏற்படும் காயிக ரோகங்கள், மானஸிக ரோகங்கள் இரண்டிற்குமே யுள்ள சிகிச்சைகள் விளக்கப்பட்டு உள்ளது மிகவும் பொருத்தமாகும்.

மூன்றாவது கேள்வியைக் கவனிப்போம். சரீரம் என்பது என்ன? ***"சீர்யதே இதி சரீரம்"*** தேயுற்று நலிந்து நாசமாகும் இயல்பு பெற்றது என்று இதற்குப் பொருள். இவ்வாறு ஒருசிலர் உரைக்கின்றனர். ***"போகாயதனம் சரீரம்"*** அதாவது சுகதுக்கங்களை (அடைந்திடச் செய்யும்) மார்க்கம் - வாயில் - கருவி சரீரம் எனப்படும் என்று பொருள். இவ்வாறு ஒருசிலர்.

***யஸ்ய சேதனஸ்ய யத்த்ரவ்யம் ஸர்வாத்மனா ஸ்வார்த்தே நியந்தும் தாரயிதும் ச சக்யம் த்ச்சேஷைதைக பூதம் ச தத்தஸ்ய சரீரம்***

யாதொரு பொருள் சகலவிதத்திலும் தன்னிஷ்டப்படி நடந்திடவும், தரித்திடவும் வசப்பட்டாதாயும், தன்னிடமாய்த் தோற்றம் பெற்று தன்னியல்பும் பெற்றதாய்க் கிடக்கின்றதோ, அப்பொருள் அச்சேதனனின் சரீரமாகும். இவ்விதம் சரீரத்தை விளக்குவோர் வேதாந்திகளுள் ஒருசிலர்.

இவை ஒருபுறமிருக்க "அண்டத்திலுள்ளதை பிண்டத்தில் காண்க" என்றபடி ஆலோசிக்குங்கால், ஒரு மனிதன் எனப்படும் பிண்டத்தினுள் ப்ரம்மாண்டம் எனப்படும் உலகம் யாவுமே அடங்கியுள்ளதாக அறியக் கிடைக்கிறது.

***"ஸத்வம் ஆத்மா சரிரம் ச த்ரயமேதத் த்ரிதண்டவது லோகஸ்திஷ்டதி ஸம்யோகாத் தத்ர ஸர்வம் ப்ரதிஷ்டிதம்"***

என்று சரகாசாரியர் இக்கருத்தை வெளியிடுகிறார். ***ஸத்வம்*** எனப்படும் மனதும், ***ஆத்மா*** எனப்படும் ஜீவாத்மாவும் ***சரீரம்*** எனப்படும் ரஸாதி தாதுக்களாய்த் தோற்றம் பெற்ற பஞ்சபூதங்களின் பரிணாம நிலையும், எத்தில் ஒன்றுபடப் பொருத்தி நிறுத்தப்பட்ட நிலையே (சிறியதோர்) உலகமாகும். இதில் தான் சகலமும் பொருத்தி இருக்கின்றன.

***ஸத்வம்*** என்ற பதத்தை ***மனம்*** என்று பொருள் பயன் படுத்தவேண்டுமோ? ***சரீரம்*** என்ற பதத்தில் ***மனமும்*** சேர்ந்துள்ளது என்பதை மறுக்கமுடியுமா? சரீரத்தைப் பற்றி சொல்லுங்கால் அதிலுள்ள தாதுக்கள், ஆசயங்கள், இந்திரியங்கள் யாவற்றையும் ஒன்றுகூட்டி சொல்வதாக அல்லவா அறியவேண்டும்? ***ஞானேந்திரியங்கள்*** ஐந்து, ***கர்மேந்திரியங்கள்*** ஐந்து என்று பிரித்து ***மனம்*** என்ற பதினோராவது இந்திரியம் ஞானேந்திரியம், கர்மேந்திரியம், இரண்டிற்குமே பொதுவானது, இரண்டுடனும் பொருத்தி இயங்கும் இயல்பு பெற்றுள்ளதுமாகும் என்று சாஸ்திரங்கள் ஏற்பதால் ***மனம்*** என்பது ஒரு ***இந்திரியம்***. அது சரீரத்தினுள் அடங்கியிருக்கிறது என்பது தெளிவாகும். ஆகவே, ***ஸத்வம்*** என்ற சொல்லிற்கு ***மனம்*** என்று பொருள் சொல்வது பொருந்தாது. மற்றுள்ள இருதத்துவங்களான ***ஆத்மா*** (ஜீவாத்மா) ***சரீரம்*** (மனம் என்னும் இந்திரியத்துடன் கூடியது) இவை இரண்டும் ஒன்றி நிற்கவும், இயங்கவும் காரணமாயும் அவ்விரண்டுடன் உடன் நிற்பதாயுமுள்ள (ஸர்வ ஸத்வமயமான) ***அந்தர்யாமி*** என்னும் பரம்பொருளைக் குறிக்கும் என்று பொருள்படுத்துவோரின் கூற்று இங்கு ஏற்கத் தக்கதாகும். சரீரம் என்பதை விளக்கிட வேதாந்திகளால் ஓர் சார்பினர் தெரிவித்துள்ள மேற்குறிப்பிட்ட ***"நிர்வசனத் திற்கும்"***, ***"அந்தர்யாமிப்ராம்மணம்"*** என்ற வேதத்தின் பகுதிக்கும் இவ்விதம் பொருள் கூறுவது ஒத்ததாயும் இருக்கிறது. சரீரம் என்பது இவ்வாறிருக்க, ***"ஸுகாதி உபலப்தி ஸாதனம் இந்த்ரியம் மந:"*** என்ற ஸாங்கிய காரிகைப்படி - ***ஸுகம், துக்கம், இச்சை, த்வேஷம்*** முதலான அறிவுகளுக்குற்ற வாயிலான புலன் - இந்திரியம் - மனமாகும் என்பது இங்கு ஏற்கத்தக்கது. இம்மனத்திற்கும் சரீரத்திற்கும் உள்ள சம்பந்தத்தை ***"அன்யோன்யச்ரயம்"*** என்று ஏற்கனவே விளக்கியாயிற்று.

நான்காவதாக வியாதியின் காரணத்தை உத்தேசித்து அதன் விளைவை நோக்குங்கால் சாரீரிக சம்பந்தமான அபத்திய ஆஹாரவிஹாரங்களால் மனதின் சமநிலையும் பாதிக்கப்படுமா? அவ்வாறே, ரஜஸ், தமஸ் என்னும்

குணங்கள் பெற்ற ஆஹாரவிகார சேவைகளால் விளையும் வியாதி மனத்தை மட்டுமின்றி சரீரத்தையும் பாதிக்குமா? என்ற கேள்விக்கு விடை இரண்டாவது கேள்விக்குற்ற விடையில் விவரிக்கப்பட்டுவிட்டதால் இவ்விடம் பிரத்தியேகமாகக் கூறவேண்டிய அவசியமில்லை.

ஐந்தாவது கேள்வியான "***ரோகம்***" என்பதையும். ஆரோக்யம் என்பதையும் என்னவென்று கவனிப்போம். சுருக்கமாகச் சொல்வதானால் "**வாதபித்தகபங்கள்**" என்னும் காயிக தோஷங்களின் சமநிலையை "**ஆரோக்யம்**" என்றும், அவற்றின் "**விஷம**" நிலைகளை "***ரோகம்***" என்றும் சொல்லலாம். அவ்வாறே ***ரஜஸ், தமஸ்*** என்னும் தோஷங்களின் சீர்கேட்டினால் மானஸிக ரோகங்கள் உண்டாகும். இதற்கு மாறாக ஸத்வகுணம் பலம் பெற்று நிற்குமானால்அது மனத்தின் நல்லிருக்கைக்கு மட்டுமல்லாது சரீரத்தின் நன்நிலைக்கும் பெரும் துணையாக நின்று உதவி புரியும். இவ்வாறுதான் ரோகம் என்பதையும், ஆரோக்யம் என்பதையும் விளக்கிடமுடியும். சொஸ்தனை - ஆரோக்ய நிலையில் உள்ளவனை அறிந்திட வகை யாது? எனின்,

***ஸமதாது: ஸமாக்னிஸ்ச்ச ஸமதோஷ மலக்ரியா:।***
***ப்ரஸன்னாத்மேந்த்ரிய மன: ஸ்வஸ்த இத்யபீதியதே॥***

***ரஸாதி தாதுக்கள், ஜாடராக்னி*** என்னும் ஜீரணசக்தியும் மற்றும் ***தாத்வக்னி, பூதாக்னிகள்*** என்னும் தாது பரிணாம சக்திகளும், சமநிலையில் இயங்கிட வாதபித்த கபங்களும், மலங்களும் நன்முறையில் இயங்கிக்கொண்டும், இந்திரியங்கள் நிர்மலமாகவும், மனது நிஷ்களங்கமாகவும் உள்ள நிலையில் இருப்பவன் "***ஸ்வஸ்தன்***" எனப்படுவான் என்று சாஸ்திரம் சொல்லுகின்றது.

இனி, தாதுக்கள் "***ஸம***" நிலையில் இருப்பது, இயங்குவது என்றால் என்ன? "**விஷம**" நிலையில் இயங்கிடுங்கால் என்ன லக்ஷணங்கள் காணப்படும் என்பதை எல்லாம் இவ்விடத்தில் விஸ்தாரமாகச் சொல்வது மிகையாகும். ஆயினும் சுருக்கமாகச் சொல்வதானால்,

ஒவ்வொருவனும் அவனவன் அன்றாட வாழ்க்கையை இடையூறின்றி நடந்திடுமளவில் மனத்திலும் உற்சாகக் குறைவின்றி இருக்கும் நிலையை "***ஆரோக்யம்***" எனலாம் என்று கொள்ளலாகும்.

இவ்வளவில் நமக்குக் கிடைத்துள்ள தெளிவுகளாவன ஏகதோஷஜமான ரோகம் என்பது ஏற்கத்தக்கதல்ல. கோளாறுற்ற தோஷங்களின் சீர்கேட்டிலுள்ள ஏற்றத்தாழ்வை ஒட்டி ஒரு ரோகத்தை ஒரு தோஷத்துடன் சாட்டிப் பெயரிடுகிறோம். மனத்திற்கும் சரீரத்திற்கும் அன்யோன்ய ஆச்ரயம் என்ற தொடர்பு இருப்பதால்,

***தேஷாம் ஆச்ரய ஆச்ரயீணாம் மித: I***
***யதேகஸ்ய ததன்யஸ்ய வர்தனக்ஷபணௌஷதம் II***

இவற்றில் ஒன்று நோயுற்றக்கால் மற்றொன்றின் ஸுகமும் கெடும். ஒன்றிற்குச் செய்யும் சிகிச்சை மற்றொன்றிற்கும் ஹிதமாகும் என்பதும். ஆகவே "பித்த ரோக சிகிச்சை" என்றதால் பித்தம் மிகப் பிரதானமாயுள்ள காயிக - மானஸிக ரோகங்களின் சிகிச்சைகள் விளக்கப்பட்டுள்ள நூல் என்றும் இவ்விஷயங்கள் தெளிவாயின.

இனி, இப்பித்தத்தைப் பற்றிய விவரங்களையும் சிறிது காணலாம்.

(i) பித்தம் என்றால் என்ன ?

(ii) நன்னிலையில் உள்ளக்கால் இதன் ஸ்வரூபம், செயல் இவை யாவை ?

(iii)இப்பித்தம் கோளாறடைவதற்குக் காரணங்கள், விளைவு இவற்றின் விவரங்கள்.

(iv)பித்தத்தின் ஸ்தானங்கள்.

(v)செயல்களை ஒட்டியும், செயல்கள் நடைபெறும் ஸ்தானத்தை ஒட்டியும் பித்தத்தின் பேதங்கள்.

(vi)இதில் மேல்நாட்டு விஞ்ஞானபரமான உடற்கூறு, சாஸ்திரத்தின் நோக்கு, பாச்சாத்ய, பௌரஸ்ய சாஸ்திரங்களின் இடையிலுள்ள ஒற்றுமைகளின் விளக்கமும் தெளிவும்.

(vii) பித்தத்தின் கோளாறுகளைச் சரிக்கட்டிட சாஸ்திரங்கள் வகுத்துள்ள பொதுச் சிகிச்சையின் அடிப்படைத் தத்துவம்.

மேற்கூறிய தலைப்புகளின்கீழ் கிடைக்கக்கூடிய விவரங்களைத் தொகுப்போமானால் பித்தத்தைப் பற்றிய விவர விளக்கங்களில் பெரும்பாலான பாகம் நமது அறிவிற்கு எட்டும் என்பது திண்ணம்.

1. *'தப்'* என்னும் தாதுவிற்கு ***தஹித்தல்*** - வெப்பத்தை உண்டாக்கல் என்று பொருள். இத்தாதுவிலிருந்து (இயல்பை) செயல்களை விளக்கும் சொல்லாய் வந்தது ***'பித்தம்'*** என்னும் பதம். ஆகவே 'பித்தம்' என்பது பொதுவாகச் சொல்லுமிடத்து அக்னியின் இயல்புபெற்ற ஒரு தத்துவம் அல்லது பொருள் என்று விளங்குகிறது.

நாம் உண்ணும் ஆகாரத்தை ஜெரிப்பது முதல் உடல் நிலையிலுள்ள உஷ்ணத்தை அளவோடு பரிபாலித்தல் என்பது போன்ற பல்வேறு செயல்களை சரீரத்தில் நடப்பிக்கக் காரணமாயிருப்பதுதான் பித்தம்.

ஆகவே, அக்னியின் இயல்புபெற்ற இப்பித்தத்தைப் பஞ்சபூதங்களில் பெரும்பாலும் அக்னியின் வாயிலாகத் தோற்றம்பெற்றது என்று தெளிந்து "அக்னியின்" வேறொரு தோற்றம் என்று கருதுவோர் உளர்.

சரீரத்தின் இயக்கத்தில் இவ்வக்னியின் வாயிலாக ஏற்படும் செயல்கள் எல்லாவிடத்துமுளதாதலால் இப்பித்தமானது சரீரத்தில் எல்லாவிடத்தும் வியாபித்துச் சரீரத்தில் எல்லாவிடத்தும் வியாபித்துச் செயல்புரிவதாய் உள்ளது என்று ஏற்கவேண்டும். ஆயினும் மிக்கபாலும் பித்தத்தின் உற்பத்தி ஸ்தானத்தையும், பித்தத்தின் செயல்களில்

முக்கியமானது ஏற்படும் ஸ்தானத்தையும் உத்தேசித்து, சரீரத்தில் இப்பித்தமானது நாபிக்கும் ஹ்ருதயத்திற்கும் இடையிலுள்ள பிரதேசத்தைச் சான்று செயல்புரிய காணக் கிடைப்பதாகவும், ஆகவே அப்பிரதேசமே (தான் பிரதானமாகச் செயல்படும் இடம்) பித்தத்தின் ஸ்தானம் என்றும் சாஸ்திரம் சொல்லும்.

*தே வ்யாபினோபி ஹ்ருன்னாப்யோ:*
*அதோ மத்ய ஊர்த்வ ஸம்ச்ரயா:*

என்பது இதற்குச் சான்று.

மற்றும் விவரித்துச் சொல்லுங்கால் இப்பித்தமானது ***பித்தம் ரக்தஸ்ய விக்ருதே:*** - ரக்தத்தின் மாறுபட்ட நிலை - ***விக்ருதி*** என்று மறுக்கவொண்ணாக் காரணங்களைக் கொண்டு சாஸ்திரம் சாதிக்கின்றது. மேலும்

*ப்ரபவத்யஸ்ருஜ ஸ்தானாத்*
*ப்லீஹதோ யக்ருதச்ச: தத்*

என்பதால் ரக்தத்திற்கு உற்பத்தி ஸ்தானமான ப்லீஹம் (Spleen), யக்ருத் (Liver) என்னும் ஆசயங்களிலிருந்துதான் இப்பித்தம் உற்பத்தியாகிறது என்றும் சாஸ்திரம் தெரிவிக்கிறது. இவையுமின்றி உடலியக்கக் கிரமத்தை யுன்னி ஓர்க்குங்கால் தாதுக்களில் பித்தமானது

*பித்தம் து ஸ்வேத ரக்தயோ:*

என்றபடி வியர்வையிலும் ரக்தத்திலும் ஒன்றியிருப்பதாயும் சாஸ்திரம் சொல்லுகிறது. மேலும்,

*நாபிராமாசய: ஸ்வேதோ லஸீகா ருதிரம் ரஸ:* ll

*த்ருக் ஸ்பர்சனம் ச பித்தஸ்ய நாபிரத்ர விசேஷத:* ll

நாபி, ஆமாசயம் என்னும் இரைப்பை, வியர்வை, ஸலீகை என்னும் ரஸபாகம், ரக்தம், ரஸதாது, கண், சருமம் என்னும் இடங்களும் பித்தத்தின் ஸ்தானங்கள் என்றும் இவற்றில் நாபி முக்கியமான ஸ்தானம் என்றும் சாஸ்திரம் சொல்லுகின்றது.

## பித்தத்தின் ஸ்தானங்கள்

| தோஷத்தின் பெயர் | பொதுவாக உடலில் ஸ்தானம் அல்லது இருப்பிடம் | | | விசேஷ அல்லது முக்கிய ஸ்தானம் | விசேஷக் குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | ஆசயம் | தாதுக்கள் | இந்திரியம் | | |
| **பித்தம்** | பச்யமானாசயம்<br>யக்ருத் -<br>ஈரல்.<br>ப்லீஹம் -<br>க்லோமம் | முக்கியமாக<br>ரக்தம்<br>ஓரளவு<br>மாம்ஸம் | தர்சனேந்திரியம்<br>கண்.<br>ஸ்பர்சனேந்திரியம்<br>சருமம் | நாபி<br>(பச்யமானாசயப்<br>பிராந்தியம்) | க்ரஹணியும்<br>(DUODENUM)<br>க்ஷுத்ரந்திரம்<br>சிறுகுடல்<br>பச்யமானாசயம் |

ஆயினும் இவ்விளக்கங்களைக் கொண்டு மேற்குறித்த ஆசயங்களிலும் தாதுக்களிலும் மட்டுந்தான் பித்தம் இருக்கின்றது என்றோ சரீரத்தில் மற்றுள்ள இடங்களில் இல்லை என்றோ கருதிடல் தகாது. உற்பத்தி ஸ்தானத்தை உத்தேசித்தும், செயல்படும் துறையை உத்தேசித்துமே மேற்சொன்ன விளக்கம் ஏற்கத்தக்கது.

II. நன்னிலையில் உள்ளக்கால் இப்பித்தமானது

*பித்தம் ஸஸ்நேஹ தீக்ஷ்ணோஷ்ணம்*
*லகு விஸ்ரம் ஸரம் த்ரவம்*

என்னும் ஸ்வரூபத்தைப் பெற்றுள்ளது. அதாவது ஒருவகை நய்ப்புத் தோற்றமுள்ளதும், நெருப்பைப்போல் ஜடிதியில் செயல்படும் சக்தி பொருந்தியதாயும், வெப்பகுணம் உள்ளதாயும், எளிதில் பரிணாமம் அடையும் இயல்பு உடையதாயும், (அமிலகுணமுள்ளதால்) கொழுகொழுப்பு அற்றதாயும், ஒழுகும் தன்மையுடையதாயும், த்ரவஸ்வரூபம் உள்ளதாயும் இருக்கும்.

இதனால் பித்தம் என்பது ஒருவகை திரவப்பொருள்; சரீரத்தில் அது சில ஆசயங்களிலிருந்தும், கிரந்திகளிலில் இருந்தும் சுரக்கிறது என்பது தெளிவு. சுரக்கும் ஸ்தானத்தில் இருந்து செயல்படும். ஸ்தானத்திற்கு இப்பித்தமானது ***நாளங்களின் அல்லது ச்ரோதஸ்களின்*** வாயிலாக ஒழுகிச் செல்வதாகும் என்றும் ஊகிக்கக் கிடைக்கிறது. இவற்றையே கிரந்திகளின் நாளங்கள் என்றும் பித்தவாஹி ச்ரோதஸ்கள் (Ducts & Cannals)என்றும் நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன.

இங்கு மற்றொரு விஷயத்தையும் தெளிந்திடல் அவசியம். திரவங்களைச் சுரக்கும் கிரந்திகள் பொதுவாக இருவகைப்படும். (1) ஸ்நாளக்ரந்திகள், (2) நிர்நாளக்ரந்திகள் (Ductless Glands) என்று முறையே இவற்றிற்குப் பெயர். நிர்நாளக்ரந்திகளில் இருந்து சுரக்கும் திரவமானது தனியாகக்

கிடைக்கக் கூடியதல்ல. ஆகவே மேற்சொன்ன வகையில் சுரக்கும் திரவமெல்லாம் பித்தமே என்று தெளியுமிடத்து, இவற்றுள் சில காணக்கிடைக்காதவை என்பது அறியக் கிடைக்கின்றது. ஸநாளக்ரந்திகளிலிருந்து சுரக்கும் திரவங்கள் காணக் கிடைப்பவையாகும். அவற்றை ***வியக்தபித்தம்*** என்று அழைப்பர். நிர்நாளக்ரந்திகளிலிருந்து சுரக்கும் திரவங்கள் காண்பதற்குக் கிடைக்கமாட்டா. ஆயினும் இவையாற்றிடும் செயல்களிலிருந்து இவற்றை ***கூடபித்தம்*** என்று அழைப்பது வழக்கம்.

சாதாரணமாகப் பித்தமானது தனது நன்நிலையில்

***பித்தம் பக்த்யூஷ்ம தர்சனை:***
***க்ஷுத் த்ருட் ருசி ப்ரபா மேதா***
***தீ சௌர்ய தனு மார்தவை:***

பசி, தாகம், ருசி, பிரபை அல்லது பொலிவுமிக்க தோற்றம், ஞாபகசக்தி, அறிவு, வீர்யம், சருமத்திற்கு மிருதுவான தன்மையை உண்டாக்கும் செயலுள்ளது. இச்செயல்களில் சில சரீரத்தைச் சம்பந்தித்ததாகவும் வேறுசில மனதைச் சம்பந்தித்ததாகவும் உள்ளதைக் காண்கிறோம். ஆகவே இதை சித்தரித்துக் காணுங்கால் குறிப்பாக, ஜீர்ணாசயத்தில் சாதாரணமாகப் பசி எடுப்பதும், அதே பசி அதிகரித்து தீக்ஷ்ணமாயிருப்பதும், அவ்வாறே குடலிலுள்ள மலங்களின் இளக்கம் எளிதில் ஏற்படுவதும் பித்தத்தினால் உண்டாகும் செயல்களாகும். இப்பித்தமானது

***பீத விண்மூத்ர நேத்ர த்வக்***
***க்ஷுத் த்ருட் தாஹால்ப நித்ரதா:***

நன்னிலையில் இருக்கத்தக்கதைவிட விருத்தியாயிருக்கும் பொழுது - மலம், மூத்திரம், கண், சருமமிவை மஞ்சளித் திருப்பதும், பசியும் தாகமும் அதிகரித்தும் நித்திரை மிகவும்




இவ்வாறு தோன்றும்.

இவற்றைச் சம்பந்தித்த மற்றுமுள்ள விளக்கங்கள் இனி வரக்கிடக்கின்றன.

அல்பமாயும் இருக்கும். இதற்கு மாறாக இப்பித்தம் நன்னிலையில் இருக்கத்தக்கதைவிட குறைந்திருக்குமானால்

***பித்தே மந்தோனல: சீதம் ப்ரபாஹானி:***

பசி மந்தித்திருத்தல், கைகால் ஏன்! பொதுவில் சரீர முழுதும் ஜில்லிட்டிருத்தல், முகத்தில் ஒளியின் பொலிவு இல்லாதிருத்தல் என்னும் லக்ஷணங்கள் தென்படும்.

**III.** இப்பித்தம் கோளாறடைவதற்கு நாம் ஏற்கும் ஆகாரவிகாரங்களின் தன்மையும் காலத்தின் நிலையும் மனதின் போக்கும் காரணங்களாகும்.

மிகவும் உஷ்ணமானதும், மிகவும் தீக்ஷ்ணமானதும், காரம், புளிப்பு, உப்புச்சுவையுள்ளதுமான பதார்த்தங்களைச் சேவிப்பதால் பித்தம் அதிகரிக்கும். மத்யங்கள் முதலான லாகிரி வஸ்துக்களைச் சேவிப்பதாலும், ரஜோகுணம் அதிகரித்து மனத்தின் நன்னிலையைக் கெடுக்கும். வர்ஷ ருதுவில் பித்தமானது ***சயம்*** என்ற பரிமிதமான அளவில் விருத்தி பெறுவதும், சரத் ருதுவில் அதே பித்தம் மிகவும் அதிகமாகக் கோபித்து பல்வேறு உபாதைகளை உண்டாக்குவதும் சாஸ்திரங்களில் விளக்கப்பட்டுள்ளன.

சமநிலைமையிலிருந்து வழுவிய பித்தமானது ஆரோக்யத்திற்கு ஹிதமான அளவிற்கு அதிகமும் ஆகலாம், அல்லது அதைவிடக் குறையவும் செய்யலாம். அளவிற்கு அதிகமாகும் விருத்தி என்ற நிலையில் சயம், பிரகோபம் என்ற இருவகைக் கோளாறுகளைப் பெறலாம். இவ்விவரத்தை உற்று நோக்கித் தெளிந்திடல் வேண்டும்.

பித்தம் என்பது வீரியத்தால் உஷ்ணமாயும், தீக்ஷ்ணம் முதலான குணங்கள் பெற்றதாயுமிருக்கும். பித்தத்திற்குத்

துல்யமான வீர்யமும் குணமுமுள்ள ஆகார அவுஷதங்களைச் சேவிப்பதால், அதே குணங்களும் வீர்யமுமுள்ள பித்தமானது அளவுகடந்து பெருகி தனது (உற்பத்தி) ஸ்தானத்திலிருந்து இதர பிரதேசங்களுக்கும் ஒழுகி வியாபித்து, மிகக் கடுமையான ரோகத்தை உண்டாக்கும். அவ்வாறின்றி பித்தத்தின் வீர்யத்திற்கு எதிர்மறையான சீதவீர்யத்தோடு பித்தத்திற்குத் துல்யமான தீஷ்ணாதி குணங்களோடு கூடிய ஆகார அவுஷதங்களை சேவிக்குங்கால், துல்யகுண சேவனையால் அதிகரிக்கவும், எதிர்மறை வீர்யத்தை சேவிப்பதால் குறையவும் நேரிடுமாறு இருவகை சக்திகளின் சேர்க்கையின் காரணமாக பரிமிதமான விருத்தியை **சயம்** என்ற நிலையைப் பித்தம் அடையும். அதாவது அளவில் நன்னிலையில் இருக்கத்தக்கதைக் காட்டிலும் அதிகரித்திருப்பினும் தனது (உற்பத்தி) ஸ்தானத்தினின்றும் வெளியேறிடப் போதாத நிலையில் இருக்கும். அவ்வாறின்றி வீர்யம், குணம் இரண்டுமே பித்தத்திற்கு எதிர்மறையான வகையில், அதாவது சீதவீர்யமும் மந்தம் முதலான குணங்களுமுடைய ஆகார அவுஷதங்களை சேவிப்பதால் பித்தம் குறையும். இதற்கு மேற்கோள் :

***சீதேனயுக்தாஸ்தீஷ்ணாத்யா; சயம் பித்தஸ்ய குர்வதே***
***உஷ்ணேன கோபம்; மந்தாத்யா: சமம் சீதோபஸம்ஹிதா:***

மேற்சொன்ன இனத்தைச் சேர்ந்த வகையான கோளாறு நிலையை அடையும்போது, சரீரத்திலும் மனத்திலும் ஏற்படும் விகாரங்களை ஒரு சித்திரமாக விளக்கிடலாம்.

## பித்தத்தின் நிலைகளின் விளக்கச் சித்திரம்

| பித்தத்தின் நிலை | மானஸிகமாக ஏற்படும் குறிகள் | | சரீரக்குறிகள் | | சருமத்தில் |
|---|---|---|---|---|---|
| | உயர் (கேந்திர) நிலையில் | இந்திரியங்களில் | ஜீர்ணா சயங்களில் | ஆப்யந்தர சுரப்புகள் | |
| நன்நிலையில் ஸமநிலையில் | மேதை (ஞாபகம்) அறிவுகூர்மை சௌரியம் ★ ஓஜஸ்ஷ்★ ருசி, தாகம் இவை மானஸிக ரோகத்தில் விளக்கமாகும். உதாரணம் சோதனை (Urge) | பார்வை தேஜஸ் ★★ | ஜரித்தல், ருசி (சுவை) அறிதல், பசி, தாகம். பக்தி † | சரீரத்தின் இயல்பான § வெப்பநிலை (ஊஷ்மா) | சருமம் மிருதுவாய் இருத்தல். காந்தி அல்லது பொலிவு. நிறம் ‡ |
| வ்ருத்தம் அதிகரித்த நிலை | தூக்கக்குறைவு; மூர்ச்சை, பலக்குறைவு | இந்திரிய தௌர்பல்யம் பொதுவாக ஞானேந்திரயங்களுக்கு ஓரளவு அயர்வு★★ | பசி, வேட்கை தாகம் † | தாகம் ஸந்தாபம் § | |
| | | | மலம், மூத்திரம், சருமம் இவை மஞ்சளித்தல் போன்ற நிலை. உதாரணமாக Bile என்னும் பித்த நீரினால் முக்கியமாகவும் ஏற்படும் நிலை. | | |

| பித்தத்தின் நிலை | மானஸிகமாக ஏற்படும் குறிகள் | | சரீரக்குறிகள் | | சருமத்தில் |
|---|---|---|---|---|---|
| | உயர் (கேந்திர) நிலையில் | இந்திரியங்களில் | ஜீர்ணா சயங்களில் | ஆப்யந்தர சுரப்புகள் | |
| க்ஷீணம் அளவுக்குக் குறைந்த நிலை | | | மந்தாநலம் பசிக்குறைவு † | சீதம் - சரீரத்தின் § இயல்பான வெப்பமின்மை | ப்ரபாஹானி - பொலிவுக் குறைவு. நிஷ்ப்ரபத்வம் ‡ |

★ (மானஸிகம்) தைராயிடு, ஜினாட்ஸ், அட்ரீனல் என்னும் கிரந்திகளின் சுரப்பிலுண்டாகும்.

★★ (இந்திரியங்கள்) விஷுவல் பர்பிள் (Visual Purple) என்பது.

† ஜீர்ணாசயத்தில் உமிழ்நீர் முதல் (Ptylin) ஆமாசய (Gastric Juide) பக்வாசய (Intestinal Juice)ங்களில் ஊறும் சுரப்புகளும், ஈரல் (Bile) சுரப்பு, க்லோமம்(Pancreas) சுரப்பு ஆகியவையாவும்.

§ சருமத்தின் நிறம் - நிறத்திலுள்ள பேதங்கள் ஆகியவை - அதிவிருக்கம் (Supra Renal) என்னும் கிரந்திகளின் சுரப்பான (Adrenalin) என்னும் திரவம்.

‡ கூடபித்தங்களால் தாது பரிணாமமும் அதன் வாயிலாக உண்டாகும் சூட்டையும் குறிப்பதாகும்.

V. இப்பித்தத்தின் செயல்களை யுன்னியும், அச்செயல்கள் உடலில் ஏற்படும் ஸ்தானங்களை யுன்னியும் சிகிச்சா சௌகர்யத்தையுன்னியும், பித்தத்தை ஐந்து வகைகளாகப் பிரித்துச் சாத்திரங்கள் விரிவாக விளக்கியுள்ளன.

அவ்விவரங்கள் பின்வருமாறு :

**(a) பாசகம், (b) ரஞ்ஜகம், (c) ஸாதகம், (d) ஆலோசகம், (e) ப்ராஜகம்**

(a) *பாசகம்* என்னும் இப்பித்தம் பக்வாமாசயங்கள் இடையில் உள்ளது. பஞ்சபூதங்களின் சேர்க்கையால் தோற்றம் பெற்றதேயாயினும் இப்பித்தத்தில் அக்னியின் அம்சம் மிகமிகவும் மீசுரமுற்றிருப்பதால் திரவத்தன்மை இன்றி அமைந்தது. ஜீர்ணித்தல் முதலான கருமங்களைச் செய்வதால் அனலம் - அக்னி - ஜடராக்னி என்றழைக்கப்படு கிறது. உண்ட ஆகாரத்தை ஜெரிப்பித்தல் அதிலிருந்து உடலைப் பேணவும் வளர்க்கவும் அவசியமான சாராம்சத் தையும், அதிலிருந்து ஒழிந்து கிடைக்கும் கிட்டம் என்னும் மலாம்சங்களையும் வேறுபடுத்திடல்; தான் நின்ற நிலையிலிருந்து மற்றுமுள்ள பித்தங்களுக்கும் அதனதன் செயல்களைச் செய்திடும் திறனை அளித்தல், என்னும் இச்செயல்களை உடையதாகும்.

இங்கு கவனிக்கத்தக்கது ஒன்று உள்ளது. பொதுவாகச் சொல்லுமிடத்து பித்தமானது ஒரு சுரப்பு என்றும், ஆகவே திரவஸ்வரூபம் பெற்றது என்றும் தெளிவுபடுத்தியுள்ள நிலையில், பாசகம் என்ற பித்தத்தை மட்டும் திரவஸ்ரூபம் இல்லாதது என்பதின் பொருள் என்ன? இரண்டாவதாக இது பக்வாமாசயங்களினிடையில் இருப்பது என்றால் இது பக்வாமாசயத்திலும் உண்டு, ஆமாசயத்திலுமுண்டு என்று தெரிவித்ததின் பொருள் என்ன? மூன்றாவதாக மற்றுமுள்ள பித்தங்களுக்கெல்லாம் தத்தம் செயலைப்புரியும் திறனை அளிப்பதாக இப்பாசக பித்தத்தை விவரித்ததின் பொருள் என்ன? என்று இவ்வாறு ஆலோசித்தல் அவசியம்.

ஆமாசயத்தில் காஸ்டிரிக் ஜூஸ் (Gastric Juice) என்னும் திரவம் சுரக்கிறது. ஆகாரம் ஜீர்ணிப்பதற்கு இது ஓரளவு காரணமாகிறது. இதைப் பாசகம் என்று ஏற்கத்தகுமா? தகாது. ஏனென்றால் பாசக பித்தத்திற்குத் திரவத்தன்மையில்லை. டியோடினம் (Duodenum) என்னும் பச்யமானாசயத்தில் பான்கிரியஸ் (Pancreas) என்னும் க்லோமத்திலிருந்து ஒரு சுரப்பு திரவமும், லிவர் (Liver) என்னும் ஈரலிலிருந்து சுரந்து கிடைக்கும் பைல் (Bile) என்னும் பித்தநீரும் வந்து சேர்ந்து ஆகாரத்தின் ஜீர்ணத்தில் ஒரு நிலைமையைப் பூர்த்திசெய்ய உதவுகின்றனவே! ஆகவே இத்திரவங்களைப் பாசகம் என்ற பித்தம் என்று அழைக்கலமா? தகாது. பாசகத்திற்குத் திரவ ஸ்வரூபமில்லை. மேலும் ஜீர்ணத்திற்கு ஆமாசமயத்தில் சுரக்கும் காஸ்டிரிக் ஜூஸ் என்னும் திரவமும் ஓரளவு காரணமாயிருக்கிறது. அதை நீக்கி பச்யமானாசயத்தில் வந்துசேரும் திரவத்தை அல்லது திரவங்களை மட்டும் பாசகம் என்பது பொருந்துமா? பொருந்தாது. மூன்றாவதாக ஆமாசயத்தையும், பச்யமானாசயத்தையும் கடந்து ஆகாரமானது பக்வாசயத்தில் சேரும்பொழுது, பக்வாசயத்தில் இருந்து சுரக்கும் இண்டெஸ்டைனல் ஜூஸ் என்னும் திரவமும் வந்து சேர்ந்து அவ்வாகாரத்தின் ஜீர்ணத்தை பூர்த்திசெய்ய அவ்வியத்தில் ஆகாரத்தின் சாரம்சத்தையும், கிட்டாம்சத்தையும் வெவ்வேறாகப் பிரித்திடும் செயலையும் புரிவதால் பக்வாசயத்தில் சுரக்கும் திரவத்தைப் பாசகம் என்று அழைக்கலாமா? அதுவும் பொருந்தாது. ஏனென்றால் பாசகம் என்னும் பித்தத்திற்குத் திரவஸ்வரூபம் கிடையாது. மேலும் அந்த ஆகாரத்தை ஜீர்ணம் செய்ய ஓரளவு காரணமாயிருந்த ஆமாசய சுரப்புத்திரவம், பச்யமானாசயத்தில் கிடைக்கப் பெரும் சுரப்புத்திரவங்களை இவற்றின் செயலின் முக்யத்தைப் புறக்கணித்து பக்வாசயத்தில் மட்டும் சுரக்கும் திரவம் தான் பாசகம் என்று ஏற்பது எவ்வாறு பொருந்தும்? உண்மையை ஓர்த்திடுங்கால், வாயினுள் சுரக்கும் லாலாவிலுள்ள **டைலின்** என்னும் பொருள்கூட ஆகாரம் ஜீரணமாவதற்குக் காரணமாக இருப்பதால் அவ்வுமிழ் நீரையும்கூட பாசகம் என்று அழைப்பதற்கு ஓரளவு நியாயம்

இருக்கிறதல்லவா? ஆகவே, இப்பாசகம் என்ற பித்தந்தான் என்ன? என்ற கேள்வி எழுகிறது. இங்கு "தன்னிடத்தில் இருந்தவாறே மற்றுள்ள பித்தங்களுக்குச் செயற்திறனை அளித்துதவுகிறது". இப்பாசகம் என்னும் பித்தம் என்றதாலும், இது திரவத்தன்மையற்றது என்றதாலும், அப்பாசகத்தை இன்னதென்று நிச்சயிக்க நமக்கு ஒரு தடயம் இருக்கிறது. அதாவது ஆதுநிக விஞ்ஞான திருஷ்டியால் ஆம-பக்வாசயங்களை ஆச்ரயித்திருக்கும் ***"காஸ்ட்ரின்", "ஸெக்ரிடின்"*** என்னும் ***"ஹார்மோன்"***தான். முன்சொன்ன திரவங்கள் யாவுமே சுரக்கவும், அதனதன் செயல்களைப் புரியவும் காரணமாகின்றன. இந்த ஹார்மோன்களோ திரவஸ்வரூபம் உள்ளவை அல்ல என்பது தெளியப்படுத்தித்தான் பாசகமோ என்ரு எண்ணத் தோன்றுகிறது. ***இந்த ஹார்மோனுக்குப் பாசகத்தைப் போலவே திரவத்தன்மை இல்லை.*** இந்த ஹார்மோன்தான் ஜீரணத்தில் சம்பந்தப்பட்ட சகல திரவங்களுக்கும் சுரந்து, தத்தன் செயல்புரிந்திடக் காரணமாக இருக்கிறது என்பது ***"மற்றுள்ள பித்தங்கள் தமது செயலைப் புரிந்திடும் திறனைப் பாசகம் அளிக்கிறது"*** என்பதற்கு ஒத்திருக்கிறது. ஆகவே பாசகம் என்பது ஜீர்ணாசயங்களில் உள்ள ஹார்மோன்கள். இவை பக்வாமாசயங்களினிடையில் இரண்டுடனும் தொடர்பு பெற்றிருப்பவை. தாமே நேரிடச் சென்று கூடி ஆகாரத்தைச் செரிப்பதற்குக் காரணப் பொருளாயில்லாவிடினும், காரணமாக நின்று சுரப்புத் திரவங்களைச் சுரப்பித்து அவற்றின் மூலம் ஜீரணத்தையும் செய்விப்பதால் காரணமும் ஆகும். ஆகவே, பாசகம் என்பது ஜீர்ணாசயங்களிலுள்ள ***காஸ்ட்ரின், ஸெக்ரிடின்*** போன்ற ஹார்மோன்களே ஆகுமென்று எண்ணத் தோன்றுகிறது அல்லவா? பாசகம் என்பது இந்த ஹார்மோன்கள்தான் என்று நிச்சயமாகச் சொல்வதற்குத் தகுந்த ஆராய்ச்சிகள் செய்யப் படவில்லை. ஆயினும் ஆராய்ச்சியில் நோக்கமும், ஊக்கமும் உள்ளவர் மேலேகண்ட தகவல்களைத் தமது ஆராய்ச்சிகளுக்கு கருவூலமாக ஏற்கலாமல்லவா? முடிவு கிடைக்கும்பொழுது கிடைக்கட்டும். இன்று பாசகம் என்பது மேற்சொன்ன ஹார்மோன்கள்தானோ! என்று எண்ணப்போதுமான நியாயம் இருக்கிறதென்பது அறியக்கிடைப்பதாயிற்று.

(b) *ஆமாசயத்தை (ஜீர்ணாசயத்தை)* ஆச்ரயமாக பெற்றிருப்பது **ரஞ்சகம்** எனப்படும் பித்தம். இது ரஸ தாது செம்மை நிறம் பெற்றிட (ரக்தமாகப் பரிணமிக்க)க் காரணமாகிறது. இதன் விளக்கத்தையும் பின்னால் காணலாம். ஆயினும் ***லீவர்*** என்னும் ஈரலிலிருந்து சுரக்கும் **பைல்** என்னும் திரவம் ரக்தத்திலுள்ள சிவப்பு நிறத்திற்கு எவ்வாறு காரணமாகிறது என்பதை ஆதுநிக விஞ்ஞான சாஸ்திர விளக்கப்படி நோக்கிடின் இந்த ரஞ்சகபித்தம் இன்னதுதான் என்பது தெளிவுபடும்.

(c) ***ஸாதகம்*** என்னும் பித்தம் ஹ்ருதயத்தில் சென்று இருக்கக் காண்பதாகும். இது பொதுவாக அறிவின் ஒளி, ஞாபகசக்தி, ஸத்வபுத்தி முதலிய மனத்திறன்களால் ஒருவன் விரும்பிடும் லக்ஷியத்தை அடையச் செய்வதாகும். சில நிர்நாளக் கிரந்திகளில் சுரக்கும் திரவங்களால் இச்செயல் நிகழ்கிறது என்பதை ஆதுநிக விஞ்ஞான சாஸ்திரங்களின் துணைகொண்டு ஸாதகம் என்னும் பித்தம் இன்னதுதான் என்பது தொடர்ந்துவரும் விளக்கங்களில் கிடைக்கும்.

(d) ***ஆலோசம்*** என்னும் பித்தம் ***த்ருக்*** என்னும் கண்ணில் இருந்து ரூபத்தை (நிறங்களை)க் காண உதவுகிறது.

(e) ***ப்ராஜகம்*** என்னும் பித்தமானது சருமத்தில் நின்று அதன் ஸாலிவு - வனப்பு, மிருதுத் தன்மை, நிறம் ஆகியவற்றைத் தந்துதவுகிறது.

இதுவரை ஐந்து வகையானதாய்த் தோன்றும் பித்தத்தின் விவரங்கள் விளக்கப்பட்டன. இவற்றையே ஆதுநிக விஞ்ஞானத்தின் கோணத்திலும் சேர்த்துச் சித்தரித்துக் காண்போம்.

| பித்தத்தின் பெயர் | ஸ்தானம் | தர்மகர்மங்கள் | விசேஷ விஞ்ஞானபர விளக்கம் |
|---|---|---|---|
| **பாசகம்** | **' பக்வாமாசயம்**<br>ஆமாசயத்தில் : இரைப்பையில் சுரக்கும் ஆமபித்தம் என்னும் காஸ்ட்ரிக் ஜூஸ் (Gastric Juice)<br>ஆமபக்வாசயத்தில் : க்லோமத்திலிருந்து சுரக்கும் பாங்க்ரியாடிக்ஜூஸ் (Pancreatic Juice)<br>ஈரலிலிருந்து சுரக்கும் பைல் (Bile) என்னும் பித்த நீர் | நால்வகைப்பட்ட ஆகாரங்களும் ஜெரிக்கப்பட்டு (1) உடலைப் போஷிப்பதற்குதவும் ஸராம்சமாகவும், (2) கிட்டாம்சமென்னும் மலமாகவும் பிரித்திடல் (மலத்திற்கும் அவஷ்டம்பம் என்னும் காமமிருப்பது உபகாரபரமாகிறது பரிணாமத்திற்கு இவ்வித பாகமும் (ஜெரித்திடல்) பரிணாமமும் ஆகாரம் நமது வாயிலுள்ளபோது லாலாவிலுள்ள (டைலின்) பித்தாம்சத்தின் சக்தியுடன் தொடங்கி ஆகாரத்திலுள்ள ஸாராம்சமெல்லாம் ரஸாதி தாதுக்களாய் பரிணாமமாகி தீரும்வரை நடைபெறுகிறது. | (1) மேநாட்டு விஞ்ஞானபரமான வைத்ய சாஸ்திரப்படி லாலாவிலுள்ள டைலின் என்னும் பொருள் ஆகாரத்திலுள்ள தான்யாம்சத்தை மதுரரஸ பூயிஷ்டமான கார்போஹைட்ரேட் என்ற பொருளாகப் பரிணாமமாக்கிடக் காரணமாகிறது.<br>(2) ஆமாசயத்திலிருக்கும் அன்னத்தில் பெப்ஸின் என்னும் பொருள்தான் இப்பணியைத் தொடர்ந்து நடத்திடும்.<br>(3) ஆமாசயத்தைக் கடந்த பிறகு தான்யாம்சம், மாம்ஸ்யம், ஸ்நேஹம் ஆகியவற்றை ஜீரணித்துப் பரிணாமமாக்கிவிடும் பித்தம் க்லோமத்திலிருந்து ஊறும் பாங்கிரியாடிக் ஜூஸூம் ஈரலிலிருந்து ஊறும் திரவத்திலுள்ள பைல் என்ற பித்த நீரும் ஆகும்<br>(4) பக்வாசயமென்னும் சிறுகுடலில் ஆகாரம் செல்லும்போது அச்சிறுகுடலிலிருந்து ஊறும் இண்டஸ்டைனல் ஜூஸ் என்னும் திரவம் அன்னத்தின் ஜீர்ணத்தைப் பூர்த்தியாக்குகிறது. |

| பித்தத்தின் பெயர் | ஸ்தானம் | தர்மகர்மங்கள் | விசேஷ விஞ்ஞானபர விளக்கம் |
|---|---|---|---|
| **பாசகம்** | | | ஆகவே பாசகத்திலுள்ள ஆக்னேயாம்சம் மேற்சொன்ன விதத்தில் பல்வேறு சுரப்புத் திரவங்களிலிருந்து கிடைக்கப்படுகிறது. ஆயினும் இவையாவும் சேர்ந்து பூர்த்தி செய்வது ஒரே காரியத்தைத்தான். அதாவது ஆகாரத்தை ஜெரித்துப் பரிணாமமாக்குவது. ஆகவே பாசகம் என்பது ஒரு கூட்டுப்பெயர். Digestive Enzymes. |
| **ரஞ்சகம்** | யக்ருத் என்னும் ஈரல் ப்லீகம் என்னும் ஸ்ப்ளீன் | ரஸ ரஞ்சகம் | ஈரலிலிருந்து சுரந்து கிடைக்கும் பைல் என்னும் பித்த நீரின் வாயிலாக ரக்தத்திலுள்ள சிவப்பு அணுக்களை (R. B. C.) உண்டாக்கிடல் |
| **ஸாதகம்** | ஹ்ருதயத்தை அடைந்து ரக்தத்துடன் கலந்து வியாபிக்கிறது. | புத்தி தீக்ஷிண்யம், ஞாபக சக்தி, ஸத்வபுத்தி வாயிலாக ஊக்கத்தையும், ஆற்றலையும், விடாமுயற்சியோடு லக்ஷியத்தைப் பெரும் வாய்ப்பையும் அளிக்கிறது. | சுத்தபித்தம் : தைராய்டு என்னும் கிரந்தியின் சுரப்பிலிருந்து கிடைக்கப்பெறுவது. ஸாதகத்தின் செயல்கள் மிக்கவாறும் ப்ராண வாயுவின் செயல்களை ஒத்திருக்கிறது. ப்ராண வாயு மூர்தா அல்லது சிரஸில் இருப்பதாக சாஸ்த்திரம். ப்ராணனும் உதானனும் ஒன்றோடு ஒன்று தொடர்புபெற்று இயங்கும் தன்மை உடையதாலும் ப்ராணவாயுவுக்கு |

| பித்தத்தின் பெயர் | ஸ்தானம் | தர்மகர்மங்கள் | விசேஷ விஞ்ஞானபர விளக்கம் |
|---|---|---|---|
| **ஸாதகம்** | | | ஹ்ருதயம் ஸ்தானமென்று ஒரு சிலர் (சுச்ருதம்) சொல்வதாலும் ஸாதகம் என்னும் பித்தத்துடன் துணைக்காரணமாக ப்ராணனும் உதானனும் நிற்கின்றன என்பது ஏற்கத்தக்கதாகும். |
| **ஆலோசகம்** | த்ருக் அல்லது சக்ஷுஸ் அதாவது கண் | வர்ணத்தைக் காணும் திறனை மட்டும் பெற்ற இந்திரியம் என்று கண்ணைக் குறிப்பிடுங்கால் சக்ஷுஸ் அல்லது த்ருக் என்னும் பதங்களைத்தான் உபயோகிப்பது சாஸ்திரம். ஆகவே ஆலோசகம் என்னும் பித்தம் கண்ணிலுள்ள வர்ணங்களைக் காணும் திறனை மட்டும் பெற்றிருக்கிறது. | விஷுவல் பர்பிள் என்பதாக ஆதுநிக விஞ்ஞானம் தெளிவித்துள்ள பொருள். |
| **ப்ராஜகம்** | சருமத்தில் இருப்பிடம் | சருமத்திற்கு ஒளி, காந்தி, பொலிவு இவற்றை அளிக்கிறது. | பிக்மெண்ட் என்னும் பொருள் சருமத்திற்கு நிறத்தை அளிப்பதோடு சருமத்தின் நன்நிலையைக் காப்பாற்றிடவும் செய்கிறது. |

# சரபேந்த்ர வைத்திய முறைகள்

## [ பித்தரோக சிகித்ஸை ]

### அயிலேய லேகியம்

முசுமுசுக்கை 200 பலம் எடுத்து நன்றாக அரைத்து 16 மரக்கால் சுத்த ஜலத்தில் போட்டு அடுப்பின் மேலேற்றி கொதிக்கவைத்து எட்டிலொன்றாக குறுகியவுடன் பிசைந்து வடிகட்டவும்.

பிறகு அந்த கஷாயத்துடன்,

| | |
|---|---|
| தண்ணீர்விட்டான்கிழங்கு சாறு | 1 ஆழாக்கு |
| பசுவின் பால் | 1 ஆழாக்கு |
| இலவம்பட்டைச்சாறு | 1 ஆழாக்கு |
| சர்க்கரை | 60 பலம் |

இவை எல்லாம் ஒன்றாகக் கலந்து அடுப்பின் மேலேற்றி தந்துபாகமாக வரும்வரை பாகு காய்ச்சி அதில் :-

| | |
|---|---|
| முந்திரிப்பழம் | அதிமதுரம் |
| திப்பிலி | ஏலம் |
| இலவங்கம் | இலவங்கப்பத்திரி |
| கச்சூரப்பழம் | சந்தனம் |
| வட்டத்திருப்பி | நன்னாரிவேர் |
| முத்தக்காசு | தாமரைக்கிழங்கு |
| விலாமிச்சை வேர் | நெல்லிப்பருப்பு |
| செங்கழுநீர் கிழங்கு | கஸ்தூரி மஞ்சள் |

இவை வகைக்கு 12 பலம் எடுத்து வறுக்கவேண்டிய கடைச் சரக்குகளை பொன்நிறமாக வறுத்து இடித்து வஸ்த்திரகாயம் செய்துவைத்துக்கொண்டு, அத்துடன் காட்டெருமை பால் 7 பலமும் சேர்த்து, மொத்த சூரணத்தையும் மேற்படி பாகில் கொஞ்சம் கொஞ்சமாகத்தூவி, லேகியமாகக் கிண்டவும். கிண்டும்பொழுது தேன் 2 படி சேர்க்கவும்.

பித்தம் - 1

இதனை தான்தோன்றிக்காயளவு தினமும் இரண்டு வேளை உட்கொண்டுவர பித்தம், பிரமை, விகாரம், மூர்ச்சை, அங்கதாகம், தலைசுற்று, பயித்தியம், காமாலை, நீர்க்கடுப்பு, அதிசாரம், தாது நஷ்டம் இவை எல்லாம் தீரும்.

## சிதத்திற்கு, பித்த ரோகத்திற்கு வில்வாதிக் கஷாயம்

| | |
|---|---|
| வில்வவேர் | 30 பலம் |
| வெல்லம் | 30 பலம் |
| சுக்கு | 3 பலம் |
| திப்பிலி | 2 பலம் |
| திப்பிலிமூலம் | 2 பலம் |
| நாகேகசரம் | 1½ பலம் |
| மிளகு | 1 பலம் |
| செவ்வியம் | 1 பலம் |
| தாளிசப்பத்திரி | 1 பலம் |
| ஏலம் | ½ பலம் |
| இலவங்கப்பட்டை | ½ பலம் |
| இலவங்கப்பத்திரி | ½ பலம் |

கடைச்சரக்குகளை இளம் வறுப்பாக வறுத்து வெல்லம் சேர்த்து இடித்துவைத்துக்கொண்டு இரவில் சிறிதளவு எடுத்து சுத்த ஜலத்தில் ஊறப்போட்டு மறுநாள் காலையில் பிசைந்து வடிகட்டிப் பருக பித்தம் தீரும்.

## பித்தரோகத்திற்கு நெல்லிக்காய் எண்ணெய்

| | |
|---|---|
| நெல்லிக்காய்ச்சாறு | ½ படி |
| கரிசலாங்கண்ணிச்சாறு | ½ படி |
| நல்லெண்ணெய் | 1 படி |
| பசுவின் பால் | 4 படி |

இவைகளை ஒன்று கலந்து, ஒரு பலம் அதிமதுரத்தைத் தூள் செய்து, சிறிது பால்விட்டு அரைத்து விழுதாக்கி, மேற்படி எண்ணெய்யுடன் கலந்து குழப்பி, அடுப்பின் மேலேற்றி தைல பதத்தில் காய்ச்சி இறக்கி வைத்துக்கொள்ளவும்.

இதனை உஷ்ண காலங்களில் 4 நாட்களுக்கு ஒருமுறையும், சீத காலத்தில் 8 நாட்களுக்கு ஒருமுறையும், தேய்த்து ஸ்நானம் பண்ணிக்கொண்டுவர, உஷ்ணம் தணிந்து சரீரம் குளிரும், பித்தத்தினால் உண்டான தேககாங்கை தீரும்.

## பித்தத்திற்கு அச்வகந்தாதி ரஸாயனம்

நன்னார் வேர்
நெருஞ்சில் வேர்
கோரைக்கிழங்கு
ஆடாதோடையிலை
கீழாநெல்லி வேர்
நிலக்கடம்பு வேர்
தண்ணீர்விட்டான் கிழங்கு
இலாமிச்சம் வேர்
நற்சாரணை வேர்

இவை எல்லாம் சமனெடை எடுத்துச் சூரணித்தது ஒரு மடங்கு.

அமுக்கிறா வேர் சூரணம் 3 மடங்கு.

***கடைச்சரக்கு :-***

கிராம்பு
திப்பிலி
சுக்கு
மிளகு
சாதிப்பத்திரி
சிறுநாகப்பூ
வாய்விடங்கம்
அதிமதுரம்
அதிவிடயம்

இவை எல்லாம் சமனெடை எடுத்து சூரணித்தது 4 மடங்கு

மேற்படி சரக்குகளை எடைப் பிரகாரம் சூரணித்து வஸ்த்திரகாயம் செய்து ஒன்றாகக் கலந்துவைத்துக்கொண்டு, மொத்த எடைக்கு நிகர் சர்க்கரை எடுத்து பாகுசெய்து, மேற்படிசூரணித்தைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தூவி, வேண்டிய அளவு நெய், தேன் சேர்த்து, லேகியமாகக் கிண்டி வைத்துக் கொள்ளவும்.

தினமும் இரண்டு வேளை கழற்சிக்காயளவு சாப்பிட்டுக் கொண்டுவர பித்த ரோகம் தீரும்.

## முசுமுசுக்கை லேகியம்

முசுமுசுக்கை 100 பலம் எடுத்து நன்றாக அரைத்து சுத்த ஜலம் 4 மரக்காலுடன் கலந்து எட்டிலொன்றாகக் கஷாயம் செய்யவும். பிறகு,

*கடைச்சரக்குகள் :-*

| | |
|---|---|
| தண்ணீர்விட்டான்கிழங்கு | நன்னாரி வேர் |
| பாலிருள் கிழங்கு | திப்பிலி |
| முந்திரிகைப்பழம் | இலவங்கம் |
| சந்தனம் | பேரிச்சம்பழம் |
| செஞ்சந்தனம் | தாமரைவளையம் |
| அதிமதுரம் | நெல்லிமுள்ளி |
| ஏலம் | கச்சோளம் |
| இலவங்கப்பத்திரி | வெட்டிவேர் |
| முத்தக்காசு | நெய்தல்கிழங்கு |
| ஒவ்வொன்றும் | 1 பலம் |
| கூகைநீறு | 4 பலம் |

மேற்படி சரக்குகளை பொடியாக்கிப் பசுவின் பால் 4 படி எடுத்துக்கொண்டு, வேண்டிய பால்விட்டு சூரணத்தை அரைத்து, மிகுந்த பாலுடன் கலந்து குழப்பி முன் வடித்த முசுமுசுக்கைக் கஷாயத்துடன் கலந்து அடுப்பின் மேலேற்றி கொதிக்கவைத்து சர்க்கரை 50 பலம் சேர்த்து பாகு செய்து வேண்டிய அளவு நெய்யும் தேனும் சேர்த்து லேகியமாகக் கிண்டி வைத்துக் கொண்டு தினமும் இருவேளை சாப்பிட்டுக் கொண்டுவர பித்த ரோகங்கள் தீரும்.

## பித்தத்திற்கு வில்வக்குழம்பு

| | |
|---|---|
| வில்வப்பத்திரியிலை | 10 பலம் |
| நெல்லிமுள்ளி | 2 பலம் |

எட்டு மடங்கு சுத்த ஜலம் விட்டு எட்டிலொன்றாகக் கஷாயம் வைக்கவும்.

*கடைச்சரக்குகள் :-*

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | தாளிசப்பத்திரி |
| இலவங்கப்பட்டை | இலவங்கப்பத்திரி |
| செண்பகப்பூ | சிறுநாகப்பூ |
| கூகைநீறு | ஏலம் |
| கோஷ்டம் | அதிமதுரம் |
| பருத்திக்கொட்டை | தாமரைவிதை |

வகைக்கு ஒரு பலம்

| | |
|---|---|
| அரத்தை | சதகுப்பை |
| கஸ்தூரிமஞ்சள் | கோரைக்கிழங்கு |

வகைக்கு 1½ பலம்

கிராம்பு சாதிக்காய் சாதிப்பத்திரி

வகைக்கு 4 விராகனிடை

| | |
|---|---|
| கொம்பரக்கு | 5 பலம் |
| சர்க்கரை | ½ சேர் |
| நெய் | 1½ சேர் |

கடைச்சரக்குகளை நன்றாகச் சூரணித்து மேற்படி கஷாயத்துடன் சேர்த்துக் குழம்பாகக் காய்ச்சி வைத்துக்கொண்டு உட்கொண்டுவர பித்த ரோகங்கள் தீரும்.

## பித்தத்திற்கு சதாவேரித் தைலம்

சீருடைய நன்னாரி சீதேவியாருடன் சித்தமுட்டி
சிந்தில் திருநாமப்பாலை வரி கத்தாழை முத்தமொடு
மாணிக்க மீரிய பொன்னாங்காணி முசுமுசுக்கை
செங்கழுநீர் கிழங்குடன் சதாவேரி கொண்டதனையே
ஆவின்பா லறுனாழி வேகவைத்து நானாழியாக்கு
மளவில் கன்னிகுல மாதர்கூடியே வைத்தநீர்
மறுகுழம் பானபின் மஞ்சட்டி யஞ்சனம்.

(இ-ள்)

| | |
|---|---|
| நன்னாரி | சீதேவி |
| சித்தாமுட்டி | திருநாமப்பாலை |

| | |
|---|---|
| சீந்தில் | முத்தக்காசு |
| வரிக்கத்தாழை | பொன்னாங்கண்ணி |
| மயிர்மாணிக்கம் | செங்கழுநீர்கிழங்கு |
| முசுமுசுக்கை | சதாவரி |

இவைகளைச் சமனெடுத்துப் பொடிசெய்து 6 படி பசுவின் பாலில் போட்டுக் காய்ச்சி 4 படியாகக் குறுகுந்தருவாயில் மஞ்சிட்டி, அஞ்சனக்கல் இரண்டையும் மேற்கூறிய சரக்குகளின் எடைக்கு எடுத்துப் பொடித்துப்போட்டு, அத்துடன் 4 படி நல்லெண்ணெயும் சேர்த்துப் பதமாகக் காய்ச்சி வடித்துவைத்து கொண்டு தேய்த்து ஸ்நானம் செய்துகொண்டுவர பித்தரோகம் அனைத்தும் தீரும்.

## பித்தத்திற்கு வில்வாதி லேகியம்

வில்வவேர் (மேல்தோல் சீவி) பொடியாக்கியது 20 பலம் எடுத்து 4 மரக்கால் தண்ணீரில் போட்டு எட்டிலொன்றாகக் கஷாயம் வைக்கவும். இதில் பனைவெல்லம் 30 பலம் போட்டு தந்துபாகமாக பாகு செய்துவைத்துக் கொள்ளவும்.

***கடைச்சரக்குகள் :-***

| | |
|---|---|
| நற்சீரகம் | 10 பலம் |
| கருஞ்சீரகம் | 10 பலம் |
| செவ்வியம் | 10 பலம் |
| திப்பிலி மூலம் | 6 பலம் |
| திப்பிலி | 5 பலம் |
| தாளிசப்பத்திரி | 5 பலம் |
| ஏலம் | 3 பலம் |
| கிராம்பு | 3 பலம் |
| இலவங்கப்பத்திரி | 3 பலம் |
| மிளகு | 1½ பலம் |

| | |
|---|---|
| கொடிவேலிவேர் | 1 பலம் |
| மேல்தோல்சீவிய சுக்கு | 1 பலம் |
| சிறுநாகப்பூ | ½ பலம் |

இவைகளை உலர்த்தி இடித்து வஸ்த்திரகாயம் செய்து மேற்படி பனைவெல்லப் பாகில் சிறிது சிறிதாகத்தூவி, இரண்டு கொதி வந்தபிறகு இறக்கிவைக்கவும். மறுநாள் தேன் 1 படி சேர்த்துக் கிண்டி கலந்துவைத்துக்கொள்ளவும்.

இதனில் தான்றிக்காயளவு தினம் 2 வேளை கொள்ள உதிரசூலை, வாதம், பித்தம், சேட்டுமம், சுரம், விக்கல், இருமல், மேற்சுவாசம், காசம், மார்நோவு, வாய் நீர் ஊறல், சத்தி, குன்மம், அஜீர்ணம், வாந்தி இவை எல்லாம் தீரும்.

## இரத்த பித்தத்திற்கு எடுத்த அவுடதம்

| | |
|---|---|
| நாவற்பட்டை | அத்தி |
| ஆல் | இச்சில் |
| அரசு | இரளிப்பட்டை |
| முத்தக்காசு | தண்ணிமீட்டான்கிழங்கு |
| அரக்கு | செம்பரத்தம்பூ |
| சந்தனம் | வாழைக்கிழங்கு |
| தாழம்விழுது | தென்னம்பாளை |
| நெல்லிமுள்ளி | காசுக்கட்டி |
| தாமரைக்கிழங்கு | தாமரைவளையம் |
| கருப்பஞ்சாறு | சீலை சுட்ட சாம்பல் |
| நெய்தற்கிழங்கு | பூசணிக்காயிலை |
| கொம்மட்டியிலை | இலவங்கப்பத்திரி |

இவை எல்லாம் ரக்த பித்தத்தில் எடுத்த அவுடதங்கள்

## பித்த விகாரத்திற்கு

இலந்தையிலையை பறித்துக் காடியிற் பிசைந்து வடிகட்டிக் கொடுக்கப் பித்தம் தீரும்.

## பித்தத்திற்கு ஏலாதிச் சூரணம்

| | |
|---|---|
| ஏலம் | அதிமதுரம் |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| முந்திரிகைப்பழம் | சீந்திற்தண்டு |
| பேராமுட்டி | சுக்கு |
| திப்பிலி | தண்ணீர்மிட்டான் |
| நிலப்பனைக்கிழங்கு | கோஷ்டம் |
| அமுக்கிராக்கிழங்கு | முத்தக்காசு |
| நெல்லிமுள்ளி | இலவங்கப்பத்திரி |
| கொத்தமல்லி விரை | அரக்கு |
| பூமிச்சர்க்கரைக்கிழங்கு | கூகைநீறு |
| வெட்டிவேர் | இலாமிச்சம்வேர் |
| நல்ல சந்தனம் | கற்பூரம் |
| கஸ்தூரி | குங்குமப்பூ |
| தக்கோலம் | கஸ்தூரி மஞ்சள் |
| கர்ச்சூரம் | சாதிக்காய் |
| நெருஞ்சில் வேர் | கீழ்க்காய் நெல்லி |

இவைகளை சமனெடை எடுத்துச் சூரணித்து வஸ்திரகாயம் செய்துவைத்துக்கொண்டு நெய்யிலோ தேனிலோ சாப்பிட்டுக் கொண்டு வரவும். பித்தம் சாந்தியாகும்.

பித்தம் அதிகரித்து வாய்வேய்க்காடு கண்டு புண்ணாக விருந்தால், பிரண்டையை சுட்டு கரியாக்கி ஆமணக்கு எண்ணெயிற் குழைத்துப் பூசவும்.

## வேறு ஏலாதிச் சூரணம்

| | |
|---|---|
| ஏலம் | கிராம்பு |
| வெட்டிவேர் | விளாமிச்சம் வேர் |
| பேரீச்சம்பழம் | முந்திரிப்பழம் |
| நெல்லிக்காய் | தாணிக்காய் |
| கடுக்காய் | பருத்திக்கொட்டை |
| திப்பிலி மூலம் | சுக்கு |
| மிளகு | கஸ்தூரி மஞ்சள் |
| கோரைக்கிழங்கு | நெருஞ்சில் வேர் |
| பெருங்காயம் | வெள்ளைப்பூண்டு |
| நெல்லுப்பொறி | கொடுவேலி வேர் |

இவை எல்லாம் சமனெடை எடுத்துப் பொடித்து வஸ்திரகாயம் செய்துவைத்துக்கொண்டு நெய், தேனில் சாப்பிட்டுவர பித்தம் தீரும்.

## பித்தத்திற்கு வில்வாதி லேகியம்

| | |
|---|---|
| வில்வப்பத்திரி வேர் | *30* பலம் |
| சுத்த ஜலம் | *60* படி |

*8* படியாகக் கஷாயம் வைக்கவும்.

| | |
|---|---|
| வில்வக்காய் | *15* பலம் |
| சுத்தஜலம் | *30* படி |

*3* படியாகக் குறுக்கிக் கஷாயம் வைக்கவும்.

இரண்டு கஷாயங்களையும் ஒன்றாகக் கூட்டி அதில் நல்ல வெல்லம் *30* பலம் சேர்த்து பாகு செய்யவும்.

*கடைச்சரக்குகள் :-*

| | |
|---|---|
| திப்பிலி | *6* பலம் |
| செவ்வியம் | *6* பலம் |

| | |
|---|---|
| இஞ்சி | 5 பலம் |
| தாளிசபத்திரி | 5 பலம் |
| மிளகு | 4 பலம் |
| திப்பிலி மூலம் | 2 பலம் |
| சீரகம் | 1 பலம் |
| ஏலம் | 5 வராகனெடை |
| இலவங்கப்பத்திரி | 5 வராகனெடை |

இவை எல்லாம் பொடித்து மேற்படி பாகில் தூவிக் கிண்டி லேகியத்தில் தேன் 1¼ சேர் விட்டுப் பிசரி இறக்கவும்.

இதில் ஒரு காசெடை இருவேளை உட்கொண்டுவர வாந்தி, நெஞ்சு நோவு, பயித்தியம், குன்மம், காமாலை முதலிய வியாதிகள் எல்லாம் தீரும்.

## பித்தம், வாய்க்கசப்பு, வயிறெரிவு, கிருகிருப்பு மயக்கத்திற்கு மருந்து

1. நல்ல ஜீரகம் அரைப்படி எடுத்து தூசி தும்பு இல்லாமல் சுத்தம் செய்து ஒரு வாணையில் போட்டு அது முழுகும்படி எலுமிச்சம்பழச் சாறுவிட்டு ஊறவைத்து எடுத்து நிழலில் உலர்த்தி பத்திரப்படுத்தவும், இதனை விடியற்காலையில் சூரியன் உதிக்குமுன் சிறிது தின்றுவிட்டு மறுபடியும் நித்திரை கொள்ளவும். கைகண்டது. பித்த தோஷங்களெல்லாம் தீரும்.

2. முன்போல் நல்ல ஜீரகம் அரைப்படி எடுத்து கையாந்தகரைச் சாறுவிட்டு ஊறவைக்கவும். சாறு காயக்காய மறுபடியும் விட்டுக்கொண்டுவரவும். இவ்வாறு 3 முறைவிட்டு நன்றாகக் காய்ந்த பிறகு எடுத்து பத்திரப்படுத்திவைத்துக் கொண்டு முன்சொன்னவாறு விடியற்காலையில் தின்றுவர பித்தம் சமனமாகும். கைகண்டது.

3. தனிப்பட்ட நல்ல ஜீரகத்தை விடியற்காலையில் தின்று வந்த பொழுதிலும் பித்தம் சமனமாகும். கைகண்டது.

பத்தியம் :- உப்பு, புளி தவிர்க்கவும்.

## பித்தத்திற்கு ஏலாதி மாத்திரை

| | |
|---|---|
| ஏலம் | அதிமதுரம் |
| தாளிசபத்திரி | கடுக்காய்த்தோல் |
| மலாகா சந்தனம் | இலாமிச்சைவேர் |
| பூலாங்கிழங்கு | கடுகரோகிணி |
| கோரோசனை | அக்கிராகாரம் |
| நன்னாரி வேர் | சடாமாஞ்சில் |
| அதிவிடையம் | சாதிக்காய் |
| சாதிபத்திரி | தேவதாரம் |
| கோட்டம் | சமுத்திரப்பச்சை |

வகைக்கு 1 வராகனெடை எடுத்துப் பொடிசெய்து கஸ்தூரி 2 பணவெடை சேர்த்து கல்வத்திலிட்டு செவ்விளநீர்விட்டு 4 நாட்கள் அரைத்துக் குந்துமணிப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்திக் காயவைத்து எடுத்துவைக்கவும். வேண்டும்பொழுது ஒன்று அல்லது இரண்டு மாத்திரைகளைத் தக்க அனுபான விசேஷத்துடன் கொடுக்க சகலவித பித்த வியாதிகளும் தீரும்.

## பித்தத்திற்கு சதாவரி நெய்

| | |
|---|---|
| வெள்ளரி விதை | ½ படி |
| சதாவரிக்கிழங்கு சாறு | ½ படி |
| அருகம்வேர் | 4 பலம் |
| இலாமிச்சம்வேர் | 4 பலம் |

***கடைச்சரக்குகள் :-***

| | |
|---|---|
| ஏலம் | கிராம்பு |
| தாளிசபத்திரி | சீரகம் |
| சுக்கு | கொத்தமல்லிவிரை |
| சாதிக்காய் | பூலாங்கிழங்கு |
| வால்மிளகு | சோம்பு |

வகைக்கு 1 வராகனெடை பொடித்துப் போடவும்.

| | |
|---|---|
| பனங்கல்கண்டு | ½ பலம். |
| நெய் | ½ படி |

இவை எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்துப் பதத்தில் காய்ச்சி இறக்கவும். இதனை சாப்பிட்டுக் கொண்டுவர பித்தம் தீரும்.

### வேறு சதாவரி கிருதம்

| | |
|---|---|
| சதாவரிக்கிழங்கு சாறு | 8 படி |
| பசுவின் பால் | 8 படி |
| நெய் | 2 படி |

***கலகம் :-***

| | |
|---|---|
| சந்தனம் | தேவதாரம் |
| கஸ்தூரிமஞ்சள் | பூலாங்கிழங்கு |
| அதிமதுரம் | பேரீச்சங்காய் |
| கொடிமுந்திரிப்பழம் | அரேணுகம் |
| இலாமிச்சம் | ஏலம் |
| கோரைக்கிழங்கு | பொன்முசுட்டை |
| தாமரைக்கிழங்கு | கோட்டம் |
| சீந்திற்கொடி | கொத்தமல்லி விரை |
| நெல்லிமுள்ளி | நிலக்குமிழ் |
| சுக்கு | திப்பிலி |

வகைக்கு1 பலம் எடுத்துத் தூள் செய்து சிறிது பாலைவிட்டு நன்றாக அரைத்து விழுதாக்கி மேற்சொன்ன நெய், பால், சாறு இவைகளுடன் கலந்து அடுப்பின்மேலேற்றி பதத்தில் இறக்கவும். இதனில் ஒன்று அல்லது இரண்டு தேக்கரண்டி காலையிலும் மாலையிலும் சாப்பிட்டுகொண்டுவர பயித்திய ரோகம், சிரோரோகம், தலைமயக்கம், கண்ணெரிவு, மூர்ச்சை, வாந்தி, சுரம், இரத்த பித்தம் இவையெல்லாம் தீரும்.

### பித்தத்திற்கு வில்வாதி லேகியம்

| | |
|---|---|
| வில்வவேர் | 60 பலம் |
| சுத்த ஜலம் | 24 படி |

வில்வவேரை தோல் சீவி ஒன்றிரண்டாக இடித்துத் தண்ணீரில் போட்டு ஒரு இரவு முழுதும் ஊறவைத்து மறுநாள் காலையில் அடுப்பின் மேலேற்றி 4 படியாக கஷாயத்தைச் சுருக்கி இறக்கி வடிகட்டி அதில் பழைய வெல்லம் 32 பலம் சேர்த்து பாகு காய்ச்சவும்.

*கடைச்சரக்குகள் :-*

| | |
|---|---|
| *சுக்கு* | *4 பலம்* |
| *திப்பிலி* | *4 பலம்* |
| *மிளகு* | *2 பலம்* |
| *திப்பிலி மூலம்* | *2 பலம்* |
| *சீரகம்* | *1 பலம்* |
| *தாளிசப்பத்திரி* | *1 பலம்* |
| *செவ்வியம்* | *1 பலம்* |
| *சிறுநாகப்பூ* | *½ பலம்* |
| *ஏலம்* | *½ பலம்* |
| *கிராம்பு* | *½ பலம்* |
| *கடுக்காய்* | *½ பலம்* |
| *நெல்லிமுள்ளி* | *½ பலம்* |
| *தான்றிக்காய்* | *½ பலம்* |

இவைகளை எல்லாம் இளம் வறுப்பாக வறுத்துப் பொடிசெய்து வஸ்திரகாயம் செய்துவைத்துக்கொண்டு மேற்படி பாகில் சிறிது சிறிதாகத் தூவி லேகிய பதத்தில் இறக்கியபின், தேன் ½ படி சேர்த்துக் கிண்டி வைத்துக் கொள்ளவும். இதனை தான்றிக்காய் அளவு இரண்டு வேளையும் சாப்பிட்டுவர பலவித பித்தரோகங்களும் தீரும்.

## பித்த ரோகத்திற்கு திரிகடு திரிபலாசச் சூரணம்

| | |
|---|---|
| திரிகடுகு | திரிபலை |
| சித்தரத்தை | வாய்விடங்கம் |
| தேவதாரம் | கோரைக்கிழங்கு |
| தாமரைதாது | இலாமிச்சம் |
| சந்தனம் | அதிமதுரம் |

இவைகளை ஓரிடையாய் எடுத்துச் சூரணித்து வஸ்திரகாயம் செய்து இதற்கு நிகர் சர்க்கரை சேர்த்துவைத்துக்கொண்டு காலையில் திரிகடி பிரமாணம் சாப்பிட்டுவர பித்தரோகம், உந்மாதம், சூலைகள், திமிரம், க்ஷயம் இவைகள் தீரும்.

## பித்தத்திற்கு உருண்டை

| | |
|---|---|
| ஏலம் | இலவங்கம் |
| கெந்தகம் | இரதம் |
| திப்பிலி | மிளகு |
| சுக்கு | |

இவை ஒவ்வொன்றும் ஒரு பணவெடை எடுத்து முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் நன்றாக உறவாகும்படி அரைத்து, பிறகு மற்ற சரக்குகளையும் தூள்செய்து சேர்த்துக் கல்வத்திலிட்டு ஊமத்தம் சாற்றில் அரைத்துக் குண்டுமணி பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைத்து எடுத்து பத்திரப்படுத்தவும்.

வேண்டும்பொழுது ஒன்று அல்லது இரண்டு குளிகையை முலைப்பாலில் இழைத்துக் கொடுக்க பித்தம் தீரும்.

## சதாவரி கிருதம்

| | |
|---|---|
| சதாவரிக்கிழங்கு சாறு | 2 படி |
| பசுவின் பால் | 2 படி |
| பசுவின் நெய் | 1 படி |

***கடைச்சரக்குகள் :-***

| | |
|---|---|
| சந்தனம் | பூலாங்கிழங்கு |
| சரளதேவதாரு | அதிமதுரம் |
| முந்திரிகைப்பழம் | பேரீச்சங்காய் |
| அரேணுகம் | இலாமிச்சம் வேர் |
| ஏலம் | கோரைக்கிழங்கு |
| பொன்முசுட்டை | தாமரைத்தாது |
| கோட்டம் | சீந்தில் சர்க்கரை |
| கொத்தமல்லி | நெல்லிமுள்ளி |
| நிலக்குமிழ் | சுக்கு |
| திப்பிலி | |

இவை வகைக்கு 2 வராகனெடை, சர்க்கரை 5 பலம்

இவை எல்லாம் கலந்து பக்குவத்தில் காய்ச்சிவைத்துக் கொண்டு வேண்டும்பொழுது சிறிது சர்க்கரை சேர்த்து ஒன்று அல்லது இரண்டு தேக்கரண்டி தினமும் இருவேளைச்சாப்பிட வாத பித்தத்தினால் உண்டான தலைவலி, தலைமயக்கம், தாகம், வாந்தி, பழைய சுரம் முதலானவைகள் தீரும்.

### பித்தவாணத்திற்கு அயிலேபகத் தைலம்

| | |
|---|---|
| முசுமுசுக்கைச்சாறு | 4 சேர் |
| கற்றாழைச்சாறு | 2 சேர் |
| நல்லெண்ணெய் | 1 சேர் |

கடைச்சரக்குகள் :-

| | |
|---|---|
| பாலைவேர் | நன்னாரிவேர் |
| சிற்றாமுட்டி | காட்டுப்பயறு |
| காட்டுளுந்து | அதிமதுரம் |
| பேராமுட்டி | |

வகைக்கு ஒரு வராகனெடை எடுத்துத் தண்ணீர்விட்டு அரைத்து மேற்படி எண்ணெயுடன் கலந்து குழப்பி தைல பாகமாய்க் காய்ச்சி வடித்துவைத்துக் கொண்டு தலைமுழுகி வர பித்தவாணம் தீரும். (பித்தவாணம் என்பது தலைசுற்றல், அயிலேபகம் என்பது முசுமுசுக்கை.)

### பித்த சூட்டிற்கு பிருங்காமலகம்

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | 5 சேர் |
| கையாந்தகரை | 5 சேர் |
| நெல்லிக்காய்ச்சாறு | 5 சேர் |
| பசுவின் பால் | 5 சேர் |

அதிமதுரம் 1 பலம் எடுத்துச் சிறிது பால்விட்டு நன்றாக அரைத்து மேற்படி எண்ணெய், சாறுகள், பாலுடன் கலந்து அடுப்பின் மேலேற்றி தைல பாகத்தில் இறக்கிவைத்துக் கொண்டு தலைமுழுகி வரவும், பித்தச் சூடு தணியும்.

## இளநீர் குழம்பு (கல்பம்)

| | |
|---|---|
| இளநீர் | 2 மரக்கால் |
| பால் | 4 படி |

***கடைச்சரக்குகள் :-***

| | |
|---|---|
| அதிமதுரம் | செண்பகப்பூ |
| சந்தனம் | குங்குமம் |
| அகில் | நன்னாரிவேர் |
| கோட்டம் | ஏலம் |
| இலவங்கம் | பச்சிலை |
| செங்கழுநீர்க்கிழங்கு | தகரம் |
| நாகப்பூ | மரமஞ்சள் |
| தாமரைவளையம் | திப்பிலி |
| கடுகரோகிணி | பீதரோகிணி |
| செவ்வியம் | சிறுமூலம் |
| வெட்பாலையரிசி | மஞ்சிட்டி |
| கச்சோலம் | |

இவை வகைக்கு 1 பலம் எடுத்து சூரணித்து சிறிது பால்விட்டு அரைத்து மேற்படி இளநீர், பாலுடன் கலந்து கரைத்துத் தலையில் வார்க்க, கண்ணிலுள்ள அன்னகோபம், கண்ணில் உள்ள மற்ற தோஷங்கள், கண்ணெரிவு, கைகால் எரிவு மற்றும் பித்தத்தாலுண்டான தோஷமெல்லாம் தீரும்.

## பித்த ரோகங்களுக்கு அயிலாதி லேகியம்

| | |
|---|---|
| முசுமுசுக்கைச்சாறு | 2 படி |
| சிறுகீரைச்சாறு | 2 படி |
| கையாந்தகரைச்சாறு | 1 படி |
| நெல்லிக்காய்ச்சாறு | 1 படி |
| பொன்னாங்கண்ணிச்சாறு | 1 படி |
| வில்வயிலைச்சாறு | 1 படி |
| இஞ்சிச்சாறு | 1 படி |

***கடைச்சரக்குகள் :-***

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | சீரகம் |

| | |
|---|---|
| கருஞ்சீரகம் | அதிமதுரம் |
| கோஷ்டம் | வால்மிளகு |
| வாய்விடங்கள் | கொத்தமல்லி |
| சிறுநாகப்பூ | தாளிசபத்திரி |
| ஏலம் | சடாமாஞ்சி |

இவைகள் வகைக்கு பலம்

| | |
|---|---|
| கிராம்பு | 4 வராகனெடை |
| சாதிக்காய் | 4 வராகனெடை |
| சாதிப்பத்திரி | 4 வராகனெடை |

இவைகளைச் சூரணித்து வைத்துக்கொள்ளவும்.

| | |
|---|---|
| வெல்லம் | 10 பலம் |
| சர்க்கரை | 10 பலம் |
| தேன் | 1 படி |
| நெய் | 1 படி |

செய்பாகம் :- பச்சிலைகளைத் தண்ணீர்விட்டு இடித்து மூன்றுதரம் வடிகட்டி, சாறுகளை ஒன்றாய்ச் சேர்த்து அடுப்பின் மேலேற்றி வேண்டிய அளவு சுண்டியபின் வெல்லம், சர்க்கரை இரண்டையும் சேர்த்து பாகுபதம் வந்தவுடன் சூரணத்தைப் போட்டுக் கிளறி பிறகு நெய்யையும், தேனையும் விட்டுக் கிளறி இறக்கவும். இதனைத் தக்க அளவில் உட்கொள்ள பித்தரோகங்கள் தீரும்.

பத்தியம் : கைப்பு, புளிப்பு நீக்கவும்.

## பித்தத்திற்கு லகுகண்டாமலக லேகியம்

கண்டாமலகம் நெல்லிக்காய் கருதுசாறு படியெட்டு
தண்டா நெய்யும் பலமாறு தானே தேனும் நவமணியாய்
வண்டார் குழலாய்ச் சர்க்கரையோர் வளரும் பலந்தான் அன்பதுவும்
அண்டா விளங்கங் கொடுவேலி யதினோ டேலமிலவங்கமுமே

இ-ள் :- நெல்லிக்காய்ச்சாறு 8 படி எடுத்து, அதில் சர்க்கரை 50 பலம் போட்டுக் கொதிக்கவைத்துப் பாகு செய்யவும்.

*கல்கம் :-*

| | |
|---|---|
| விடங்கம் | கொடுவேலி |
| ஏலம் | இலவங்கம் |

இச்சரக்குகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்துக் காயவைத்து இடித்து வஸ்திரகாயம் செய்துகொண்டு பாகிலிட்டு பசுவின் நெய் 6 பலமிட்டுக் கிளறி லேகியபதமாக இறக்கிக் கொள்ளவும். ஆறினவுடன் சுத்தமான தேன் 9 பலம் விட்டுப் பிசைந்துவைக்கவும். தினமும் 3 வராகனெடை இதனை உட்கொண்டுவர பித்த வியாதிகள் எல்லாம் தீரும்.

## பித்தத்திற்கு எண்ணெய்

| | |
|---|---|
| சேவகன்பூண்டு வேர் | 19 பலம் |
| சுத்த ஜலம் | 8 படி |

இதனை 2 படியாகக் குறுக்கிக் கஷாயம் வைத்து

| | |
|---|---|
| கற்றாழைச்சாறு | 4 படி |
| நெல்லிக்காய்ச்சாறு | 4 படி |
| நல்லெண்ணெய் | 4 படி சேர்த்து |

*கல்கம் :-*

| | |
|---|---|
| இருவேலிவேர் | இலாமிச்சம் வேர் |
| நன்னாரி வேர் | முத்தக்காசு |
| செங்கழுநீர்க்கிழங்கு | தாமரைவளையம் |
| பொன்னாங்கண்ணிவேர் | சிறுநாகம் |
| பாலைவேர் | நிலக்குமிழ்வேர் |
| அதிமதுரம் | கோஷ்டம் |
| சந்தனம் | |

இச்சரக்குகளை வகைக்கு ¼ பலம் வீதமெடுத்துச் சூரணித்து, சுத்த ஜலம்விட்டு நன்றாக அரைத்து விழுதாக்கி மேற்படி எண்ணெய், சாறுகளுடன் கலந்து குழப்பி அடுப்பின் மேலேற்றி தைலபாகமாக வடித்து வைத்துக்கொண்டு தலை முழுகி வரவும்.

## பித்தத்திற்கு

*பித்தம் சுழற்றி கிறுகிறுத்துப்*
*பெருக்க நடக்கிற் றுயராகில்*
*ஒத்த வுண்டை சடனிட்டு*
*வுகந்திப் பாகி சளியிட்டுச்*
*சித்தந் துளங்கா திளநீரிற்*
*சிறு பயறு சீரகம்*
*மித்தப் பசுப்பால் நெற்பொரியும்.*
*மிகவே காஞ்சு கொள்ளுவதே*

*மிக்க மிளகு நேர்வாளம்*
*மிகாமற் கூட்டி யொருமூன்றாய்*
*தக்க வளவே தேசிக்காய்*
*தன்சா றதனி லெழுவெந்து*
*வொக்கக் கூட்டி யரைத்துண்டை*
*யுருட்டிச் சூரைக் காயளவு*
*நக்க தேசிப் பழச்சாற்றி*
*னன்றாஞ் சுழற்றிப் பித்தமிதே.*

*பித்த முதலாய்ச் சுரவீக்கம்*
*பெருத்த வாயுச் சலமறிப்புச்*
*சுத்தப் படவே விரோசனமாம்*
*சுகமாக முட்டுக் களைதீர்க்கு*
*மெத்தச் சுடவே வெந்நீர்கொள்*
*விரோசிப் பாகுஞ் சுத்திசெய்யு*
*மெத்துப் பூரே யணுமிடத்து*
*விடாத பசும்பாற் கஞ்சிகொள்ளே.*

**(இ - ள்) :-**

***1.** இளநீர், பசும்பால், சீரகம், சிறுபயறு, நெற்பொரி இவைகளை ஒன்றாகக் கூட்டிக் கஞ்சி காய்ச்சி சாப்பிட்டால் பித்தம் தலைக்கேறியதால் உண்டாகும் கிறுகிறுப்பு, மயக்கம், பிரமை முதலியன தீரும்.*

2. மிளகு ஒரு பங்கு, நேர்வாளம் மூன்று பங்கு. நேர்வாளத்தை முதலில் எலுமிச்சம்பழச் சாற்றில் வேகவைத்து பிறகு மிளகினுடன் கூட்டி இரண்டையும் எலுமிச்சம்பழச் சாற்றினால் நன்றாக வரைத்து தூதுவளங்காய் பிரமாணமுள்ள குளிகைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி எடுத்துப் பத்திரப் படுத்திக்கொள்ளவும்.

தீரும் வியாதிகள் :- பித்தம், சுரம், வீக்கம், வாயு, துர்நீர், அறிப்பு முதலியவை தீரும். நன்றாக பேதியாகி குடலை சுத்தப்படுத்தும். மூட்டு வேதனைகள் தீரும். வெந்நீர் சாப்பிட்டால் நன்றாக பேதியாகும். அதிகமானால் பசும்பால் கஞ்சி சாப்பிடவும்.

### பித்தத்திற்கு மகா ஏலாதிச் சூரணம்

| | |
|---|---|
| சிறுஏலம் | பெருஏலம் |
| அதிமதுரம் | சீரகம் |
| கருஞ்சீரகம் | கொடிமுந்திரிகைப்பழம் |
| சீந்திற் சர்க்கரை | நன்னாரி |
| திப்பிலி | சதாவரிக்கிழங்கு |
| நிலப்பனைக்கிழங்கு | இலுப்பைப்பூ |
| அமுக்கிரா | கோரைக்கிழங்கு |
| பொன்முசுட்டை | நெல்லிமுள்ளி |
| கொத்தமல்லி | தாமரைத்தாது |
| மரமஞ்சள் | மூங்கிலுப்பு |
| கோஷ்டம் | தக்கோலம் |
| வால்மிளகு | சந்தனம் |
| பச்சைக்கற்பூரம் | கஸ்தூரி |
| குங்குமப்பூ | சடாமாஞ்சில் |
| பூலாங்கிழங்கு | சாதிக்காய் |
| நெருஞ்சிக்காய் | பூனைக்காலிவிதை |
| விளாம்பிசின் | சயிலேயகம் |
| சிறுநாகப்பூ | |

இவைகளை வகைக்கு 1 பலம் எடுத்து காயவைத்து வறுக்க வேண்டியவைகளை இளம் வறுப்பாக வறுத்துச் சூரணித்து

வஸ்திரகாயம் செய்துவைத்துக்கொண்டு, இதற்குச் சமனெடை சர்க்கரை சேர்த்து நன்றாக ஒன்றுபடக் கலந்து ஒரு புதுப்பானையில் பத்திரப்படுத்தவும்.

வேளைக்கு வெருகடி வீதம் இரு வேளையும் தேனில் மத்தித்துச் சாப்பிட பயித்திய ரோகங்கள் தீரும். உடம்புக்குப் பலம் கொடுக்கும். பாண்டு, காமாலை, ரக்தபித்தம், தாகம், சுரம், அரோசிகம், க்ஷயம், ரக்தக்ஷயம், மேகம் இவை முதலான ரோகங்கள் தீரும். ஒரு மண்டலம் உட்கொள்வது நலம்.

## பித்தத்திற்கு திராட்சாதிச் சூரணம்

| | |
|---|---|
| கொடிமுந்திரிகைப்பழம் | |
| செங்கழுநீர்க்கிழங்கு | நெற்பொரி |
| அதிமதுரம் | பேரீச்சங்காய் |
| நன்னாரிவேர் | மூங்கிலுப்பு |
| இலாமிச்சம்வேர் | நெல்லிமுள்ளி |
| கோரைக்கிழங்கு | சந்தனம் |
| தக்கோலம் | சாதிக்காய் |
| சன்னலவங்கப்பட்டை | இலவங்கப்பத்திரி |
| ஏலம் | சிறுநாகப்பூ |
| திப்பிலி | கொத்தமல்லி விரை |

இவை வகைக்கு ½ பலம், சீனிச்சர்க்கரை 9½ பலம்.

மேற்சொன்ன சரக்குகளைச் சூரணித்துச் சர்க்கரையைக் கலந்து வைத்துக்கொண்டு தேனில் இரண்டு வேளையும் சாப்பிட பித்தரோகம், தாகம், பாண்டு, காமாலை, ரக்தபித்தம், மகோதரம், தாகசுரம், அரோசிகம், மேகம், க்ஷயரோகம், இரக்தக்ஷயம் இவை தீரும்.

## பித்தத்திற்கு லேகியம்

| | |
|---|---|
| ஏலம் | சீரகம் |
| கொத்தமல்லி | அதிமதுரம் |
| சுக்கு | முந்திரிகைப்பழம் |

நற்சந்தனம் நெல்லிமுள்ளி
செங்கழனி கோஷ்டம்
இலவங்கப்பட்டை செண்பகப்பூ

இவைகளை வகைக்கு 1 பலமாக எடுத்துச்சூரணித்து அதன் சமனளவு பழஞ்சர்க்கரை கூட்டி லேகியமாக்கி அந்திசந்தி இரண்டு வேளையும் கழற்சிக்காய் அளவு கொள்ளவும்.

***பத்தியம் :-*** பசும்பால், நெய், துவரை கூட்டவும். கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும்.

மயக்கம், கிறுகிறுப்பு, தலைசுற்றல் இவை தீரும். பசியுண்டாகும், கைகண்டது.

## இதுவுமது

வேலிப்பருத்திச் சமூலம் கொண்டுவந்து, நிழலில் உலர்த்திச் சூரணித்து வஸ்திரகாயம் செய்துவைத்துக்கொண்டு, வெருகடிப் பிரமாணம் தேனில் குழைத்துத் தின்ன பித்தம் தீரும். உஷ்ணமதிகமானால் எருமைத் தயிரும் சோறும் சேர்த்துச் சாப்பிடவும்.

## பித்தத்திற்கு வேறு

கொத்தமல்லி சுக்கு
வில்வவேர் குருந்தொட்டி வேர்
இவை வகைக்கு 1¼ வராகனெடை

பொன்நிறமாக வறுத்த கடுக்காய் 3 (எண்ணிக்கையில்) களிப்பாக்கு (சுட்டுக்கருகியது) 3 (எண்ணிக்கை), நெற்பொரி 1 உழக்கு, பிரண்டைப்பொடி செய்தது சிறிதளவு, எல்லாவற்றையும் ஒன்றிரண்டாக நசுக்கி 2 படி சுத்த ஜலத்தில் போட்டு ஒரு உழக்காகக் குறுக்கி வடிக்கட்டி சாப்பிட பேதியாக பித்தம் சமனமாகும். கைகண்டது.

## 40 வகை பித்தத்திற்கு எண்ணெய்

பொன்னாங்கண்ணி முசுமுசுக்கை
நரிப்பயறு கீழாநெல்லி

இவைகளைத் தனித்தனியே சமூலமாக எடுத்து விழுதாக அரைத்தது நார்த்தங்காய் அளவு, முதல் நாள் இரவு ஊறப்போட்டு அரைத்த வெந்தயம் நார்த்தங்காய் அளவு, எல்லா விழுதையும் ஒன்றாகக் கலந்து வேண்டிய அளவு பசுவின் நெய்விட்டுக் குழப்பி குழிப்புடமாக வைத்து எடுத்துக் கொள்ளவும். இதனை உள்ளுக்கும் கொடுத்துத் தலைக்கும் தேய்த்துவர எல்லாவித பித்தமும் தீரும். (குழிப்புடம் - குழித்தைல முறைப்படி இறக்குவது.)

## இன்னமொன்று

1. நாயுருவி வேர் எலுமிச்சங்காயளவு அரைத்துப் பாலில் கலந்து கொடுக்கப் பித்தத்தைப் போக்கும். பத்தியம் : புளித்த பழஞ்சோறு உண்ணவும்.

2. கரும்பைத் தண்ணீரில் ஊறப்போட்டு விடியற் காலத்தில் தின்னவும். இவ்வாறு மூன்று நாட்கள் சாப்பிடப் பித்தம் தீரும்.

## வேறு தைலம்

| | |
|---|---|
| விளக்கெண்ணெய் | ½ படி |
| பசும்பால் | ¾ படி |
| முலைப்பால் | ¾ படி |
| சீரகம் | ¾ பலம் |
| பொன்னாங்காணிவேர் | ¾ பலம் |
| நெல்லிமுள்ளி | ¾ பலம் |

சரக்குகளை எடுத்து சிறிது பால் விட்டு விழுதாக அரைத்து மேற்சொன்ன கூட்டுடன் கலந்து நாள் முழுவதும் சூரியபுடம் வைத்து சாயங்காலம் எரித்து தைல பதத்தில் வாங்கி வைக்கவும். இதனை தேய்த்து ஸ்நானம் பண்ணும்பொழுது சீயக்காய், நாகல்பருப்பு இரண்டையும் சேர்த்து அரைத்து வைத்துக்கொண்டு தேய்த்துக்கொள்ளவும்.

மேற்படி எண்ணெய், பசுவெண்ணை, முலைப்பால் மூன்றையும் சமனெடை கூட்டி அதில் கொஞ்சம் சீரகத்தை முடிந்து போட்டு சூரிய புடத்தில் வைக்கவும். இதனை ராக்காலங்களில் படுக்கப் போகும்பொழுது பெரிய மிளகளவு சாப்பிடவும்.

***பத்தியம்*** :- புளி, மோர், பால், கத்தரிப்பிஞ்சு மற்ற பதார்த்தமாகாது.

முருங்கைப்பிஞ்சு, வாழைப்பிஞ்சு, கீரை, உப்பு ஆகும்.

## பித்தம், மருந்தீட்டிற்கு

| | |
|---|---|
| பூசணிக்காய்ச்சாறு | படி |
| எலுமிச்சம்பழச்சாறு | படி |

இவைகளை ஒன்றாகக் கலந்து அதில் பாதாள பேதியாவது சாறணை வேறாவது ஒரு எலுமிச்சங்காய் அளவு விழுதாக அரைத்துக் கரைத்து 3 நாள் உள்ளுக்குக் கொடுக்க பித்தம், மருந்தீடு இவை தீரும்.

## பித்தரோக குணம்

மெய்யே நடுங்குந் தலைவலிக்கு
மேனி வெளிறுங் கண்ணுறங்கும்
பொய்யா துயருங் கிறுகிறுக்கும்
போத நயன மின்னெரியுங்
கைகால் கனத்துக் கனத்து வத்துங்
கண்ணு மூக்கு மஞ்சணிக்கும்
மையார் வெய்யில் விம்மி விழும்
அறிவாம் பித்த ரோகமிதே.

இ-ள் : தலை நடுங்குதல், தலைவலி, உடம்பு வெளிறிப் போதல், கண்கள் மூடிக்கொள்ளுதல், சரீரவாட்டம், கிறுகிறுப்பு, கண்ணெரிவு, கைகால்களில் கண்டுகண்டான வீக்கம் கண்டு வற்றும். கண்கள் மூக்கு இவைகள் மஞ்சள் நிறங்கொள்ளும், மயங்கிவிழுவான். இவைகள் பித்த ரோகத்தின் குணங்களாகும்.

## பித்தரோக நெய்

பற்றலர்த மக்குரிய பற்பமொடு-பொன்னாங்காணி
பங்கிலுரை சீதேவியும்
பரியதோர் தாழம்விழு துரியநீ ருடன் மணற்குரும்
பனையதும்
முத்தமொடு நன்னாரி யிலாமிச்ச மிருவேலி
முரியகை யாந்தகரை
முசுமுசுக் கையுடன் முத்திய கரும்பினில்
முந்திரிகை பேரிச்சினி
லத்தமு மிகுத்துதவு ஆவினது பாலதுவும்
அமிர்தவள்ளி நீர்வள்ளியும்
அறவடித் தொருதண்ணீ ரளவினிற் கொண்டதனை
யவித்துவைத் தாறவைத்தே
இத்தனை யெரித்துவைத் தளவினி லெட்டிலொன்
றானபின் னிருநாழி நெய்வீசியே
இயலா கியமருந் தாகிய கடைச்சரக் கினிதே யுரைத்திடவே

கோட்டமொடு சந்தனங் கொத்தமல்லி மாஞ்சிலுங்
கொண்டிடுஞ் சதகுப்பையுங்
கூடிடு மரத்தையோ டிருவேலி சீரகங் கொண்டேய
தன்பின்னமே
துட்டுள தடக்கமும் பச்சிலைக்கச் சோலமும்
சுமாகன செவ்வள்ளியுந்
துறந்தமுத மானதோர் நெல்லிமுள்ளி உள்ளதுந்
தூய்மையுள்ள சிற்றேலமும்
மட்டுலவு கின்றமலை யிருவேலி யுங்கூட மகாதேவ
தாரமுடனே
மாசந்த னத்தினோடு வாசம் பலிந்திருக் கும்மா
னிம்பமதுவு
முட்டகத்தி தூதுவளை முக்கழஞ்சு வாச்சவாய்
முயன்றநெய் தனில் வேகிடில்
மூடுகா துகள் பித்த ரோகமது வாராது முனிரிஷியோர்
கள்சொன்னதே

| | |
|---|---|
| இ-ள்: தாமரைக்கிழங்கு | பொன்னாங்காணி |
| சீதாசெங்கழுநீர் | தாழம்விழுதுச்சாறு |
| நிலப்பனங்கிழங்கு | முத்தக்காசு |
| நன்னாரி | இலாமிச்சம்வேர் |
| இருவேலிவேர் | கையாந்தகரை |
| முசுமுசுக்கை | கருப்பஞ்சாறு |
| பச்சை திராக்ஷை | பேரீச்சம்பழம் |
| அமிர்தவள்ளி | நீர்வள்ளி |

வகைக்கு இரண்டு பலமெடுத்து நன்றாக நசுக்கி 32 படி சுத்த ஜலம் விட்டு ஓர் இரவு ஊறவைத்துப் பிறகு அடுப்பிலேற்றி 4 படியாகக் குறுக்கவும். ஆறிய பிறகு வடிகட்டிவைத்துக்கொண்டு,

சரக்குகள்:

| | |
|---|---|
| கோஷ்டம் | சந்தனம் |
| கொத்தமல்லி | ஜடாமாஞ்சி |
| சதகுப்பை | சிற்றரத்தை |
| கடுகுரோகணி | சீரகம் |
| வெட்டிவேர் | பூலாங்கிழங்கு |
| பச்சிலை | நெல்லிமுள்ளி |
| செவ்வள்ளிக்கொடி | மலைதாங்கிவேர் |
| சிற்றேலம் | செஞ்சந்தனம் |
| தேவதாரம் | தூதுவளை |
| இலாமிச்சம் | செவ்வகத்திப்பட்டை |
| மலைவேப்பம்பட்டை | |

இவை வகைக்கு 3¾ விராகனெடை எடுத்துச் சூரணித்து பால்விட்டு கல்கமாக அரைத்து மேற்படி கஷாயத்துடன் கலந்து குழப்பி பசும்பால் 2 படி, பசுவின் நெய் 2 படி சேர்த்து அடுப்பின் மேலேற்றி பதத்தில் இறக்கிவைத்துக்கொள்ளவும்.

இதனை ஒன்று அல்லது இரண்டு கரண்டி வீதம் இருவேளை சாப்பிடவும். பித்தரோகங்கள் வராமல் தடுக்கும். வெளிப்பிரயோக மாகவும் உபயோகிக்கவும்.

## பித்தம் சகலத்திற்கும் உருண்டை

சீரகம் 10 வராகனெடை
விளாயிலை 10 வராகனெடை

இவை இரண்டையும் தனித்தனியாக கருக வறுத்து அம்மியில் வைத்துப் பொடிசெய்து, நெய்விட்டுப் பிசைந்து சிறுசிறு வில்லையாகச் செய்து அந்திசந்தி இரண்டு வேளையும் உட்கொள்ளவும். கைகண்டது. பித்தம் தீரும்.

## பித்தகுண நிதானம்

உண்டியை மறக்க லாக்கு
முட்டிநெஞ் செரிக்க லாக்கு
மண்டிநின் றெதி ரெடுத்து
வயிற்றையே வலிக்க லாக்கும்
பண்டுமுன் பழம லத்திப்
பயித்தயஞ் சேர்வ தாக்கும்
விண்டுதான் பித்த குண
மிதுவென விளம்பினாரே. (1)

தலையுங் கனத்து வோங்காரந்
தானே மிகவே வாயூற
நிலையுங் கெட்டுக் கிறுகிறுத்து
நின்றே வேர்த்து நெஞ்செரிக்குங்
குலையுஞ் செய்யும் பித்த குணம்
கொள்ளுங் குணமு மிதுவென்று
கலையால் வல்ல தமிழ்வாணர்
கண்டே பெருகப் பேசுவரே (2)

1. சாப்பாடு வேண்டியிறாமல் அன்னத்வேஷம் இருக்கும். நெஞ்செரிவு, நெஞ்சுமுட்டுதல், வாந்தி எடுப்பான், வயற்றுவலி காணும், மலம் கெட்டுப்போனதாகக் காணும், தலை கிறுகிறுத்து வரும். இவைகள் பித்தகுண நிதானம் என்று பெரியோர்கள் சொல்லியிருக்கின்றனர்.

2. தலைகனம், தலைவலி, வாயில் நீருரல், நிலைகெட்டுத் தடுமாறுதல், அதிக வியர்வை, நெஞ்செரிவு முதலியவை உண்டாகி வயிறெரியும். இவை பித்த வியாதியின் நிதானமென்று வயித்தியகலையில் வல்லோர் சொல்லுகின்றனர்.

## பித்த குணத்திற்கு மருந்து

பக்தர்கள் தமக்குரிய வர்பொதி பொன்காணி பங்கிலுறை சீதேவியும்
பரியதோர் தாழைவிழு துரிய தொருநீருடன் பனையது
முத்தமொடு நன்னாரி முத்திய விலாமிச்சு மொய்குழற் கிருவேலியு
மொசுமொசுக் காந்தகரை முற்றிய கருப்பநீரு முந்திரிகை பேரீஞ்சதுவு
மத்தொடு மிகுத்து தாவினெய் யதுரங்க மாதுளை வள்ளி நீர்வள்ளியு
மாவிடத் தொருதண்ணீ ரளவினது கொண்டதை வளமாக வூறவைத்து
யித்தனையு மொத்தளவி லெட்டிலே குன்றியிலிரு நாழி
நெய் யதில் விட்டபின்றே சரக்கது
வையென படிப்படியி லியல்பாய்ச் சரக்கது வையே.

கோட்டமொடு செண்பகங் கொத்தமல்லி மதுரமுங் குலவு
நற்சீரகமதுவுங்
கோலக்கி ளியூறல் தக்கோல மாஞ்சி லொடு கொண்டரி தகிகுப்பை
துட்டக் கடுகு மொரு பச்சிலை கச்சோலஞ் சுகமான செவ்வள்ளி
நதுரறுக்கதுதாநெல்லி முள்ளியுள்ள துந்தூய் மையுள்ள சித்தமேலமு

மட்டையா மருக்குலவு மலையிலிரு வேலியு மாதேவர் முழுதுமாக
மாசந்தி னோடுவாசம் பலித்திரு மோனவன் னிதம் மதுவுடனே
முட்டறுகு வித்தனையு முக்கழஞ் சதுவாய் முயன்றிடுக நெய்யதுவினில்
மூடுகாது பித்தகுண ரோகமது வாராது முனிவரரு ளிச்செய்ததே.

| | |
|---|---|
| இ-ள் : அரசந்துளிர் | பொன்னாங்கண்ணி |
| சீதாசெங்கழுநீர் | தாழைவிழுதுச்சாறு |
| நிலப்பனங்கிழங்கு | கோரைக்கிழங்கு |
| நன்னாரி | விளாமிச்சம் |
| வெட்டிவேர் | முசுமுசுக்கை |
| கையாந்தகரை | கருப்பஞ்சாறு |
| பச்சைதிராக்ஷை | பேரீச்சம்பழம் |
| மாதளைத்தளிர் | தண்ணீர்விட்டான் |

இவைகளை வகைக்கு 2 பலம் எடுத்து நன்றாக நசுக்கி, ஒரு புதுப்பானையில் போட்டு 16 படி ஜலம் விட்டு 2 படியாகக் குறுகும்படி கஷாயம் செய்து ஆறியபின் வடிகட்டிக் கொள்ளவும்.

W09

***கல்கத்திற்குச் சரக்குகள் :-***

கோஷ்டம்
கொத்தமல்லிவிரை
நல்லசீரகம்
தக்கோலம்
கடுக்காய்
கடுகுரோகிணி
பூலாங்கிழங்கு
சீந்தில்
சித்தாமுட்டி
சாதிக்காய்
வெட்டிவேர்
சந்தனம்
கொடிவேலி
அறுகம்வேர்

செண்பகமொட்டு
அதிமதுரம்
கிளியூறம்பட்டை
ஜடாமாஞ்சி
சதகுப்பை
பச்சிலை
செவ்வள்ளிக்கொடி
நெல்லிமுள்ளி
ஏலம்
வட்டத்திருப்பி
தேவதாரு
விலாமிச்சை
பேராமுட்டி

இவை வகைக்கு 3 ¾ விராகனெடை எடுத்து, நன்றாக தூள்செய்து, அம்மியில் வைத்து மேற்படி கஷாயம்விட்டு அரைத்து விழுதாக்கி முன்சொன்ன கஷாயத்துடன் கலந்து, சுத்தமான 2 படி நெய்யும் விட்டு, எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து அடுப்பின் மேலேற்றி பதத்திலிறக்கி வைத்துக் கொண்டு, தலையில் தேய்த்துக்கொண்டும் உள்ளுக்கு ஒன்று அல்லது இரண்டு தேக்கரண்டி வீதம் ஒரு மண்டலம் சாப்பிட பித்த வியாதிகள் அணுகாது பாதுகாக்கப்படுவான்.

***பத்தியம் :-***

செய்யில்மாப் பண்டிதனே வகையைக் கேளுந்
திருத்தமாக நித்திரைதான் செய்யிலிடக்கை
கிழென்னும் பெருத்த புணர்ச்சி தனைத்தள்ளும்
பேணிக்கொள்ளும் பயித்தியமு மிகுத்தவடைவே
மண்டலமு மேதுஞ் செயலாம் பின்னாளே.

இ-ள் : ஒ( மண்டலம் பகல் நித்திரை, புணர்ச்சி இவைகளைவிட் )விடவேண்டும்.

## பித்தக்கெ திப்பு, குடல்சோர்வு, வரட்சிக்கு மருந்து - "நெய்"

முத்தக்கா ; மலை தாங்கி
முட ிர்ந்த துத்தி நிலப் பனைவேர்
கைத்த கா கட்டி நெல்லி
கட குங் குந்திருக் கஞ்சீரகமும்
சுத்தமிக ெ வஞ் சாதிக் காய்
துட ங்க மிலவம் பிசின் விடையும்
வைத்தே ( யரித்து நெய் கொள்ள
மட ங்கும் பித்தங் கொதிப் பறுமே.

இ-ள் :

| | |
|---|---|
| கோரைக்கி ழங்கு | வட்டத்திருப்பிவேர் |
| பெருந்துத் ிவேர் | நிலப்பனைவேர் |
| காசுக்கட்டி | நெல்லிமுள்ளி |
| சாதிக்காய் | சீரகம் |
| சாதிக்காய் | இலவம்பிசின் |
| அதிவிடையம் | |

இவைகளை வகை க்கு அரை பலமெடுத்து நன்றாக இடித்துத் தண்ணீர்விட்டரை ந்து ஒரு படி சுத்தமான நெய்யுடன் கலந்து குழப்பி மெழுகு பதமாகக் காய்ச்சி வடிகட்டி வைத்துக் கொண்டு இருவே ளையும் சாப்பிட்டுக்கொண்டுவர மயக்கம், பித்தக்கொதிப்பு, குடல் சோர்வு, வரட்சி முதலியவை தீரும்.

## வரட்ச , பித்தத்திற்கு மருந்து நெய்

சீதேவியார் பூண்டு ச்சாறுதான் குறுணி
சிறந்த பா நாழி நெய்யிரு நாழிவிட்டு
மாது சதகுப்பை ெ ாத்தமல்லி யதிமதுரம்
வனகோட் ஞ் செண்பகப்பூ சந்தனமேலஞ்சீரகம்

கோதிலாக் கற்கண்டோ ரொன்று ஐங்கழஞ்சு
கொண்டரைத்துக் கரைத்துநெய் பதத்தில் வடித்து
தீதிலா வாரத்திற் றலையில் வார்த்துக் கட்ட
சிதகாது வரட்சி பித்த மந்த மிவைதீரும்.

இ-ள் :

| | |
|---|---|
| சீதாசெங்கழுநீர்ச் சாறு | - 1 மரக்கால் |
| பசுவின் பால் | - 1 படி |
| பசுவின் நெய் | - 2 படி |

***கடைச்சரக்குகள் :-***

| | |
|---|---|
| சதகுப்பை | கொத்தமல்லி |
| அதிமதுரம் | கோஷ்டம் |
| செண்பகப்பூ | சந்தனம் |
| ஏலம் | சீரகம் |
| கற்கண்டு | |

இவை வகைக்கு 5 கழஞ்சு (6¼ வராகனெடை) எடுத்து அம்மியில் வைத்து சிறிது பால்விட்டு அரைத்து முதலாவது பாகத்தில் சொன்ன சாறு, பால், நெய் முதலியவைகளுடன் ஒன்றாகக் கலந்து குழப்பி அடுப்பின்மேலேற்றி எரித்து மெழுகு பதத்தில் இறக்கிவைத்துக்கொண்டு தலைக்குத் தேய்த்து ஸ்நானம் பண்ணிக்கொண்டுவர வரட்சி, பித்தம், மந்தம் இவைகள் தீரும்.

### பித்தம் சத்திக்கு அயிலாதிச் சூரணம்

ஆனதோ ராவ்ருத பித்தத்துக் கயிலாதி
சூரணத்துக் கடைவு கேளுஞ்
சேர்த்ததோர் முசுமுசுக்கை திருநாமப் பாலைசிறு
நெருஞ்சில்நன் னாரிசிறுபுள் ளடியும்
வாய்த்ததொரு முந்திரிகை பாலைவேரும்
வரிவெட்டி வேருடனே ஆம்பல் வேரும்
வருந்தாமல் நெய்தற் கிழங்கொடு நிலப்பனையுங் கூட்டி
நேரொத்த சந்தனம் சரள மிலவம் பிசின்
நிறையொக் கயிவை சரியள நேர்பொடிகள் செய்து

நெல்லிக் காய்பாற் கிழங்கு நேர்கருப் பஞ்சாறு
நிறைந்த தண்ணிமிட்டான் கிழங்கு ணிற்சாறும் கூட்டியே
பிசறியதுக் குழிப்பட வுலர்த்திக் கொள்வதொரு மூவிரற்
பொடிதனை யெடுத்துக் கோவினொடு
பாலோடு சர்க்கரையுங் கூட்டி
குழைத்தே ஒருமாதம் கொள்வீ ராகில்
ஆனதோ ராவ்ருத யிருபத்துனாலு மனலா யெரிக்கின்ற
பித்தமொடு சத்தியுந் தீராத பித்தமிரு பத்துனாலுஞ்
சீவனார் தம்ம ருளாலே தீருமிவை தானே.

| | | |
|---|---|---|
| இ-ள்: | முசுமுசுக்கை | திருநாமப்பாலை |
| | சிறுநெருஞ்சில் | நன்னரி |
| | சிறுபுள்ளடி | திராக்ஷை |
| | பாலைவேர் | வெட்டிவேர் |
| | ஆம்பல்வேர் | நெய்தல்கிழங்கு |
| | நிலப்பனை | சந்தனம் |
| | சரளதேவதாரு | இலவம்பிசின் |

இவைகளை சமனெடை எடுத்துப் பொடிசெய்து வைக்கவும். பிறகு நெல்லிக்காய்ச்சாரு, பால்கிழங்குச்சாறு, கருப்பஞ்சாறு தண்ணீர்விட்டான்கிழங்குசாறு இவைகளை ஒரேயளவாய் எடுத்து ஒன்றுகலந்து முன்சொன்ன சூரணத்துடன் கலந்து உலர்த்திவைத்துக் கொள்ளவும்.

இந்த சூரணத்தில் மூவிரல் கொண்டதை பசும்பாலில் சர்க்கரை கலந்து அனுபானமாக ஒருமாத காலம் உட்கொண்டு வந்தால் ஆவ்ருதபித்தம், பித்தயெரிச்சல், சர்த்தி (வாந்தி) 24 வகை தீராத பித்தரோகங்களும் தீரும்.

## தலைசுழல் பித்தத்திற்கு

| | |
|---|---|
| நெல்லிக்காய்ச்சாறு | ½ படி |
| நற்புடோல்ச்சாறு | ½ படி |
| கோவைச்சாறு | ½ படி |

| | |
|---|---|
| வரிப்பயற்றஞ்சாறு | ½ படி |
| சதாவரிச்சாறு | ½ படி |
| கற்றாழைச்சாறு | ½ படி |
| சந்தனச்சாறு | ½ படி |
| முசுமுசுக்கைச்சாறு | ½ படி |

இவைகளை ஒன்றாகக் கலந்து அதில்,

| | |
|---|---|
| அதிமதுரம் | கோட்டம் |
| கடுகுரோகிணி | செண்பகப்பூ |
| இலவங்கத்தோல் | நன்னாரிவேர் |
| குங்குமம் | சந்தனம் |
| செங்கழுநீர் | ஏலம் |
| தாமரைவளையம் | இலாமிச்சைவேர் |
| இருவேலிவேர் | |

ஒவ்வொன்றும் 4 கழஞ்சு (½ பலம் ) அரைத்து மேற்படி சாறுகளுடன் கூட்டி கரைத்து சுத்தமான நல்லெண்ணெய் 4 படி சேர்த்து அடுப்பின் மேலேற்றி பதத்தில் வடித்துவைத்துக் கொண்டு தலைக்கு தேய்த்து ஸ்நானம் செய்துகொண்டுவர பித்தரோகங்கள் யாவும் தீரும்.

## பித்தம், வாய்வு, வெட்டைக்கு
## மஹாவில்வாதி லேகியம்

சொல்லரிய வில்வவேர் அன்பத்து னாலுபலம் தோன்றி
இலாமிச்சம்வேர்
தூதுவளைநன் னாரிமுன்னை பெருவாகை வேர்சொல்
நிலவாகை வேரும்
நல்லரிய சிறுவிளா பெருவிளா பாதிரிநா வெட்டிவேர்
முசுக்கை
நாடுதேத் தாம்வேர் இவையெல்லாம் ஓரோன்று
நன்றாயீரஞ்சுபலமாம்
வல்லரிப வேரிதனை அழைத்திதை யிடித்துவா கான
பானை யிற்போட்டு
வந்தநீர் தூணிப்பதக்கு நீரதனில் விட்டுவடி யவே
எட்டிலொன்றாய்

*கல்லரிய அடுப்பினில் காய்ச்சியிரு மெள்ளவே*
*கண்டகொம் மட்டிமாதளை*
*கனத்தேதோர் நிலப்பனங் கணவிழர் யிஞ்சியுங்*
*கருது வகைநாழி*
*கூட்டியே முன்னாழிச் சாறுகஷாய யத்திலவை*
*கூறுமிடை சர்க்கரையுடன்*
*கோதரவடித் துக்குழம்பா யெடுத்துப்பின்*
*கொள்ளுகிற கற்க வகைகேள்*

*நாட்டின கிராம்புடன் திரிகடுக திரிபலை*
*நல்லியிரு சீரகமுடன் நவிலும் பருத்திவிரை*
*ஏலம் இலவங்கம் நற்சந்தனம் செவியமும்*
*தேடும் அரேணுகம் தேவதாரம் விழால்*
*சிறுபுள் இலுப்பைமலருந் திகழுஞ் சடாமாஞ்சில்*
*நெய்தல் வில்வக்கனி திகழான முந்திரிகைப்பழம்*
*தேட்டமுட னிதுவெல்லாம் வச்சிர தூளிதம்பண்ணி*
*திகழும் குழம்பினில் தூவியே சேரவே*
*ஆவின் நெய் விட்டுப் பிரட்டி.*

*இ-ள் : தோல் சீவிய 54 பலம் வில்வவேரை முதலில் சிறு துண்டுகளாக நறுக்கி பஞ்சுபோல் நசுக்கிக் கொள்ளவும். அத்துடன்,*

| | |
|---|---|
| இலாமிச்சம்வேர் | தூதுளைவேர் |
| நன்னாரிவேர் | முன்னைவேர் |
| பெருவாகைவேர் | நிலவாகைவேர் |
| சிறுவிளாவேர் | பெருவிளாவேர் |
| பாதிரிவேர் | வெட்டிவேர் |
| முசுமுசுக்கைவேர் | தேத்தாம்வேர் |

*ஒவ்வொன்றும் 10 பலம் நன்றாக இடித்து எல்லாவற்றையும் ஒரு புதிய மண்பாண்டத்தில் போட்டு சுத்த ஜலம் 6 மரக்கால் வார்த்து அடுப்பில் வைத்து சிறு தீயாக எரித்து எட்டிலொன்றாகக் குறுக்கி ஆறவிட்டு வடிகட்டி அத்துடன் கொம்மட்டிமாதளைச்சாறு, நிலப்பனங்கிழங்குச்சாறு, இஞ்சிச்சாறு இவை வகைக்கு 1 படி சேர்த்துக்கொண்டு 2 வீசை சர்க்கரை சேர்த்துப் பாகுவைக்கவும்.*

| | | |
|---|---|---|
| **கல்கம் :-** | கிராம்பு | சுக்கு |
| | மிளகு | திப்பிலி |
| | கடுக்காய் | தாணிக்காய் |
| | நெல்லிக்காய் | நல்லசீரகம் |
| | கருஞ்சீரகம் | பருத்திவிதை |
| | ஏலம் | இலவங்கம் |
| | சந்தனம் | செவ்வியம் |
| | அரேணுகம் | தேவதாரம் |
| | விழாலரி | சிறுபுள்ளடி |
| | சடாமாஞ்சில் | இலுப்பைப்பூ |
| | வில்வப்பழம் | நெய்தல்கிழங்கு |
| | திராக்ஷைப்பழம் | |

இவையெல்லாம் தூள்செய்து வஸ்திரகாயம் செய்துவைத்துக் கொண்டு மேற்படி பாகில் சிறுகச்சிறுகத் தூவி லேகியமாகக் கிண்டி வேண்டிய அளவு நெய்விட்டுப் பிசரி எடுத்துவைத்துக் கொண்டு சாப்பிட்டுவர பித்தரோகங்கள் தீரும்.

## உந்மாத பித்தத்திற்கு "காகநிம்பாதி கிருதம்"

| | |
|---|---|
| ஆதொண்டையிலைச்சாறு | 1 படி |
| தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு | 1 படி |
| முசுமுசுக்கைச்சாறு | 1 படி |
| ஆடாதோடைச்சாறு | 1 படி |
| நெருஞ்சிச்சாறு | 1 படி |
| கார்போகலிலைச்சாறு | 1 படி |
| கொம்புபாகலிலைச்சாறு | 1 படி |
| நெய் | 1 படி |
| ஆட்டுப்பால் | 2 படி |

| | | |
|---|---|---|
| **கல்கம் :-** | கடுக்காய் | தாணிக்காய் |
| | நெல்லிப்பருப்பு | அதிமதுரம் |
| | சந்தனம் | அகில் |
| | தேவதாரு | பேரீச்சம்பழம் |
| | கருஞ்சீரகம் | நல்லசீரகம் |
| | இலவங்கப்பட்டை | நாகணம் |

இவைகளை வகையொன்றுக்கு 3 வராகனெடை எடுத்துத் தூள் செய்து அம்மியில் வைத்துப் பால்விட்டு நன்றாக அரைத்து விழுதாக்கி மேற்படி சாறுகள், பால், நெய் முதலியவை களுடன் நன்றாகக் கலந்து குழப்பி அடுப்பின்மேலேற்றி எரித்துப் பக்குவமாக இறக்கி 20 பலம் சர்க்கரை சேர்த்து வைத்துக்கொண்டு தினமும் காலையில் ஒன்று அல்லது இரண்டு தேக்கரண்டி வீதம் சாப்பிட்டுக்கொண்டுவர உந்மாதம், மதிப்பிரமை, பயித்தியப் பிரமை, காக்கை வலிப்பு (அபஸ்மாரம்) இவையெல்லாம் தீரும்.

குறிப்பு :- கார்போகலிலை கிடைக்காவிடில் கார்யோகலரிசிக் கஷாயத்தைச் சேர்த்துக்கொள்ளவும்.

## பித்தப் பிரமை, தலை கிறுகிறுப்பு, சத்தி, தலைவலி, காதிரைச்சல் இவைகளுக்கு எண்ணெய்

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | 1 படி |
| கையாந்தகரைச்சாறு | 1 படி |
| ஆதண்டையிலைச்சாறு | ½ படி |
| நெல்லிமுள்ளிக்கஷாயம் | 1 படி |
| பசுவின் பால் | 1 படி |

இவைகளை ஒன்றாகக்கூட்டி அதில் 2 பலம் அதிமதுரத்தைப் பால்விட்டரைத்துக் குழப்பி அடுப்பின் மேலேற்றிப் பக்குவமாக எரித்து மெழுகு பதத்தில் வடித்துவைத்துக் கொண்டு தலைமுழுகிவர மேற்சொன்ன பித்த ரோகங்கள் தீரும். கைகண்டது.

## பயித்தியம், கிறுகிறுப்பு, மயக்கம், தியக்கம், தாகம், எரிவு, சுரம், வயிற்றெரிவு இவைகளுக்குக் கஷாயம்

| | |
|---|---|
| மாதளையிலை | ஒருபிடி |
| தேற்றான்விதை | இரண்டு (எண்ணிக்கை) |
| புத்தோடு (புதிய பானையோடு) | ஒருபிடி |
| நெற்பொரி | ஒருபிடி |

இவை நான்கையும் 4 படி ஜலத்தில் போட்டு ½ படியாகக் கஷாயம் வைத்து உள்ளுக்குக் கொடுக்க நாவறட்சி தீரும், நீர் பிரியும்.

## வேறு விழுது

கோவைத்தண்டு அரைத்த விழுது ஒரு எலுமிச்சங்காய் அளவு, வெண்ணெய் ஒரு எலுமிச்சங்காயளவு, தேற்றான்விதை 2 (எண்ணிக்கையில்) அரைத்தது, பருத்தியிலை அரைத்த விழுது எலுமிச்சங்காயளவு, இவைகளைப் பசுவின் மோரில் கலக்கி உள்ளுக்குக் கொடுத்துக் கொண்டுவர இரண்டு நாட்களில் நீர் பிரிந்து எரிவு, தாகம், மயக்கம், அசதி, பல விகாரங்களும் தீரும். கைகண்டது.

## வேறு உள்ளுக்கு நெய்

| | |
|---|---|
| *சத்தனம் (சிரா)* | *பலம் 1* |
| *அதிமதுரம்* | *பலம் 1* |
| *நன்னாரிவேர்* | *பலம் 1* |
| *பசுவின் நெய்* | *சேர் 2* |

மேற்சொல்லிய மூன்று சரக்குகளையும் நன்றாகச் சூரணம் செய்து அம்மிக்கல்லிலிட்டு பாலவிட்டு நன்றாக வரைத்து நெய்யுடன் சேர்த்து அடுப்பிலேற்றிச் சிறு தீயாக எரித்துப் பதமுறக் காய்ச்சி வடித்துப் பத்திரப்படுத்துக.

இந்த கிருதத்தை வேளைக்கு 2, 3 தேக்கரண்டி வீதம் அந்திசந்தி சிறிது கற்கண்டுத்தூள் கூட்டிக் கலந்து கொடுத்து வருக.

***தீரும் வியாதி :*** வாய் ரணம், குடல் ரணம், நீர்தாரை உள்ரணம், தேக எரிவு, உட்சூடு முதலியவை குணமாகும்.

***பத்தியம் :*** ஆகாரத்தில் காரத்தை மாத்திரம் கூடியவரை குறைத்துக்கொள்ளவும்.

## பயித்திய வியாதி சகலத்திற்கும்

| | |
|---|---|
| *கூகைநீறு* | *1 வராகனெடை* |
| *சர்க்கரை* | *2 பலம்* |
| *நெய்* | *1 படி* |
| *சந்தனக்கஷாயம்* | *1 படி* |

இவைகளை ஒரு மண்பாண்டத்திலிட்டுப் பக்குவமாகக் காய்ச்சி வடித்துக்கொண்டு அதில் மறுபடியும் கூகைநீரும் சர்க்கரையும் போட்டுக் கிண்டி வைத்துக்கொண்டு காலை மாலை இரண்டு நேரமும் சிறு கரண்டியளவு சாப்பிட்டுக் கொண்டுவரவும். இதனால் வறட்காமாலை, மஞ்சட்காமாலை, செங்கமலக் காமாலை முதலிய பலவித வியாதிகளும் குணமாகும். கைகண்டது.

## பித்த மயக்கத்திற்கு

மலாக்காய் சந்தனத்தை அரைத்த விழுது ½ பலம் எடுத்து ½ பலம் வெண்ணையில் மத்தித்து விழுங்கவும். இவ்வாறு ஐந்து நாட்கள் உட்கொள்ள பித்தம், மயக்கம், பயித்தியம் இவை எல்லாம் தீரும்.

## பயித்திய வாயுவுக்கு

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | ஓமம் |
| கறியுப்பு | பெருங்காயம் |
| வளையலுப்பு | வெடியுப்பு |
| இந்துப்பு | கல்லுப்பு |
| வெங்காரம் | அப்பளாக்காரம் |
| சவர்க்காரம் | அரத்தை |
| ஆனைத்திப்பிலி | கடுக்காய் |
| தான்றிக்காய் | நெல்லிப்பருப்பு |
| கருஞ்சீரகம் | நற்சீரகம் |
| சித்தரமூலம் | கண்டங்கத்திரிவேர் |
| தூதுவளைவேர் | சங்கம்வேர் |

இவை ஒவ்வொன்றும் வராகனிடை 5 எடுத்து சூரணம் செய்து அச்சூரணத்திற்குப் பாதி எடை சிவதை வேர்ச் சூரணம் கூட்டி எல்லாவற்றிற்கும் சமன் மிளகரணை வேர்ச் சூரணம் கூட்டி வைத்துக்கொண்டு, வேண்டும்பொழுது 1¼ வாரகனெடை தேனில் மத்தித்துக்கொடுக்கவும். பித்தம் தீரும்

## ஓடிக்கொண்டு திரிகிற பயித்தியத்திற்கு

| | |
|---|---|
| ஊமத்தை விதை | 5 எண்ணிக்கை |
| மிளகு | 10 எண்ணிக்கை |

இவை இரண்டையும் இளஞ்சூடான வெந்நீர் விட்டு அரைத்து, அந்த விழுதிற்குச் சமன் எருமை வெண்ணெயில் வைத்து 10 நாட்கள் கொடுக்கவும்.

பிறகு 10 ஊமத்தை விரையும் 15 மிளகும் அரைத்து அதற்குச் சமன் எருமை வெண்ணெயில் வைத்துக் கொடுக்கவும். இவ்வாறு 35 நாட்கள் கொடுக்கவும். இவ்வாறு மொத்தம் 45 நாட்கள் கழித்ததும் பயித்தியம் தெளிந்து சரீரமும் புஷ்டியாகும்.

**பத்தியம் :-** பால் சாதமும், பயத்தங்கஞ்சியில் உப்பிட்டும் சாப்பிடவும். இது கைகண்டது.

## பயித்தியம் எடுக்கிறதற்கு

தேத்தான் கொட்டைப்பழம் 1 வராகனெடை வெந்நீரில் அரைத்துக் குடிக்கவும். பயித்தியம் அதிகமானால் பச்சரிசியும் பச்சைப்பயறும் போட்டுக் கஞ்சி காய்ச்சிக் குடிக்கவும்.

## பயித்தியம் பிடித்தவனுக்கு நசியம்

வெள்ளைச்சாரணை வேர், ஈரவெங்காயம் இவை இரண்டையும் இடித்துப் பொட்டணம் கட்டிக்கொண்டு இரண்டு துளி இரண்டு மூக்கிலும் நசியம் செய்தால் பயித்தியம் தீரும். இவ்வாறு 3 நாட்கள் செய்யவும்.

## வேறு நசியம்

முசுருமுட்டை ரசம்
பனைமட்டை ரசம்

இவை இரண்டும் சமனாக எடுத்து அதில்,

| | |
|---|---|
| நொச்சியிலை | கழற்சிக்காயளவு |
| தும்பையிலை | கழற்சிக்காயளவு |
| துளசியிலை | கழற்சிக்காயளவு |
| திப்பிலி | பாதி கழற்சிக்காயளவு |
| மஞ்சள் | பாதி கழற்சிக்காயளவு |

இவை எல்லாம் ஆட்டு மூத்திரம்விட்டு இடித்து முன்னிருந்த முசுருமுட்டை, பனைமட்டை ரஸங்களுடன் ஒன்றாகச் சேர்த்து ஒரு துணியில் பொட்டணங்கட்டி இரு நாசிகளிலும் ஒன்று அல்லது இரண்டு துளி நசியம் செய்யவும்.

நான்காம் நாளன்று புளியயிலை கொண்டுவந்து இடித்து ரஸம் பிழிந்து அந்த ரஸம் 1 சேர் எடுத்து தலைமயிரை விலக்கிக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாகச் சூடு காணும்படியாய்த் தேய்க்கவும். அதையே உடல் பூராவும் தடவவும். பிறகு வெய்யிலில் இரண்டு நாழிகை இருக்கவைத்து அப்பால் நான்கு பானை சலம் சூடு பொருக்கும்படியாய்த் தலையில் விடவும். பயித்தியம் தீரும்.

***பத்தியம் :-*** கத்திரிப்பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, முளைக்கீரை, பச்சைப்பயறு, பொரித்த ரஸத்தில் எலுமிச்சம் பழச்சாறுவிட்டுக் கொடுக்கவும். பயித்தியம் தெளிந்த பிறகு நாற்பது நாட்கள் மருந்து சாப்பிடவும்.

## பயித்தியத்திற்கு மருந்து

எருமைத் தயிரில் அன்றிட்ட வெள்ளாட்டுப் புழுக்கையை முதல் நாள் 9, மறுநாள் 7, மூன்றாம் நாள் 5 இவ்வாறு குறைத்தவாறு சேர்த்துக் கொடுக்கவும்.

எலுமிச்சம்பழச்சாறும் சர்க்கரையும் பழம்புளியும் கூட்டி ஒரு மாதம் கொண்டால் எவ்வித பயித்தியமும் தீரும். கைகண்டது.

## பயித்தியத்திற்கு

தாழையின் விழுதின் சாறுந்
தக்கபா லொக்கக் கொண்டு
வாழையுங் குளமுங் கூட்டி
மகிழ்ந்து நீ குடிப்பீராகில்
தாழ்வுறு வியாதி தீருந்
தனதுமே லிளைப்புத் தீரும்
வீழியே யெழுந்த பித்தம்
விரவியே வோடிப் போமே.

இ-ள் : தாழைவிழுதுச்சாறு, வாழைக்கிழங்குச்சாறு. பசுவின் பால் இவைகளை ஒன்றாகக் கலந்து சர்க்கரை கூட்டிக் குடித்தால் பித்த வியாதி, இளைப்பு முதலியவை சீக்கிரத்தில் குணமாகும்.

## வேறு

பயற்றினிற் பருப்பை வாங்கிப்
பருவிள நீரை விட்டு
வியற்புற இரவி லெங்கும்
விழுந்தநீ ரூற்றிக் கொண்டு
நயற்புறச் சீனி கூட்டி
நயம் பெறக் குடித்தபோது
தியற்புற சத்தி மாறுந்
தீர்வது பித்தந் தானே.

பயற்றம் பருப்பை ஒரு இரவு பூராவும் இளநீரில் ஊறப்போட்டு காலையில் அதை வடிகட்டி சீனி கூட்டிக் குடித்தால் பித்தம், வாந்தி முதலியவை தீரும்.

## பயித்தியம் பிடித்தவனுக்குச் சூரணம்

| | |
|---|---|
| சுக்கு | 2 பலம் |
| திப்பிலி | 1 பலம் |
| சீரகம் | 1 பலம் |

| | |
|---|---|
| மிளகு | 1 பலம் |
| ஏலம் | ½ பலம் |
| இலவங்கப்பத்திரி | ½ பலம் |
| பருத்திக்கொட்டைப் பருப்பு | ½ பலம் |
| நெற்பொரி | ½ பலம் |

இவை எல்லாவற்றையும் இடித்து வஸ்திரகாயம் செய்து அதற்கு நிகர் சர்க்கரை கலந்து சாப்பிடவும். பயித்தியம் தீரும்

## பயித்தியத்திற்கு நெய் பண்ணும்வகை

| | |
|---|---|
| பசுவின் நெய் படி | செண்கபகப்பூ |
| நீலிவேர் | செங்கழுநீர் |
| வெல்லம் | கோஷ்டம் |
| ஏலம் | பொன்னாங்கண்ணி வேர் |
| இலவங்கம் | சிறுகீரை வேர் |
| அதிமதுரம் | ஆரைவேர் |

ஒவ்வொன்றும் 1 பலம்

வேர் வகைகளை முதலில் உணர்த்தி சிறு துண்டுகளாக நறுக்கிப் பொடிசெய்து பிறகு மற்ற சரக்குகளைப் பொடிசெய்து ஒன்றுகூட்டி, பால்விட்டரைத்து நெய்யுடன் குழப்பி அடுப்பின் மேலேற்றி சிறு தீயாக எரித்துப் பதத்தில் இறக்கி உள்ளுக்கும் கொடுத்து, மேலுக்கும் பூசவும். பயித்தியம் தீரும்.

***பத்தியம் :-*** கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும்.

## பயித்தியத்திற்கு மருந்துகள்

1) முடக்கத்தான் இலையை விழுதாக அரைத்து, சர்க்கரை சேர்த்து உட்கொள்ளவும்.

2) கற்றாழஞ்சோறு சர்க்கரை சேர்த்துப் பிசைந்து, பசுவின் பாலுடன் கொடுக்கவும்.

3) சீரகத்தில் எலுமிச்சம்பழச்சாறு வார்த்து, பாவனை செய்து எடுத்து, சர்க்கரை சேர்த்து காலையில் உட்கொள்ளவும்.

4) சுக்கு மேல்தோல் சீவி, பசுவின் நெய் வார்த்து, வறுத்து இடித்துப் பொடியாக்கி, சர்க்கரை கலந்து இரு வேளையும் கொள்ளவும்.

5) முசுமுசுக்கையை உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து வெருகடிப் பிரமாணம் சர்க்கரை சேர்த்து, பசும்பாலுடன் உட்கொள்ளவும்.

6) நெல்லியிலையை வேகவைத்துப் பிசைந்து ரசத்தைப் பிழிந்து வடிகட்டிக் குடிக்கவும். வயிறு கழியும்.

7) இஞ்சிச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, நெல்லிக்காய்ச் சாறு, பேய்ப்புடல்ச் சாறு, நரிப்பயத்தஞ்சாறு இந்த ஐந்து சாறுகளையும் ஒன்றுகூட்டி சர்க்கரை சேர்த்துக் கொடுக்கவும்.

## பயித்தியத்திற்கு மருந்து

ஆண் கடுக்காய்ப் பருப்பை வேண்டியமட்டும் எடுத்து, ஒரு புதுச்சட்டியில் போட்டு, அதன்மேல் கோமூத்திரத்தை வார்த்து, ஒரு நாள் முழுவதும் ஊறப்போட்டு, மறுநாள் கையாந்தகரைச் சாற்றிலூறப்போட்டு, மூன்றாம் நாள் எலுமிச்சம்பழச் சாற்றிலூறப்போட்டு எடுத்து, அத்துடன் சீரகம் கலந்துகொண்டு, ஒரு மண்டலம் உட்கொள்ளவும். உஷ்ணம், பயித்தியம் முதலானவை குணமாகும். கைகண்டது.

***பத்தியம் :-*** புளிப்புத் தவிர்க்கவும்.

## பயித்தியம் முதலானதற்கு வில்வாதி லேகியம்

வில்வவேர் 200 பலம்,

| | |
|---|---|
| இலாமிச்சம்வேர் | நன்னாரி வேர் |
| பெருவாகைவேர் | சிறுவாகைவேர், |
| சிறுவிளாவேர் | பெருவிளாவேர் |
| பாதிரிவேர் | வெட்டிவேர் |
| முசுமுசுக்கை வேர் | தேத்தாம்வேர் |

இவை வகைக்குப் 1 பலம். இவை எல்லாவற்றையும் இடித்துப் புதுப் பானையில் போட்டு 24 மரக்கால் தண்ணீர் வார்த்து எட்டிலொன்றாகக் கஷாயம் வைத்து,

| | |
|---|---|
| கண்டங்கத்திரிச்சாறு | 1 படி |
| கொம்மட்டிமாதளைச்சாறு | 1 படி |
| எலுமிச்சம்பழச்சாறு | 1 படி |
| இஞ்சிச்சாறு | 1 படி |

மேற்படி கஷாயத்துடன் சேர்த்து, அதில் சர்க்கரை 50 பலம் கரைத்துக் காய்ச்சிக் குழம்பாக்கி பாகம் வந்ததும்

| | |
|---|---|
| கிராம்பு | ஏலம் |
| பருத்திவிரை | அதிமதுரம் |
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | கடுக்காய் |
| தாணிக்காய் | நெல்லிக்காய் |
| இலவங்கப்பட்டை | சீரகம் |
| செண்பகப்பூ | பரிமளப்பூ |
| தாளிசப்பத்திரி | சதகுப்பை |
| சந்தனம் | வில்வப்பழம் |
| முந்திரிகைப்பழம் | மரமஞ்சள் |
| மாவுலிங்கம் | கோஷ்டம் |
| செங்கழுநீர்க்கிழங்கு | கொத்தமல்லி |
| சிறுதேக்கு | இந்துப்பு |
| எலுமிச்சைவிரை | செவியம் |
| கோரங்கம் | விளாம்விரை |
| நாகப்பூ | தேவதாரம் |
| விழாலரிசி | சித்திரமூலம் |
| சடாமாஞ்சில் | |

இவைகளை ஒரே நிறையாகவெடுத்து இடித்துச் சூரணித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு, மேற்படி பாகம் வந்த பாகில் சிறுகச் சிறுகத் தூவி நெய் 1 படியும், தேன் 1 படியும் விட்டுக் கிண்டி லேகியமாகக் கிளறிவைத்துக் கொள்ளவும். இதை தினமும் இரு பொழுதும் சாப்பிடவும்.

***தீரும் வியாதியாவன :-*** சுவாசம், அரோசிகம், விக்கல், சர்தி, சூலை எரிவு, பாண்டு, காசம், மகோதரம், வீக்கம், கால் கையெரிவு, வெள்ளோக்காளம், அன்னத்துவேஷம், க்ஷயம் 16,

பழஞ்சுரம் 64, பயித்தியம் 40, இரக்தம், அஸ்த்திசுரம், உட்காய்ச்சல், மருந்தீடு, கிராணி, அதிசாரம் இவை எல்லாம் தீரும்.

## பித்த வகைகள்

| | |
|---|---|
| அஜீரண பித்தம் | காமில பித்தம் |
| ஆம்ல பித்தம் | ச்வதே பித்தம் |
| நேத்திர பித்தம் | புசங்க பித்தம் |
| காமாலை பித்தம் | சிரோ பித்தம் |
| மூர்க்க பித்தம் | மதுர பித்தம் |
| குசும பித்தம் | குரோத பித்தம் |
| பிரம பித்தம் | சீத பித்தம் |
| சுறாந்த பித்தம் | கிருஷ்ண பித்தம் |
| தமபாஷ பித்தம் | சேத்ம பித்தம் |
| துர்கெந்த பித்தம் | மரண பித்தம் |
| சூரியவிரண பித்தம் | விவரண பித்தம் |
| ரக்த பித்தம் | |

## பயித்தியத்திற்கு சீதேவி செங்கழுநீர் எண்ணெய்

| | |
|---|---|
| சீதேவிசெங்கழுநீர்ச்சாறு | 1 படி |
| சீந்தில்தண்டுச்சாறு | 1 படி |
| நெல்லிக்காய்ச்சாறு | 1 படி |
| கற்றாழைச்சாறு | 1 படி |
| கரிப்பான்சாறு | 1 படி |
| பசுவின்பால் | 2 படி |
| நல்லெண்ணெய் | 1 படி |

இவைகளை ஒன்றாகக் கலந்து அதில் அதிமதுரம் 6 பலம் பொடிசெய்து அம்மியில் வைத்துப் பால்விட்டரைத்துக் கரைத்து அடுப்பின் மேலேற்றிக் காய்ச்சி வடித்து தலைமேல் (பட்டைகட்டி) தங்கும்படியாகச் செய்து ஊறவிட்டு முழுகிவர சர்வ பயித்தியமும் தீரும்.

## சர்வ பயித்தியத்திற்கும் நெல்லிக்காய் எண்ணெய்

| | |
|---|---|
| நெல்லிக்காய்ச்சாறு | 1 படி |
| கற்றாளைச்சாறு | 1 படி |
| கரிப்பான்சாறு | 1 படி |
| சீந்தில்ச்சாறு | 1 படி |
| பசும்பால் | 5 படி |
| நல்லெண்ணெய் | 2 படி |

இவைகளை ஒன்றாகக்கூட்டி முன்போல் அதிமதுரம் 6 பலம் எடுத்து பால் விட்டு நன்றாக வரைத்துக் கரைத்துப் பதத்தில் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு தலைக்கும் மேலுக்கும் உபயோகிக்க (உச்சி முதல் உள்ளங்கால்வரை) சர்வவித பயித்தியமும் தீரும். கைகண்டது.

## 40வகை பயித்தியத்திற்கும் இளநீர் எண்ணெய்

| | |
|---|---|
| இளநீர் | 1 படி |
| பசும்பால் | 1 படி |
| நல்லெண்ணெய் | 1 படி |

ஒன்றாகக் கலந்து அதில்

| | |
|---|---|
| அதிமதுரம் | குங்குமப்பூ |
| சந்தனம் | அகில் |
| கோஷ்டம் | ஏலம் |
| இலவங்கம் | இலாமிச்சு |
| இருவேலி | நன்னாரிவேர் |
| விசுவாசி | நெய்தற்கிழங்கு |
| தகரம் | கிராம்பு |
| சடாமாஞ்சி | தண்ணீர்விட்டான்கிழங்கு |
| செண்பகமொட்டு | முத்தக்காசு |
| சாதிக்காய் | வெள்ளுள்ளி |
| கடுகரோகிணி | புனுகு |
| பச்சைக்கற்பூரம் | |

ஒவ்வொன்றும் 1¼ வராகனெடை பொடிசெய்து இளநீர்விட்டு அரைத்துக் கலந்து வடித்து வைத்துக்கொண்டு, தலைக்குமிட்டு கண்ணுக்குமிட்டு, நசியமும் செய்துவரப் பயித்தியம் 40-ம், நயனரோகம், சிரோவேதனை எல்லாம் தீரும்.

## பயித்தியத்திற்கு மருந்து

பேய்ப்புடல், முசுமுசுக்கை, பாசிப்பயறு இவை மூன்றையும் ஒரு புதுச்சட்டியில் ½ படி தண்ணீரில் ஒருநாள் முழுவதும் ஊறப்போட்டு, மறுநாள் சட்டியிலுரைத்துக் கழுவி, தண்ணீரை இறுத்துக்கொண்டு, எலுமிச்சம்பழம் இரண்டு பிழிந்து நற்சீரகம் 1 வராகனெடை பொடிசெய்து போட்டு கலக்கிக் கொடுக்கவும். இவ்வாறு 3 நாட்கள் கொடுத்து, அதன்பிறகு தலையைக் கீறி எலுமிச்சம்பழச்சாறு விட்டுத் தேய்த்து 100 பானை தண்ணீர் விடவும். மருந்தை கைமாறாமல் கொடுக்கவும்.

## பித்த பாண்டுவுக்கு

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | சீரகம் |
| கருஞ்சீரகம் | கற்கடகம் |
| அரப்பொடி | |

இவைகளை ஒரே எடையாக எடுத்துப் பொடி செய்து, புதுக்கலயத்திற்போட்டு, எலுமிச்சம்பழச்சாறு விட்டுக் கலந்து எட்டு நாட்கள் ஊறப்போட்டு எடுத்துக் கையான்தகரைச் சாறு விட்டரைத்து கழற்சிக்காய் காயளவு தின்னவும்.

***பத்தியம் :-*** கசப்பு, புளிப்புத் தவிர்க்கவும்.

## வெறிகொண்ட பயித்தியம்தீர மருந்தும் துவாலையும்

முசுமுசுக்கை சமூலத்தை எருமைப்பால் பசும்பால் இரண்டும் விட்டு இடித்த சாறு 2 படி எடுத்து

| | |
|---|---|
| பசு வெண்ணை | 1 தேங்காய் அளவு |
| எருமை வெண்ணை | 1 தேங்காய் அளவு |
| தேன் | ½ படி |
| கழுதைப்பால் | ½ படி |
| இஞ்சிச்சாறு | ½ படி |

இவைகளை ஒன்றாகக் கலந்து அதில் 3 பலம் கருப்பட்டி தட்டிப்போட்டு குழம்பாகக் காய்ச்சி வடித்துவைத்துக் கொண்டு காலையிலும் மாலையிலும் மூன்று எலுமிச்சங்காயளவு சாப்பிட்டுவரத் தீரும்.

## துவாலை

ஆதளையிலை, முத்தெருக்கஞ்செவி மூலம் இவை இரண்டையும் ஒருவருடம் சென்ற காடியாவது அல்லது நன்றாகப் புளித்த மோராவது விட்டு இடித்து, உலர உலர உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்வரை மூன்று நாளிடவும்.

இஞ்சிச்சாறு ஒரு பங்கும் சர்க்கரை இரண்டு பங்கும் கூட்டி உள்ளுக்குக் கொடுக்கவும். பயித்தியம் தீரும். உக்கிரமாக இருக்குமாகில் 20 நாட்கள் அல்லது ஒருமாதம் உள்ளுக்கு மருந்தும் மேலுக்குத் துவாலையும் இடவும்.

## வெள்ளோக்காளத்திற்கு

சிறுபயறு, கூவிளைவேர், வேம்பினீர்க்கு இவை மூன்றுங்கூட்டி 1 படி நீர் வார்த்து உழக்காகக் காய்ச்சிக் குடிக்கவும்.

## வெள்ளோக்காளத்திற்கு வேறு

1) வில்வக்காயை நீரிலுரைத்துச் சுண்டைக்காய் அளவு வெந்நீரில் கொடுக்கவும்.

2) துவரைவேர் முள்ளிக்காய் அளவு எலுமிச்சம்பழச் சாற்றில் விழுங்கவும். இவ்வாறு 3 நாட்கள் உட்கொள்ளவும்.

## வெள்ளோக்காளம் க்ஷயத்திற்கு

ஒருபிடி வெற்றிலையை நறுக்கி எருமை மோரில் பிசைந்து, சர்க்கரை கூட்டி, அரை படி மோருடன் (அனுபானமாக)க் குடிக்கவும். வெள்ளோக்காளம், க்ஷயம், விக்கல் இவை தீரும்.

## வெள்ளோக்காளத்திற்கு வேறு

*1)* விளாம்பழவோடு, வில்வப்பழவோடு, சீரகம் இவைகளைச் சேர்த்து சூரணம் பண்ணித் தேனும், சர்க்கரையும் கூட்டி உட்கொள்ள சர்தி (வாந்தி) நிற்கும். விக்கல் நிற்கும்.

*2)* முருங்கப்பட்டைக் காடியில் அரைத்து உலர்த்தி வேக வைத்து ஒவ்வொரு கீத்து தின்னத் தீரும்.

*3)* ஏலரிசியும் எலுமிச்சம் விரையும் வெற்றிலைக் காம்பும் சேர்த்தரைத்து வெந்நீரில் கொள்ளவும்.

*4)* பாகலிலைச்சாறு காய்ச்சி மிளகுத்தூள் போட்டு குடிக்க வாந்தி வெள்ளோக்காளம் தீரும்.

*5)* முற்றிய வாகைப்பட்டையை எடுத்துத் துவைத்து காடியில் பிசைந்து இரண்டு நாழிகை ஊறியபின் கோதை எடுத்துப்போட்டு அதில் சிறுதுத்தியிலை ஒரு பிடி, சுக்கு, வெங்காயம், இந்துப்பு, குங்குலியம் இவைகளைக் காடியில் அரைத்து மேற்படி சாற்றில் கலந்து வைத்து ஒரு நாழிகைக்குப் பிறகு சீலையில் வடிகட்டி குடிக்க வாந்தி நிற்கும். இரத்தமாக எடுக்கிற வாந்தியும் தீரும்.

## வாந்திக்குக் கஷாயம்

| | |
|---|---|
| ஏலம் | 1 வராகனெடை |
| வெற்றிலைக்காம்பு | 1 வராகனெடை |

இவை இரண்டையும் நசுக்கி அரைப்படி தண்ணீர்விட்டு கால் பாகமாகக் காய்ச்சி ஆறவிட்டு அதில் ஒரு காசிடை தேன்விட்டு 3 நாட்கள் கொடுக்கவும்.

***பத்தியம் :*** கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும். வாந்தி தீரும். கைகண்டது.

## வாந்திக்கு வில்வாதி லேகியம்

| | |
|---|---|
| வில்லவேர் | 30 பலம் |
| சுத்தஜலம் | 4 மரக்கால் |

எட்டிலொன்றாகக் கஷாயம் வைத்து நல்ல வெல்லம் 30 பலம் போட்டுப் பாகு காய்ச்சி

| | |
|---|---|
| சுக்கு | 3 பலம் |
| மிளகு | 1 பலம் |
| திப்பிலி | 2 பலம் |
| செவ்வியம் | 1 பலம் |
| தாளிசப்பத்திரி | 1 பலம் |
| சிறுநாகப்பூ | ½ பலம் |
| திப்பிலிமூலம் | 2 பலம் |
| கொடிவேலி | 1 பலம் |
| இலவங்கப்பட்டை | ¼ பலம் |
| இலவங்கப்பத்திரி | ¼ பலம் |
| ஏலம் | ¼ பலம் |
| சீரகம் | ¼ பலம் |

இவை எல்லாம் இடித்துத் தூள்செய்து முன் பாகில் சேர்த்துத் தேன்விட்டுக் கிளறிவைத்துக்கொண்டு சாப்பிடவும்.

***தீரும் வியாதிகள் :*** வாந்தி, மார்பு வலி, காமாலை, குன்மம், கிரஹணி, அருசி, பீனிசம், விக்கல், இருமல், வயிற்றுக்கட்டி, கண்டரோகம், மூலரோகம், பாண்டுரோகம் இவையெல்லாம் தீரும்.

## வாந்தி நிற்க ஏலாதிச் சூரணம்

| | |
|---|---|
| ஏலம் | இலவங்கப்பத்திரி |
| சிறுநாகப்பூ | இலந்தைப்பழத்தூள் |
| நெற்பொரி | கோரைக்கிழங்கு |
| சந்தனம் | பச்சைக்கற்பூரம் |

இவைகளைச் சமனெடை எடுத்துச் சூரணம் செய்து வைத்துக் கொண்டு, கபத்தினால் உண்டான வாந்திக்கு தேனில்

அனுபானமாகவும், வாதத்தினாலும் பித்தத்தினாலும் ஏற்பட்ட வாந்திக்கு சர்க்கரையில் அனுபானமாகவும் செய்து கொடுக்கவும்.

## வாந்திக்கு கண்டாத்திரக லேகியம்

இஞ்சியை மேல்தோல் சீவிப் பொடிப் பொடியாக நறுக்கி நிழலில் உலர்த்திக் காயவைத்து 30 பலம் எடுத்துப் பசுவின் நெய்விட்டுச் சிவக்க வறுத்துப் பொடிசெய்து வைத்துக்கொண்டு பிறகு

| | |
|---|---|
| மிளகு | 12 வராகனெடை |
| திப்பிலி | 8 வராகனெடை |
| திப்பிலிமூலம் | 4 வராகனெடை |
| கொடிவேலி | 10 வராகனெடை |
| மூங்கிலுப்பு | 1 பலம் |
| சாதிக்காய் | 1 பலம் |
| ஏலம் | 1 பலம் |
| இலவங்கப்பட்டை | 1 பலம் |
| இலவங்கப்பத்திரி | 1 பலம் |
| கிராம்பு | 1 பலம் |
| சீரகம் | 1 பலம் |
| சந்தனம் | 1 பலம் |
| இலாமிச்சம்வேர் | 1 பலம் |

இஞ்சியைத் தவிர மற்ற சரக்குகளை எல்லாம் இடித்து வடிகட்டிக்கொண்டு பிறகு இஞ்சித்தூளுடன் ஒன்றாய்ச் சேர்த்து அதற்கு இருமடங்கு சீனிச்சர்க்கரை சேர்த்து லேகியமாய்க்கிண்டி தேன்விட்டுப் பிசரி வைத்துக்கொண்டு தினந்தோறும் 2 வராகனெடை இரண்டு வேளைகளும் சாப்பிடவும்.

***தீரும் வியாதிகள் :*** வாந்தி, அம்லபித்தம், மார்புவலி, கிரஹணி, பழஞ்சுரம், பீனிசம், காமாலை இவையாவும் தீரும்.

## வாந்திக்குச் சூரணம்

| | |
|---|---|
| ஏலம் | கிராம்பு |
| இலவங்கப்பத்திரி | சிறுநாகப்பூ |
| இலந்தைக்கொட்டை | நெற்பொரி |
| பராகம் | கோரைக்கிழங்கு |
| பச்சைக்கற்பூரம் | |

இவைகளைச் சமனெடை எடுத்துப் பொடிசெய்து, ஒரு வராகனெடைச் சூரணத்தைத் தேனில் குழைத்துச் சாப்பிட வாந்தி தீரும்.

## வாந்திக்கு மருந்துகள்

1)

| | |
|---|---|
| ஏலம் | இலவலங்கம் |
| நெற்பொரி | இலந்தைப்பட்டை |
| நாணற்புல் | முத்தக்காசு |
| நல்லசந்தனம் | பச்சைக்கற்பூரம் |

இவைகளை சமனாகக் கூட்டிச் சூரணித்துக் குளிர்ந்த தண்ணீரில் கொடுக்க வாந்தி தீரும்.

2) மாங்கொட்டையை அரைத்துக் கஞ்சித் தண்ணீருடன் கொடுக்க வாந்தி நிற்கும்.

3) குழவிக்கூட்டை அரைத்துத் தயிரில் கொடுக்க வாந்தி நிற்கும்.

## வாந்திக்கு வில்வாதி லேகியம்

| | |
|---|---|
| கூவிளம்வேர் | 20 பலம் |
| தண்ணீர் | 4 படி |

இதை ஒருபடியாகக் குறுக்கிய கஷாயத்தில் பழைய வெல்லம் 15 பலமிட்டுப் பாகு காய்ச்சி,

*சரக்குகள் :*

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | ஏலம் |

இலவங்கம் கற்கடகசிங்கி
திப்பிலிமூலம் செவ்வியம்
இலாமிச்சம் வேர் தாளீசபத்திரம்
கோஷ்டம் நாகப்பூ
கொடிவேலி வேர்

இவை வகைக்கு ஒரு பலம் கூட்டி இடித்துச் சூரணித்து வஸ்திரகாயம் செய்து மேற்படி பாகில் சிறிது சிறிதாகத் தூவிக் கிண்டியிறக்கி, ஆறிய பிறகு தேன் கலந்துவைத்துக்கொண்டு சாப்பிட்டுவர வாந்தி, விக்கல் தீரும்.

## வாந்திக்கு

*1)* மாவுட னரசு யிச்சில் வடமாம் நாவல் தண்ணீர்
பாவிடும் பட்டை யந்தப் பல்லவ மதுரஞ் சீரகம்
பூவுறும் புனல் நானாழி பொரவிட்டுக் காய்ச்சிக்கொள்ள
நாவறள் தாகஞ் சத்தி நன்றாகத் தீருந் தானே

*2)* பசுமஞ் சள்வெட்டி வேர்கொத் தமல்லி
பகர்கோஷ்ட மதிமதுரம் பருத்த சீரகம்
முசிவறவே சரிகொண்டு படிநீர் விட்டு
முதிரவே காய்ச்சிய பின்முந்திக் கொள்ளப்
பொசிவற்ற நாவறட் சிதாகஞ் சத்தி
பொருத்திடுமே யன்னேரம் பொருந்து கண்டின்
கசிவுற்ற மொழியாளே சொன்னோங் கண்டீர்
காமுனியல் மருந்தில்லைக் கருதுங் காலே.

இ-ள் : மாமரம், அரசமரம், இத்திமரம், ஆலமரம், நாவல்மரம் தண்ணீர்விட்டான், அத்திமரம் இவைகளின் பட்டைகளையும், இளந்தளிர்களையும் நன்றாகப் போட்டு 4 படி சுத்த ஜலம் வார்த்துக் கஷாயம் வைத்துச் சாப்பிட நாவறட்சி, தாகம், வாந்தி முதலிய ரோகங்கள் தீரும்.

*3)* பசுமஞ்சள், வெட்டிவேர், கொத்தமல்லி, கோஷ்டம், அதிமதுரம், பெருஞ்சீரகம் இவைகளை ஒரே நிறையாக எடுத்து ஒரு படி தண்ணீர்விட்டுக் காய்ச்சி வடிகட்டி உட்கொள்ள நாவறட்சி, தாகம், வாந்தி இவை தீரும்.

### வாந்திக்குக் கஷாயம்

| | |
|---|---|
| வில்வவேர் | கொத்தமல்லி |
| சுக்கு | நெற்பொரி |

இவை சமனெடை எடுத்துக் கஷாயம் வைத்துச் சர்க்கரை சேர்த்து உட்கொண்டால் வாந்தி தீரும்.

### வாந்தி பண்ண

இரண்டு குண்டுமணி அளவு துருசைப் பொடிசெய்து எலுமிச்சம்பழத்தைக் குடைந்து அதற்குள் இரவு பூராவும் வைத்து விடிந்தபிறகு சாப்பிட்டால் தண்ணீராய் வாந்தியாகும்.

*குறிப்பு :* துருசு விஷமாகையால் இதைக் கையாளுவது உசிதமில்லை.

### வாந்திக்குச் சூரணம்

| | |
|---|---|
| திப்பிலி | சுக்கு |
| மிளகு | நெற்பொரி |

இவைகளைச் சமபாகம் சூரணித்துச் சர்க்கரை சேர்த்துச் சாப்பிட வாந்தி, சுவாசகாசம் தீரும்.

### வேறு

1)

| | |
|---|---|
| திப்பிலி | நெற்பொரி |
| விளாம்பழம் | இலந்தைப்பழம் |
| ஏலம் | கிராம்பு |
| தாளிசபத்திரி | |

இவைகளைப் பொடிசெய்து ஆடாதோடை பூச்சாற்றில் ஒரு வராகனெடை தேன் சேர்த்துச் சாப்பிட வாந்தி தீரும்.

2) சீந்தில்க்கொடி சாற்றிலும் இப்பொடியை உட்கொள்ளலாம்.

3) கரிப்பான் வேரை அரைத்து இளவெந்நீரில் கொடுக்க வாந்தி தீரும்.

4) பச்சை மூங்கிலை இழைத்து கருவேப்பந்தண்டு (கருவேப்பிலை ஈர்க்கு) குழவிக்கூடி இவைகளை சேர்த்தரைத்துக் கொடுக்கலாம்.

## (சத்திக்கு) வாந்திக்கு உள்ளுக்கு மருந்து

புட்டிவெல்லம் எலுமிச்சம்பழச் சாற்றில் குழப்பிக் கொடுக்க உடனே தீரும்.

## சத்தி விக்கலுக்கு வில்வக்குழம்பு

கூவிளை யோடு குளிர்ந்த முட்டியின்வேர்
ஏவலைக் கொன்றான் யிவை யோரொன்று
பன்னிரு பலமும் பார்த்து நறுக்கி
நன்னீர் தூணி நாடிக் கலந்து
எட்டொன் றாக்கி யிறக்கிப் பிழிந்து
கட்டிபழ வெல்லம் பதினாறு பலங்கலந்து
சட்டியிற் பாகாய்த் தடிக்கத் துளாவி
ஏலம் இலவங்கம் இந்துப்பு நாகப்பூ
காலி மிளகுடனே கச்சோலந் திப்பிலி
தோலிக் கழஞ்சுக்கு யிருசீரகத் தோடோமம்
இவை ஓரொண்ணு இருபலமுந் தூவித் துளாவி
தூத்தி யெடுத்தால் கம்பிவரும் பதம்கண்டிறக்கி
வெம்பிய தேன் உரிவிட்டுக் கலந்து
நம்பிழுக் கழஞ்சு கொள்ள நாளொன்றுக்கு
சத்தியும் விக்கலும் தாகமும் மாரமும்
வல்லீர் குன்மமும் வாய்நீர் நிற்கும்
வில்வக் குழம்பிது வேதனை யோர்க்கே.

| | | |
|---|---|---|
| இ-ள் : | கூவிளம்வேர் | 12 பலம் |
| | பேராமுட்டி வேர் | 12 பலம் |
| | கிலுகிலுப்பை வேர் | 12 பலம் |
| | சுத்தஜலம் | 4 மரக்கால் |

இவைகளை ஒன்றிரண்டாகப் பொடி செய்து இரவு பூராவும் ஊறவைத்து மறுநாள் எட்டிலொன்றாகக் கஷாயம் வடித்துக் கசக்கிப் பிழிந்து வடிகட்டி அதில் பழைய வெல்லம் 16 பலம் கலந்து பாகாகச் செய்து அதில்,

சரக்குகள் :

| | |
|---|---|
| ஏலம் | இலவங்கம் |
| இந்துப்பு | சிறுநாகப்பூ |
| பூனைக்காலி | மிளகு |
| பூலாங்கிழங்கு | திப்பிலி |
| இலவங்கப்பட்டை | சுக்கு |
| நல்ல சீரகம் | கருஞ்சீரகம் |
| ஓமம் | |

இவை ஒவ்வொன்றும் 2 பலம் தூள்செய்து பாகில் தூவி லேகியமாகக்கிண்டி, கம்பி பதத்திலிறக்கி நல்ல தேன் ஒரு படி விட்டுக்கலந்து குழம்பாக வைத்துக்கொண்டு, வேளைக்கு 3 வராகனெடை கொள்ள சத்தி, விக்கல், தாகம், அபஸ்மாரம், ஈரல்நோய், குன்மம், வாய்நீரூறல் முதலியவை தீரும். இதற்குப் பெயர் **வில்வக்குழம்பு** என்பதாகும்.

## சத்திக்குக் கெண்டூஷம்

வாகுத்த யேலமில வங்கம் கொம்மட்டி மாதளையின்
ஆகப் பழச்சதை ஞாழலினத்து அரிய சந்தனம்
நாகப்பூ நெற்பொரி யெல்லாஞ் சரிசமன்
ஆயப் பொடிசெய் தீர்செந் தேனிற் குழைத்து
கொள் ளீர் சத்தி தீர்ந் திடவே.

இ-ள் :

| | |
|---|---|
| ஏலம் | இலவங்கம் |
| கொம்மட்டிமாதளைச்சதை | செஞ்சந்தனம் |
| சிறுநாகப்பூ | நெற்பொரி |

இவை எல்லாம் சமனெடை எடுத்துப் பொடிசெய்து தேனில் குழைத்துச் சாப்பிட வாந்தி தீரும்.

## மத்தனை செய்யும் குணம்

மேதா யாகில் முழுது நிற்கு மிகவு நினைவு வாராது
வாதந் தீரும் வன்னி தரும் மலமு மோடும் வலுவுண்டாம்
போதச் சரீரம் புளகித மாம் பொருந்தாப் பலனோய் மெய்நோய்தாம்
மாதர் பெற்ற மடமயிலே மத்தனை செய்யுங் குணமிதுவே.

## பயித்தியத்தின் குணங்கள்

புத்தி முழுவதும் விகல்பித்து, தன் நினைவிராமல் தடுமாறுவான். வாதம் ஒடுங்கு நிற்கும். உஷ்ணமோ அதிகரித்திருக்கும். மலமும் பிரவிருத்தியாகும். உடலில் அபிரிமிதமான வலுவு ஏற்படும். சரீரம் சோபையோடு கூடியதாக விருக்கும்.

நோயின் சேஷ்டைகள் பலவிதமாக இருப்பினும் பொதுவில் எல்லாம் புத்தியை ஆக்ரமித்த நோயாகவே இருக்கும். இவை பயித்தியத்தின் குணங்களாகும்.

## சத்திக்கு வில்வாதி லேகியம்

வில்வவேர் நெல்லிடைபோல் இடித்தது 4 படி சுத்தஜலம் 1 மரக்கால் விட்டுக் காய்ச்சிப் பிழிந்து வடிகட்டி பழைய வெல்லம் 16 பலம் கரைத்து லேகிய பாகமாய்க் காய்ச்சி அதில்

| | |
|---|---|
| கொத்தமல்லி | நற்சீரகம் |
| ஏலம் | இலவங்கம் |
| நாகப்பூ | சுக்கு |
| மிளகு | திப்பிலி |

இவை ஒவ்வொன்றும் 3 வராகனெடை பொடிசெய்து போட்டு லேகியமாகக் கிண்டி இறக்கி நெய் ஒரு உழக்கு, தேன் ஒரு உழக்கு விட்டுப் பிசரி பத்திரப்படுத்தவும். இதில் புன்னைக்காய் அளவு சாப்பிட்டுவர வாந்தி தீரும்.

## சத்திக்குக் கஷாயம்

நெற்பொரியும் பசும்பயறும் வில்லை முல்லை
நெருஞ்சி யேலமுட னெல்லி முள்ளி
முற்படவே யிளநீரி லெட்டொன் றாக்கி
முதிரநீ ரிறுத்தருந் துந்து மோன
சொற்பெரிய சத்திகுன்ம சுரத்திற் சத்தித்
துயரமுடன் கிறுகிறுப்பு உழலை மூச்சு
நற்பரிய முனியுரைத்த படியே தானு
நாடாதென்றே யுரைத்தே னலமி தாமே.

இ-ள் : நெற்பொரி பச்சைப்பயறு
வில்வவேர் முல்லைவேர்
நெருஞ்சில் ஏலம்
நெல்லிமுள்ளி

இவைகளைத் தண்ணீரிலிட்டு எட்டிலொன்றாகக் கஷாயம் செய்து வடிகட்டி இளஞ்சூடாகச் சாப்பிடவும்.

இதனால் குன்மத்தினால் உண்டான வாந்தி, சுரத்தில் உண்டாகும் வாந்தி, தலை கிறுகிறுப்பு, உழலை (தாகம்) பெருமூச்சு முதலிய ரோகங்கள் தீரும்.

## வேறு கஷாயம்

வில்வ பத்திரி வேர்சிறு மட்டியும்
வல்ல சுக்கும் வளம்பெறக் காய்ச்சியே
நல்ல தேனில் நயந்து குடித்திட
கொல்ல வந்திடுஞ் சத்தி குறுகுமே.

இ-ள் : வில்வவேர், சித்தாமுட்டிவேர், சுக்கு இவைகளைப் பொடித்துப் போட்டுக் கஷாயம் செய்து தேன் விட்டு சாப்பிடக் கொடுமையான வாந்தியும் தீரும்.

## ஒக்காளம் வாந்திக்கு காற்பாசச் சூரணம்

பொரியும் பருத்திக்கொட்டையும் (பருப்பு) வறுத்து இடித்து வஸ்திரகாயம் செய்துகொண்டு,

| | |
|---|---|
| திப்பிலி | ¼ பலம் |
| ஏலம் | ¼ பலம் |
| கிராம்பு | ¼ பலம் |
| திப்பிலிமூலம் | ¼ பலம் |
| தும்பராஷ்டகம் | ¼ பலம் |

இவைகளை எல்லாம் இடித்து வஸ்திரகாயம் செய்து ஒருமிக்கச் சேர்த்து சர்க்கரை கூட்டி வைத்துக்கொண்டு தேனிற் குழைத்துச் சாப்பிடவும்.

## இதுவுமது

| | |
|---|---|
| பாவட்டம் புல்லு | 1 வராகனெடை |
| வில்வவேர் (தோல் சீவியது) | 2 வராகனெடை |
| சீரகம் | 1 வராகனெடை |
| பருத்திக்கொட்டை | 1 வராகனெடை |
| சுக்கு | 1 வராகனெடை |
| மாதளம்பூ | 1 வராகனெடை |

இவைகளைப் பொடித்துக் கஷாயம் செய்து சாப்பாட்டிற்குப் பிறகு இரவில் கொடுக்க வாந்தி ஓக்காளம் இவை தீரும்.

***பத்தியம் :*** கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

## சத்திக்கும் வெள்ளோக்காளத்திற்கும் மருந்துகள்

| | | |
|---|---|---|
| 1) | கூவிளம் வேர் | 12 பலம் |
| | சுக்கு (நறுக்கியது) | 2½ வராகனெடை |

இதில் 2 படி நீர்வார்த்து உழக்காகக் கஷாயம் செய்து இரவில் குடிக்க சத்தி, வெள்ளோக்காளம் இவை தீரும். விக்கலும் தீரும்.

2) நொச்சிக் கொழுந்தை வாய்பேசாமல் பரித்துவந்து வெற்றிலையுடன் தின்னத் தீரும்.

3) பொன்னாங்காணி வேரைப் பாலிலரைத்துக் கொடுக்கத் தீரும்.

4) வில்வப்பழம், தேத்தான்விரை, நெற்பொரி, மயிலிறகு, கலைமான் கொம்பு இவைகளை வறுத்துப் பொடி செய்து தேனிலாவது நெய்யிலாவது குழைத்து நாவிலிட விக்கல் நிற்கும்

## வாந்தி அருசிக்குச் சூரணம்

| | |
|---|---|
| ஏலம் | இலவங்கபத்திரி |
| பச்சைக்கற்பூரம் | சந்தனம் |
| சீரகம் | கோரைக்கிழங்கு |
| சன்னநாகேசுரம் | பருத்திவிதை பருப்பு |
| நெற்பொரி | திப்பிலி |

இவைகளைச் சமபாகமாக எடுத்துச் சூரணித்து மேற்படி சூரணத்திற்கு சமன் சர்க்கரை கூட்டி இரண்டு வேளையும் இரண்டு காசிடை தேனிற்கொள்ள சத்தி, அருசி, அருவருப்பு இவையெல்லாம் தீரும். (½ வராகனெடை பச்சைக்கற்பூரம் சேர்க்கவும்.)

**சர்தி, விக்கல், அருசிக்கு**

1) வாதத்தினால் உண்டான சர்திக்கு நெய்யில் இந்துப்பைக் குழைத்துக் கொடுக்க நிற்கும்.

2) வளையலுப்பு, சோத்துப்பு, இந்துப்பு சமன்கூட்டி நெய்யில் குழைத்துக் கொடுக்க நிற்கும்.

3) பித்தத்தினால் உண்டான சர்திக்குக் காவிக்கல்லும், குழவிக்கூடு மண்ணும் சமன்கூட்டி கழுநீரில் கொடுக்கத் தீரும்.

4) சிலேஷ்மத்தினால் உண்டான சர்திக்கு சுக்கு, மிளகு, திப்பிலி இவைகளைச் சமன்கூட்டி நெய் அல்லது வெரும் சூரணமாகவாவது சாப்பிட நிற்கும்.

***சகல சர்திக்கும் :-***

5) வில்வவேர், கொத்தமல்லி விதை, சிற்றாமுட்டிவேர், சுக்கு, நெற்பொரி, பச்சைப்பயறு இவைகளைச் சேர்த்துக் கஷாயமிட்டுத் தேன் சர்க்கரை கலந்து கொடுக்க எல்லாவித சர்தியும் நிற்கும்.

6) சீந்தில் கஷாயமிட்டு கொம்மட்டி மாதளம்பழச் சாறு கூட்டி தேன், சர்க்கரை சேர்த்துக் கொடுக்க நிற்கும்.

7) கொம்மட்டி மாதளம்பழச் சாற்றில் பொடி செய்த திப்பிலி, சர்க்கரை, அதிமதுரம், அஞ்சனக்கல் கூட்டித் தேன் கலந்து சாப்பிட நிற்கும்.

8) வில்வவேர்க் கஷாயத்தில் நெற்பொரி, சர்க்கரை, தேன், கொம்மட்டி மாதளம்பழச்சாறு கூட்டிக் கொடுக்க நிற்கும்.

9) பருத்தி விதையை பொடிசெய்து நெற்பொரி, விளாயிலை, வில்வவிரை, திரிகடுகு, ஏலம், வேப்பம்பூ, சீரகம், இந்துப்பூ இவைகளைச் சமன் சேர்த்து மாதளம்பழச் சாற்றிலரைத்துத் தேன், சர்க்கரை கலந்து கொடுக்க விக்கல், வாந்தி, அரோசிகம், அருவருப்புத் தீரும்.

## சத்திக்கு காற்பாசச் சூரணம்

பண்ணும் பருத்திவிரை பாரிலுள்ள நெற்பொரியும்
எண்ணுஞ் சிறுதிப்பிலியும் ஏலமுடன் நண்ணுபொடி
சர்க்கரையுந் தேனுந் தளரவே பண்ணியுண்ண
விக்கல் சத்தி போகு மென்ன விரும்பு.

இ-ள் : பருத்திவிரை, நெற்பொரி, அரிசித்திப்பிலி, ஏலம் இவைகளைப் பொடிசெய்து தேனும் சர்க்கரையும் கலந்து சாப்பிட விக்கல், சத்தி இவை போகும்.

## சத்திக்கு மருந்து

எலுமிச்சம்பழச்சாறு ஒரு உழக்கில் மூன்று காசிடை தேன் சேர்த்துப் பருக வயிறு பேதியாகும். வாதம், சிலேத்துமம், சத்தி இவை தீரும்.

## சத்திக்கு தூமம்

களமுடன் வெட்டிவேரு மிலாமிச் சைகரிய குங்கில்
பிளமுடன் குக்கில் நெல்லுப் பொரியுடன் வங்கப் பட்டை
அளவகிற் கட்டை யாகு மயில்த் தோகை கொத்த மல்லி
வளமுடன் பொடிகள் செய்து வத்தி யாகப் பண்ணி
இளவறு நெய்யிற் தோய்த் திடுநாசி தூமம் பண்ண
வளமுடன் சத்தி தீர்ந்து வரும்வகை யுரைத்தவாறே.

இ-ள் : வெட்டிவேர், இலாமிச்சை, கரியகுங்கிலியம், வெள்ளைக்குங்குலியம், நெற்பொரி, இலவங்கப்பட்டை, அகிற்கட்டை, மயில்தோகை, கொத்தமல்லி இவைகளைப் பொடிசெய்து மெல்லிய துணியில் உருட்டி வர்த்தியாகச் செய்து நெய்யில் தோய்த்து கொளுத்தி தூபம் காட்ட சத்தி தீரும்.

## இதுவுமது

அத்தித்தந்த மரத்தின் கொம்பகிலுந் குற்குலு மயிலிறகு
வத்திசெய் திரியாய் நாசிதனில் மாறாப்புகைசெய் மார்நோவுஞ்
சத்திவிக்க லுதரவலி தணியும் வாதமுடனே தான்
முத்திசேர் மொழியினாளே ! முன்னோர்கள் மொழிந்த வாறே.

இ-ள் : அத்திமரக்குச்சி, அகில்கட்டை, குக்குலு, மயிலிறகு இவைகளைச் சேர்த்துத் தூள்செய்து திரியாக்கிக் கொளுத்தி நாசிதனில் புகை பிடிக்க மார்நோய், சத்தி, விக்கல், வாதம், வயிற்றுவலி முதலியவை தீரும்.

## வேறு வர்த்தி

| | |
|---|---|
| கருங்குங்கிலியம் | வெட்டிவேர் |
| இலாமிச்சம்வேர் | நெற்பொரி |
| இலவங்கப்பட்டை | அகிற்கட்டை |
| மயில்தோகை | கொத்தமல்லி |

இவையெல்லாம் இடித்துத் தூள் செய்து வர்த்தி செய்து நெய்யில் தோய்த்து நாசியில் புகை காட்ட சத்தி தீரும்.

## இரத்தபித்தத்திற்கு வாசாதி கிருதம்

| | |
|---|---|
| ஆடாதோடைச்சாறு | 4 படி |
| பசுவின் பால் | 2 படி |
| நெய் | 2 படி |

இவைகளை ஒன்றாகக் கலந்து அதில்

| | |
|---|---|
| நிலவேம்பு | குடசப்பாலை |
| கோரைக்கிழங்கு | அதிமதுரம் |
| சந்தனம் | கொடிவேலி |
| இலுப்பைப்பூ | கொத்தான் |
| வெட்டிவேர் | நன்னாரிவேர் |
| தாமரைக்கிழங்கு | புங்கம்பட்டை |
| செங்கழுநீர்க்கிழங்கு | அறுகம்வேர் |
| மருக்கொழுந்து | |

இவை வகைக்கு 3 ½ வராகனெடை எடுத்துப் பொடித்துச் சூரணம் செய்து பால் வார்த்தரைத்து மேற்படி ஆடாதோடைச் சாறு, பால், நெய் முதலியவைகளுடன் கலந்து தேன் 5 பலம், சர்க்கரை 5 பலம் சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கவும். ஆறின பிறகு தேவையானால் சிறிது தேன், சர்க்கரை சேர்த்து உள்ளுக்குக் கொடுக்கவும். இதனால் ரக்தபித்தம், க்ஷயம், சுவாசகாசம், சத்தி இவைகளெல்லாம் தீரும்.

### மஞ்சள்போல் வாந்தி எடுப்பதற்கு

ஒருபிடி வேப்பீர்க்கு அரிந்து, ஒரு சுக்குத்தேரு, ஒருவிரல் நீளம் சாரணைக்கிழங்கு, வெள்ளை வெங்காயத்திரி 4, ஒரு ஆழாக்கு வெந்தயம் இவைகளையெல்லாம் இளவறுப்பாய் வறுத்து, ஒருபடி நீர்விட்டு, சிராங்காயாகக் காய்ச்சிக் கொடுக்கவும். இப்படி மூன்று வேளை காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

### வாய் நீரூறலுக்கு

| | |
|---|---|
| கொத்தமல்லி | மாம்பட்டை |
| மாந்தளிர் | இலாமிச்சம்வேர் |

இவை வகைக்கு 2 ½ வராகனெடை சேர்த்தரைத்து 2 படி தண்ணீர்விட்டு உழக்காகக் காய்ச்சி, ஆழாக்குத் தேன்விட்டுக் கலந்து கொடுத்துவர சத்தி, வெப்பு, வயிற்றுப்போக்கு, மூர்ச்சை, திமிர், வாய்நீரூறல் இவைகள் எல்லாம் தீரும். காலை-மாலை இருநேரமும் 7 நாட்கள் கொள்ளவும்.

***பத்தியம் :*** கைப்பு, புளிப்பு, உப்புத் தவிர்க்கவும்.

### சத்திக்கும், விக்கலுக்கும் கெண்டூஷம்

நெற்பொரி மதுரம் ஏலம் இசைந்த நற்சீரகம்
முப்பழந் திப்பிலி முறைமுறை பொரித்து நூறி
ஒப்புடன் கொம்மட்டி மாதளம் பழத்திலுட்சதை
வாங்கிக்கொண்டு
தப்பறச் சீனிதேனுந் தன்னுட னொக்கக் கூட்டி
அப்பியே பிசைந்து கொள்ள அடுத்ததோர் சத்திவிக்கல்

இப்படி யுழலை தாகம் யெடுத்ததோர் சுரங்களெல்லாம்
நற்பயிற் மழையைக் கண்ட நளிர்முகம் போலேயாமே.

இ-ள் : நெற்பொரி, அதிமதுரம், ஏலம், நற்சீரகம், திராக்ஷைப்பழம், திப்பிலி இவைகளை வறுத்துப் பொடியாக்கி கொம்மட்டிமாதளை உட்சதை, தேன், சீனி இவைகளுடன் கூட்டி ஒன்றாகப் பிசைந்து வைத்துக்கொண்டு உட்கொள்ள சத்தி, விக்கல் உழலை தாகம், சுரங்கள் இவை எல்லாம் தீரும்.

## வாந்தி, விக்கலுக்கு ஏலாதிச் சூரணம்

| | |
|---|---|
| ஏலம் | சடாமாஞ்சி |
| கிராம்பு | சுக்கு |
| திப்பிலி | முத்தக்காசு |
| கொத்தமல்லி | முந்திரிகைப்பழம் |
| கீழாநெல்லி | இலுப்பைப்பூ |
| கருஞ்சீரகம் | சீரகம் |
| பேரீச்சம்பழம் | சந்தனம் |
| கோஷ்டம் | நாகப்பூ |
| கூகைநீர் | சாதிக்காய் |
| நெய்ச்சிட்டி | நெருஞ்சி |
| வேளைவேர் | நிலப்பனை |
| அமுக்கிராக்கிழங்கு | சர்க்கரை |

இவைகளைச் சமனாக எடுத்து இடித்துப் பொடி செய்து வைத்துக்கொண்டு வெருகடிப் பிரமாணம் அரை மண்டலம் உட்கொள்ள பயித்தியம், வாந்தி, விக்கல் தீரும்.

*பத்தியம் :* கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும்.

மேலுக்குச் சாணாக்கி எண்ணெய் செய்து தேய்க்கவும்.

## விக்கலுக்கு மருந்துகள்

வேப்பம் பிசின் சுட்டு பிராயிலையும் கூட்டிக் கொடுக்க விக்கல் மாறும்.

2) சுக்கு அரைத்துக் காடியில் கொடுக்கவும்.

3) ஏலம் பொடி செய்து வெற்றிலையிலிட்டுத் தின்ன நிற்கும்.

### விக்கல், ஒக்காளத்திற்கு மருந்து

1) சுக்கை அரைத்துக் காடியில் குடிக்கவும்.

2) வெள்ளோக்காளத்திற்குப் பாகலிலைச் சாறு காய்ச்சி மிளகுப்பொடி போட்டுக் குடிக்க நிற்கும்.

### உடம்பு மெலிய மருந்து

அமுக்கிராவேர் உலர்த்திப் பொடிசெய்து கொதிக்கும் கஞ்சியில் போட்டுக் குடிக்க தேகம் மெலியும். குளிர்ந்த கஞ்சியில் சேர்த்துச் சாப்பிட உடம்பு பருக்கும்.

### விக்கல், ஒக்காளத்திற்கு

முற்றிய வாகைப் பட்டையைத் துவைத்துக் காடியில் பிசைந்து இரண்டு நாழிகை ஊறியபின் கோதை எடுத்துப் போட்டு அதில் சிறு துத்தியிலை ஒருபிடி, சுக்கு, வெங்காயம், இந்துப்பு, குங்குலியம் இவைகளைக் காடியில் அரைத்து மேற்படி பட்டைச்சாற்றில் கரைத்து வைத்துவிடவும். பிறகு நன்றாகத் தெளிந்தவுடன் இறுத்து வடிகட்டிக் கொடுக்கவும். இது ஜீர்ணமானாலும் அல்லது வாந்தியாக வெளிவந்து விட்டாலும் பாதகமில்லை.

பத்தியம் : ஆட்டுப்பால் சாப்பிடவும்.

### விக்கலுக்கு

1) வெங்காரம் தேற்றான் விரையளவு பொறித்து அத்துடன் திப்பிலிபொடி, மயிலிறகு சுட்ட சாம்பல் இவைகளை ஒன்று சேர்த்து தேனில் குழைத்துக் கொடுக்க விக்கல் நிற்கும்.

2) ஒருபிடி நெற்பொரியைப் பொடித்துக் காய்ச்சிய பசும்பாலுடன் கலந்துகொடுக்கத் தீரும்.

3) நெற்பொரி உழக்குப் பொடிசெய்து நான்கு காசிடை தேன் கூட்டிக்கலந்து விழுங்க விக்கல் தீரும்.

4) கற்கடகசிங்கி, சிறுதேக்கு, சிறுமூலம் (இம்பூறல் வேர்) இவை வகைக்கு ½ வராகனெடை உலர்த்திப் பொடி செய்து வாழைச்சாற்றில் கலந்து சாப்பிடவும்.

5) சிறுதேக்கு ½ பலம், சித்திரமூலம் ½ பலம் இவைகளை உலர்த்திப் பொடிசெய்து வாழைப்பூச்சாற்றில் கலந்து கொடுக்க விக்கல் தீரும்.

6) அதிமதுரம், மயிலிறகு சுட்ட சாம்பல், நண்டுவளைத் தண்ணீரில் கலந்து கொடுக்கவும்.

## சோர அஞ்சனம்

நிலப்பனங்கிழங்கு சனிக்கிழமையன்று கருப்பு நூலால் காப்புக்கட்டி சாயங்காலம் பிடுங்கி நசுக்கி அந்தச் சாற்றை ஆனைக்கண் சட்டியில் தடவி, தாமரை நூலினால் திரிதிரித்துக் காராம்பசுவின் நெய்விட்டு மை பற்றவைத்துப் பிறகு அதை எடுத்துக் காராம்பசுவின் நெய்யிலேயே குழைத்து, கருப்புப் பெண் கையில் போட்டுப்பார்க்க போன விடமெல்லாம் தெரியும்.

## விக்கலுக்கு மருந்து

| | |
|---|---|
| அரத்தை | தும்பராஷ்டகம் |
| பெருங்காயம் | சுக்கு |
| திப்பிலி | |

இவைகளை வகைக்கு 1 வராகனெடை எடுத்து ஆலக்கரண்டியில் வெதுப்பிக்கொண்டு அரைத்துத் தேனில் கொள்ளவும்.

## இதுவுமது

ஈனாக்கிடாரி பசுவின் கோமியம் ஒருசேரை உள்ளுக்குக் கொடுக்கவும்.

***பத்தியம் :*** கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும். விக்கல் தீரும்.

## விக்கலுக்கு நாகராதிச் சூரணம்

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| சிறுதேக்கு | உகாமூலம் |
| கற்கடகசிங்கி | சதாவரிக்கிழங்கு |

இவைகளைச்சமபாகம் சூரணம் செய்து சீனிச்சர்க்கரை சேர்த்து சாப்பிட்டால் விக்கல் தீரும்.

## விக்கலுக்கு

1) வசம்பு 1/8 பலம், உப்பு 1¼ சேர், நெய் ¾ சேர் இவைகளைச் சமனாக எடுத்துக் கஷாயம் வைத்துக் கொடுக்க வாந்தி, விக்கல் தீரும்.

2) வெள்ளரி விரையை அரைத்துப் பசு வெண்ணையில் குழைத்து நெஞ்சிலும் ஈரல்குலை மேலும் தடவவும்.

3) பாசிப்பயறு உழக்கு, நெற்பொரி அரை படி இரண்டையும் இளநீர்விட்டு வேகவைத்துத் தின்னவும். இந்த மருந்து சீரணித்தபின் வீழிவேர், சித்தாமுட்டிவேர் இரண்டும் இடித்துப் பசுவின் பாலில் போட்டுக் காய்ச்சி சர்க்கரை யாகிலும் குழவு சீனியாகிலும் சேர்த்துக் கொடுக்கவும்.

4) அதிமதுரம், திப்பிலி, நெற்பொரி இவைகளைப் பொடிசெய்து தேனிற் குழைத்து விழுங்கவும்.

5) நண்டுவளைத் தண்ணீர் காய்ச்சிக் கொடுத்தால் நிற்கும்.

## விக்கலுக்கும் வாந்திக்கும் கஷாயம்

| | |
|---|---|
| நண்டோடு | அதிமதுரம் |
| கொத்தமல்லி | ஏலம் |
| இலாமிச்சம்வேர் | மூக்குத்திப்பூண்டு |
| பாலை | வில்வவேர் |

இவைகளை சமனாக எடுத்துக் கஷாயம் வைத்துக் கொடுக்க விக்கல், வாந்தி தீரும்.

## வேறு கஷாயம்

சித்திரத்தை பாலை
கருவப்பட்டை ஏலம்
இலாமிச்சம்வேர் அதிமதுரம்
வில்வவேர்

இவைகளைச் சமனாக எடுத்துக் கஷாயம் வைத்துக்கொடுக்க வாந்தி, விக்கல் தீரும்.

## விக்கலுக்கு நசியம்

நாக்கினிற் சூடு நாகரம் நிங்குள
வீக்கு திப்பிலி யொத்த மதுரம்
வாக்கு மாதர் முலைப்பாலில் வாட்டியே
மூக்கில் வார்க்க முறிந்தோடும் விக்கலே.

இ-ள் : சுக்கு, பெருங்காயம், திப்பிலி, அதிமதுரம் இவைகளைச் சமனெடை எடுத்து முலைப்பாலில் அரைத்து நாவினில் தடவியும், நாசியில் நசியம் செய்யவும் விக்கல் தீரும்.

## விக்கல் சத்திக்கு

பாலுநெல் பொரியுங் கண் பரித்திடுஞ் சத்தி விக்கல்
மேலுமிப் பொரியுந் தேனு மிக்க திப்பிலியுங் கூட்டிச்
சாலமா தாளம்பழச் சாற்றில் சர்க்கரை கலந்து கூட்டிக்
கோலநற் குழம்பு செய்து கொண்டிடில் விக்கல் தீரும்.

இ-ள் : பால், நெற்பொரி, தேன், திப்பிலி, மாதளம்பழச்சாறு, சர்க்கரை இவைகளை ஒன்று கலந்து குழம்பாகக் காய்ச்சிப் பருகிட விக்கல் தீரும்.

## இதுவுமது

நீடு மாதளை நெற்பொரி சர்க்கரை
தேடு திப்பிலி தேனிற் குழைத்துண்ண
பீடை செய்யும் பிதற்றிடுஞ் சத்தியை
யோட வோடத் துரத்துவ துண்மையே.

இ-ள் : மாதளம் பழத்தினுட்சதை, நெற்பொரி, சர்க்கரை, திப்பிலி இவைகளை ஒன்றுசேர்த்து தேனில் கலந்து சாப்பிட பைத்தியம், சர்த்தி முதலியவை தீரும்.

## விக்கலுக்கு மருந்து

*1)* பொரித்த திப்பிலி, சுக்கு, மிளகு, ஏலம், நல்ல சீரகம் இவைகளைச் சமன் பொடி செய்து தேனில் குழைத்து நக்கிட விக்கல் மாறும்.

*2)* திருநாமப்பாலையிலை இரண்டு பிடி பறித்துவந்து நன்றாகத் துவைத்து 4 படி ஜலத்தில் போட்டு அத்துடன் ஒருபடி பாசிப்பயற்றையும் போட்டு கால் பாகமாகக் கஷாயம் வைத்திறக்கவும். பிறகு அதில் ஏலம், நல்லசீரகம், திப்பிலி, அதிமதுரம் இவைகளைச் சமனெடை எடுத்துப் பொடித்து அந்தப் பொடியை மேல்பொடியாக மேற்படி கஷாயத்தில் இட்டுத் தூவி தேன் சர்க்கரை சேர்த்துக் கொடுக்கவும்.

## விக்கலுக்குச் சூரணம்

| | |
|---|---|
| எருமை | பசு |
| கழுதை | ஒட்டகம் |

இவைகளின் மயிரையும், கோழியிறகையும் கருக்கிச் சூரணித்து தேன் சர்க்கரை கூட்டி சாப்பிட விக்கல் தீரும்.

## உளமாந்தை, ரக்த பித்தத்திற்கு ஆடாதோடை நெய்

ஆடாதோடை சமூலம், கண்டங்கத்திரி வேர், சிறுவழுதலை வேர் இவை மூன்றும் சிறு துண்டுகளாக நறுக்கியது 100 பலம், சுத்த ஜலம் எட்டு மரக்கால், இதை 2 மரக்காலாகக் கஷாயம் குறுக்கி, நெய் 2 படி, பசும்பால் 4 படி சேர்த்து இதில் சரக்குகள் :

| | |
|---|---|
| கற்கடகசிருங்கி | சிறுதேக்கு |
| திப்பிலி (யானை) | அரிசித்திப்பிலி |
| செவ்வியம் | சிறுமூலம் |

| | |
|---|---|
| கோட்டம் | மாஞ்சில் |
| சுக்கு | மிளகு |
| கடுக்காய் | தாணிக்காய் |
| இந்துப்பு | வெப்பாலையரிசி |
| சங்கம்வேர் | தூதுவளைவேர் |
| இம்பூறல்வேர் | |

இவைகளை வகை ஒன்றுக்கு 5 வராகனெடை பொடித்துப் பால்விட்டு அம்மியில் அரைத்து முன் சித்தமாக வைத்திருக்கும் கஷாயத்துடன் சேர்த்துக் கரைத்துப் பதத்தில் காய்ச்சி வடித்து நக்கித்தின்ன காசம், சுவாசம், க்ஷயரோகம், மந்தாரகாசம், ஈழை, இருமல், உளமாந்தை, ரக்தபித்தம் இவைகள் தீரும்.

### வேறு

| | |
|---|---|
| கையாந்தகரை | தூதுவளை |
| ஆடாதோடை | கண்டங்கத்திரி |
| தேட்கொடுக்கு | சாரடை |
| பொரும்பில் | குப்பைமேனி |
| பிராமுட்டி | கீழாநெல்லி |
| இசங்கு | நொச்சி |

இவைகளின் சாறு வகைக்கு 1 படி எடுத்து மூன்று படி சுத்தமான நல்லெண்ணெயுடன் கலந்து பதமாகக் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு தேய்த்து ஸ்நானம் பண்ணவும். மேற்சொல்லிய நோய்கள் தீரும்.

### பித்தம், ரக்தபித்தம், சகல பித்தத்திற்கும்

| | |
|---|---|
| நன்னாரிவேர் | இலாமிச்சம்வேர் |
| இருவேலிவேர் | சந்தனம் |
| நெய்தற்கிழங்கு | கொத்தமல்லி |
| அதிமதுரம் | விழாலரிசி |
| கொட்டைப்பாக்கு | |

இவைகளை வகைக்கு 1 வராகனெடை எடுத்துப் பொடித்து 2 படி நீர்விட்டு உழக்காகக் காய்ச்சி வடித்து அதில் 1/2 உழக்கு

கஷாயத்தில் 5 கிராம்பைப் பொடி செய்து போட்டு காலையிலும், மற்றொரு பாதி கஷாயத்தில் முன்போல் 5 கிராம்பைப் பொடித்துப் போட்டு மாலையிலும் கொடுக்கவும். இதனால் வாய்வு, ரக்தபித்தம், வாந்தி, மூர்ச்சை, பிரமை இவையெல்லாம் தீரும்.

## இரக்தபித்தத்தில் எடுத்த ஔடதங்கள்

| | |
|---|---|
| ஆடாதோடை | பற்பாடகம் |
| இலாமிச்சம் | சந்தனம் |
| பால் | தென்னம்பாளை |
| கோரைக்கிழங்கு | முந்திரிகைப்பழம் |
| அதிமதுரம் | இலுப்பைப்பூ |
| சிறுகீரை | கடுக்காய் |
| தான்றிக்காய் | நெல்லிமுள்ளி |
| பேரீச்சம்பழம் | அறுகு |
| மாதளம்பழம் | எருமுட்டை |
| தண்ணீர்மிட்டான்கிழங்கு | நற்பாலை |
| பசுவின் நெய் | பொன்னாங்காணி |
| சிறுகல்லூரி | இலவம்பிசின் |
| ஆலம்விழுது | மகிழ் |
| சர்க்கரை | |

இவைகள் இரக்த பித்தத்தில் பிரசித்தமான அவுடதங்கள்

## கீழ்நோக்கின இரத்தபித்தத்திற்கு எடுத்த அவுடதம்

விளாவோடு பொடிசெய்து வர்த்திசெய்து தூபம் பண்ண வாயுஸ்தானங்களில் இருக்கின்ற சேற்றுமங்கள் குணமாகும். இது காச, சுவாஸத்தில் பிரசித்தமான அவுடதம்.

## இரத்த பித்தத்திற்கு

புளியயிலைச்சாறு, நல்லெண்ணெய் இவை இரண்டையும் சமனாகக் கலந்து குடிக்க இரத்தபித்தம் தீரும்.

## இரத்த பயித்தியத்திற்கு எலும்புருக்கிற்கு கிருதம்

| | |
|---|---|
| கருப்பஞ்சாறு | அறுகம்வேர்ச்சாறு |
| சீந்தில்கொடிச்சாறு | நெல்லிக்காய்ச்சாறு |
| நெருஞ்சிவேர் | சிறுபூளைவேர் |
| இளநீர் | |

இவைகளை 1 படி நெய்யிற்கு எவ்வளவு சேர்க்கவேண்டுமோ அவ்வளவு சேர்த்துக்கொண்டு பசுவின் பாலும் 2 படி சேர்த்து அதில்,

சரக்குகள் :

| | |
|---|---|
| இலவங்கப்பட்டை | இலவங்கப்பத்திரி |
| ஏலம் | சிறுநாகப்பூ |
| வெட்டிவேர் | நன்னாரிவேர் |
| இலாமிச்சம்வேர் | சந்தனம் |

இவைகளைச் சமனெடை சேர்த்துப் பொடிசெய்து மேற்படி நெய்யுடன் கலந்து காய்ச்சி பதமாக வடித்துவைத்துக் கொண்டு சாப்பிட இரத்தபித்தம், எலும்புருக்கி, பெரும்பாடு இவை தீரும்.

### சதாவரி கிருதம்

| | |
|---|---|
| சதாவரிக்கிழங்குச்சாறு | 2 சேர் |
| பால் | 2 சேர் |

இவை இரண்டும் சேர்த்து

| | |
|---|---|
| சீவகம் | இடபகம் |
| மேதை | மகாமேதை |
| காகோளி | க்ஷீரகாகோளி |
| கொடிமுந்திரிகைப்பழம் | அதிமதுரம் |
| காட்டுப்பயற்றின்வேர் | காட்டுழுந்தின்வேர் |
| நிலக்குமிழ்வேர் | செஞ்சந்தனம் |

இவைகள் வகைக்கு 2 வராகனெடை பொடிசெய்து போட்டு பதமாகக் காய்ச்சி வடித்து நெய், தேன் சேர்த்து சாப்பிட இரக்த பித்தம், இரக்த வாயுக்கள், உடம்பெரிச்சல், யோனிசூலை, யோனி எரிச்சல், மூத்திர கிருச்சிரம், நஷ்டவீரியம் இவை முதலான ரோகங்கள் தீரும்.

## இரக்தபித்தம், உட்சுரம், சருவ பயித்தியமிவைதீர லேகியம்

| | |
|---|---|
| நீர்வள்ளிக்கிழங்கு | நன்னாரிவேர் |
| சந்தனம் | கோரோசனை |
| அதிமதுரம் | இருவேலி |
| நெய்தற்கிழங்கு | சிறுகீரைவேர் |
| முந்திரிகைப்பழம் | வறட்சுண்டிவேர் |

இவைகளை சமன்சேர்த்து ஆடாதோடைச்சாற்றில் அரைத்துப் பசுவின் பால் 1 படி, தேன் 1 உழக்கு, சர்க்கரை 1 உழக்கு கலந்து லேகியமாகக் கிண்டி வைத்துக்கொண்டு சாப்பிட வாதம், பித்தம், சீதசுரம், விஷசுரம், உன்மாதம், சர்வபயித்தியம் இவை தீரும்.

## மூலிகைப் பிரயோகம்

*1)* கடுக்காயும் தாமரைப்பூவும் பொடிசெய்து தேனில் கொள்ள இரத்தபித்தம் தீரும்.

*2)* இலவம்பிசினும் மகிழும் பொடி செய்து தேனில் கொள்ள இரத்தபித்தம் தீரும்.

## இரத்த பித்தத்திற்குக் கஷாயம்

| | |
|---|---|
| மூங்கிலிலை | இலாமிச்சம்வேர் |
| கோரைக்கிழங்கு | வெட்டிவேர் |
| மாதளைமொட்டு | முசுமுசுக்கை |
| சுக்கு | |

இவைகளைச் சமபாகம் எடுத்துப் பொடித்துக் கஷாயம் வைத்து மூன்று நாள் கொடுக்கவும். இரத்தபித்தம் தீரும்.

## இரத்த பித்தத்திற்கு சுரசம்

ஆடாதோடை ஈர்க்குச்சாறு, தேன் இவை சமபாகம் கூட்டிக் குடிக்க இரத்தபித்தம் தீரும்.

## இதுவுமது

சிலாஜித்து வராகனெடை ஒன்றை பச்சரிசிக் கழுநீரில் அரைத்து, சர்க்கரையும் கூட்டிக் கலந்து சாப்பிட இரத்தபித்தம் தீரும்.

## இரத்தபித்தம், பெரும்பாடு, சிகதாமேகம் முதலியவைகளுக்குக் கஷாயம்

| | |
|---|---|
| நாவற்பட்டை | அத்திப்பட்டை |
| கருங்காலிப்பட்டை | தேங்காய்ப்பூ |
| கருவாழைக்கிழங்கு | |

இவைகளைக் கஷாயம் வைத்து கொம்பரக்குப் பொடிசெய்து போட்டுத் தேன் குத்திக் கொடுக்க இரத்தபித்தம், பெரும்பாடு, சிகதாமேகம் இவை தீரும்.

## இரத்த பித்தத்திற்கு ஆடாதோடை நெய்

| | |
|---|---|
| ஆடாதோடைச்சாறு | 2 படி |
| நெய் | 1 நெய் |
| பால் | 2 படி |

இவைகளைக் கலந்து அதில்

| | |
|---|---|
| நிலவேம்பு | குடசப்பாலை |
| முத்தக்காசு | அதிமதுரம் |
| சந்தனம் | இலாமிச்சம் |
| இலுப்பைப்பூ | கொற்றான் |
| நன்னாரிவேர் | பதிமுகம் |
| கம்பந்திராய் | நெய்தற்கிழங்கு |
| பெருங்குரும்பை | அறுகந்துளிர் |

இவைகளை வகைக்கு 1 விராகனெடை பொடித்துப் பால் விட்டரைத்துக் கலந்து பதமாகக் காய்ச்சி வடித்திறக்கி வைத்துக்கொண்டு தேன், சர்க்கரை சேர்த்து நசிக்கிச் சாப்பிடவும்.

## இரத்த பித்தத்திற்கு

ஒருபடி தண்ணீரில் மூன்று வயல்மீன்களைப் போட்டு ஊறவைத்து இறுத்து கழுநீர்ப்பூக்கிழங்கு ஒருபிடி அரைத்துக் கரைத்து ஒருவட்டு நல்ல கருப்புக்கட்டி கரைத்துக் கொடுக்கவும். இவ்வாறு 3 நாட்கள் கொடுக்க ரக்தபித்தம் தீரும்.

## இரத்த பித்தத்திற்கு வேறு மருந்துகள்

1) முசுமுசுக்கையிலை அரைத்து வெண்ணையில் கூட்டி விழுங்கவும். இரத்தபித்தம் தீரும்.

2) சங்கம்வேர் விளாங்காயாளவு அரைத்து எருமைத் தயிரில் அல்லது வெண்ணையில் விட்டு வெல்லமும் நான்குபேயன் வாழைப்பழமும் கூட்டிப் பிசைந்து நான்கு நாட்கள் கொள்ள மாறும்.

3) பலாச்சுளையைப் பறித்துக் கொட்டையை நசுக்கி, பலாச்சுளையைக் கூடப்போட்டு மூடிவைக்கத் தண்ணீராக விழும். இதை பானகமாகச் சாப்பிடத் தீரும்.

4) கோவைத்தண்டு பெருந்தண்டாக வெட்டி, மேல் தோல் சீவிப்போட்டு நசுக்கி, பாசிப்பயறு கூட்டி, 1 படி நீர்வார்த்து உழக்காகக் காய்ச்சி வடித்துச் சர்க்கரைக் கூட்டிக் கொடுக்கவும்.

5) மூன்று புளியமரம் சேர்ந்து நிற்கிறதில் வாய் பேசாமல் இலையைப் பறித்து வெல்லம் சேர்த்துக் கஷாயம் வடித்துக் குடிக்கவும்.

6) குருவிச்சித் தண்டு, இலை இவைகளை இடித்துப் பசுவின் பால் வார்த்துப் பிசைந்து காய்ச்சி வடிகட்டி வட்டுக் கருப்புக்கட்டியும் கூட்டிக்கொடுக்க இரத்த பித்தம் மாறும்.

7) ஆடாதோடை இலைச்சாறு ஒருபடி, நெய் ஒருபடி, பால் ஒருபடி இவைகளை ஒன்றுகூட்டி அதில்,

| | |
|---|---|
| நிலவேம்பு | குடசப்பாலைப்பட்டை |
| முத்தக்காசு | அதிமதுரம் |
| சந்தனம் | இலாமிச்சம்வேர் |
| இலுப்பைப்பூ | தேற்றான் |
| நன்னாரி | பதிமுகம் |
| கம்பந்திராய் | நெய்தல் கிழங்கு |
| பெருங்குரும்பை | அறுகு |

இவை ஒவ்வொன்றும் எலுமிச்சங்காயளவு அரைத்து விழுதாக்கிக் கலந்து பதத்தில் வடித்துத் தேன், சர்க்கரைக் கூட்டி நக்கிச் சாப்பிட மாறும்.

*8)* விஷ்ணுகிராந்தி சமூலம் பசுவின் பாலில் பிசைந்து சீனிபோட்டுக் கொடுக்கவும்.

*9)* செங்கழுநீர்க்கிழங்கு பால் விட்டரைத்து உலர உலர அடிக்கடி அடிவயிற்றில் தடவினால் இரத்தபித்தம் தீரும்.

*10)* புரசம்பூ அரைத்துக் கழற்சிக்காயளவு உருண்டை செய்துகொண்டு சாப்பிட்டால் இரத்த பயித்தியம் தீரும்.

*11)* தேற்றான்கொட்டையை மெல்லியதாய்ச் சீவி மைபோல் அரைத்து, எலுமிச்சம்பழத்தினுள் வைத்துப் புடமிட்டு, எலுமிச்சம்பழச் சாற்றில் அனுபானமாகச் சாப்பிட்டால் இரத்தபித்தங்கள் தீரும்.

*12)* தேற்றான் கொட்டையைப் பாலில் அரைத்துக் கொடுக்கவும் இரத்தபித்தம் தீரும்.

*13)* இலுப்பைப்பூவைப் பாலில் அரைத்துக் கொடுக்கவும்.

*14)* மிளகரணை வேரைத் தண்ணீரில் அரைத்துக் கொடுக்கவும் இரத்தபித்தம் தீரும்.

*15)* நெல்லிவேரை கழுநீரில் அரைத்துக் கொடுக்கவும்.

*16)* தாமரைப்பூவைக் கழுநீரில் அரைத்துக் கொடுக்கவும்.

17) தாமரைப்பூ, அகில் இவை இரண்டையும் தண்ணீரில் அரைத்துக் கொடுக்க ரக்தபித்தம் தீரும்.

18) தாமரைக்கிழங்கு, அதிமதுரம், சந்தனம், சிறுகீரை வேர், சீந்தில்தண்டு இவைகளைப் போட்டுக் கஷாயமிட்டுத் தேன், சர்க்கரை கூட்டிக் கொடுக்கவும்.

19) தென்னைமரப் பாளையை இடித்துச் சாறு எடுத்துத் தேன், சர்க்கரை கலந்து கொடுக்கவும்.

20) சிறுகீரைவேரை பச்சரிசிக் கழுநீரில் அரைத்துப் பச்சரிசிக் கழுநீரில் அனுபானமாகக் கொடுக்கத் தீரும்.

21) மூங்கில் சுட்ட சாம்பல், நெல்லிமரம் சுட்ட சாம்பல் இவைகளை மோரில் கலந்து கொடுக்க தீரும்.

## மூலிகைப் பிரயோகம்

1) கடுக்காயும், தாமரைப்பூவும் பொடி செய்து தேனில் குழப்பிக் கொள்ளத் தீரும்.

2) இலவம் பிசினும், மகிழும் தேனில் கொள்ளத் தீரும்.

3) சிறுகீரைவேர், நெய்தற்கிழங்கு இவைகளை வெள்ளாட்டுப் பாலில் அரைத்துக் கொடுக்கத்தீரும்.

குறிப்பு :- பித்தத்தை வெளியில் கொண்டுவந்த பிறகு மேற்படி மருந்துகளைக் கொடுக்க நன்றாகத் தீரும்.

## பித்தம் எடுக்க மருந்து

கற்றாழை மணியும் தேற்றாம் பிசினும் கடுக்காயுங் கூட்டிப் பிசைந்து கொடுக்க வாந்தி எடுக்கும். பிறகு உள்ளுக்கு மருந்து கொடுக்க நலம்.

## இரத்த பித்தத்திற்கு

1) சாதிக்காய், சாதிபத்திரி, காசுக்கட்டி இவை மூன்றும் எருமைத் தயிரில் கலந்து கொடுக்க இரத்தபித்தம் தீரும்.

*2) செருப்படிச் சாற்றில் சீரகம் பொடிசெய்து போட்டுக் கொடுக்கத் தீரும்.*

*3) வெள்வேலம்பட்டையைச் சிறுக நறுக்கி ஒருபடி பசுவின் பாலில் போட்டுப் பிசைந்துக் காய்ச்சி வடிகட்டி சர்க்கரை கலந்து கொடுக்கவும்.*

## இரத்த பித்தத்திற்கு எண்ணெய்

குட்டிபிராய் வேர்ப்பட்டை, சிறுகுமிழ்வேர்ப்பட்டை, நல்லெண்ணெய், இலுப்பை எண்ணெய், ஆமணக்கு எண்ணெய், வேர்ப்பட்டைகளைப் பொடித்துப் போட்டுக் காய்ச்சி வடித்துவைத்துக்கொண்டு சாப்பிட இரத்தபித்தம் தீரும்.

## இரத்தபித்தம், பெரும்பாட்டுக்கு

*1) உழக்குப் பொன்மெழுகை சேலையில் பொட்டணமாகக் கட்டி ஒருபடி பாலில் போட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும்.*

*2) புடலைச்சாறும், நெய்யும் கலந்து கொடுக்கவும்.*

*3) ஏலம், இலவங்கம், தாமரைப்பூவிதழ், அல்லியிதழ், இலந்தைக்கொட்டை பருப்பு, நெற்பொரி, அதிமதுரம், முத்தக்காசு, பச்சைக்கற்பூரம் இவைகளைச் சமனெடை பொடி செய்து நாளொன்றுக்கு 1¼ வராகனெடை தேனில் குழைத்துச் சாப்பிட இரத்தபித்தம், பெரும்பாடு இவைகள் தீரும்.*

## அரோசிகத்திற்கு

| | |
|---|---|
| ஏலம் | 2 வராகனெடை |
| திப்பிலி | 3 வராகனெடை |
| பருத்திவிதைப் பருப்பு | 4 வராகனெடை |
| நெற்பொரி | 6 வராகனெடை |
| சர்க்கரை | 15 வராகனெடை |

இவைகளைச் சேர்த்துச் சூரணித்துக் கொடுக்கவும்.

## வேறு

| | |
|---|---|
| நல்லசீரகம் | ஏலம் |
| சுக்கு | வில்வவேர் |
| நெற்பொரி | நெல்லிப்பருப்பு |
| கோரைக்கிழங்கு | நன்னாரிவேர் |
| இலாமிச்சம்வேர் | இலவங்கப்பட்டை |
| சர்க்கரை | |

இவைகளைச் சூரணித்து வெருகடிப் பிரமாணம் சாப்பிடவும்.

## தோஷத்திற்கும் அரோசிகத்திற்கும்

சீரகம், வேப்பீர்க்கு இவை இரண்டையும் பொன்னிறமாக வறுத்து அரைப்படித் தண்ணீர்விட்டு அரைக்கால் படியாகக் காய்ச்சி இறுத்து சர்க்கரை காசிடை சேர்த்து மத்தித்துக் கொடுக்கவும். இவ்வாறு மூன்று நாட்கள் ஆறு வேளைகள் கொடுக்க அரோசிகம் தீரும்.

## அரோசிகத்திற்கு கண்டுஷம்

*1)* சுக்கு, திப்பிலி, உப்பு, பச்சைக்கருவேப்பிலை, வேப்பீர்க்கு, புளியீர்க்கு இவைகளை எல்லாம் வெந்நீர் வார்த்தரைத்து வாய், பல் விளக்கிக் கொப்பளிக்கவும்.

*2)* கோவைக்காயை நான்காகக்கீறி அதனுள் சுக்கு, திப்பிலி, மிளகு இவை மூன்றும் பொடிசெய்துவைத்து, மூன்று சீலைமண் செய்து காயவைத்து சீலை கருகச் சுட்டுக் காயை எடுத்துப் பல், நாக்கு இவைகளின்மேல் தேய்க்க அரோசிகம் போகும். இது கைகண்டது.

## வேர்வைக்கு

கருவேலம்பட்டை, கற்றாழைவேர் இவை இரண்டையும் அரைத்துச்சாறு வாங்கிப் பூசவேர்வை நிற்கும்.

## பித்த விகாரத்திற்கும் சரீர புஷ்டிக்கும் கூஷ்பாண்டகிருதம்

| | |
|---|---|
| பெரும்பூஷணிக்காய்ச்சாறு | 1 மரக்கால் |
| இலவம்பட்டைச்சாறு | 2 படி |
| நெல்லிக்காய்ச்சாறு | 2 படி |
| தண்ணீர்மிட்டான்கிழங்குச்சாறு | 2 படி |
| அமுக்கிராக்கிழங்குச்சாறு | 2 படி |
| நெய் | 2 படி |
| பசுவின் பால் | 2 படி |

இவை எல்லாம் கலந்து அடுப்பின் மேலேற்றி

*சரக்குகள் :*

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |
| தேவதாரம் | அமுக்கிராக்கிழங்கு |
| கடுக்காய் | தாணிக்காய் |
| நெல்லிப்பருப்பு | ஏலம் |
| இலவங்கப்பத்திரி | சந்தனம் |
| கொத்தமல்லி | கோரைக்கிழங்கு |
| கற்கடகசிங்கி | அதிமதுரம் |
| வெட்டிவேர் | |

இவைகள் வகைக்கு ஒரு பலம் சூரணித்துக் கலந்து மெழுகு பதத்தில் காய்ச்சி இறக்கி உள்ளுக்குச் சாப்பிடவும்.

இவ்வாறு 40 நாட்கள் கொள்ள பயித்தியம், விகாரம் நீங்கும். சரீர புஷ்டியுண்டாகும். காந்தி பிறக்கும். மூத்திரகிருச்சிரம், மேகம், சுவாசகாசம், பாண்டு இவை எல்லாம் தீரும்.

## வாதபித்தமுள்ளிட்ட வியாதிகளுக்கு

| | |
|---|---|
| திப்பிலி | 1 பலம் |
| சீரகம் | 1 பலம் |
| ஏலம் | 1 பலம் |

| | |
|---|---|
| இலவங்கம் | 1 பலம் |
| அதிமதுரம் | 1 பலம் |
| கொத்தமல்லி | 1 பலம் |
| சுக்கு | 1 பலம் |
| மிளகு | 1 பலம் |
| கற்கண்டு பொடித்தது | 1 பலம் |

இவைகளைப் பொடித்து

| | |
|---|---|
| முற்றிய பூஷணிக்காய்ச்சாறு | 1 படி |
| **நெய்** | **2 படி** |

கூட்டி அத்துடன் பாதிரிப்பூ, கூகைநீர் சேர்த்துப் பதமாக வெந்திறக்கி வைத்துக்கொண்டு சாப்பிடவாதம் மீறினாலும், பித்தம் மீறினாலும் சொஸ்தமாகும், வரட்சிகளும் தீரும்.

## வாத பித்தத்திற்கு

| | |
|---|---|
| பாதிரிவேர்பட்டை | 1/8 பலம் |
| அங்கோலப்பொடி | 1/8 பலம் |
| அசமதாகம் | 1/8 பலம் |
| காசுக்கட்டி | 1 பலம் |
| இலவம்பிசின் | 1 பலம் |

இவைகளை நன்றாகப் பொடித்து நாளொன்றுக்கு இரண்டு பலம் காராம்பசுவின் மோரில் கலந்து கொடுக்க பேதியாகும். அதிகமாக பேதியானால் நீர்முள்ளியை சலத்தில் ஊறவைத்துப் பிசைந்து கொடுக்கவும்.

## சுரம், வாந்தி, விக்கல், அரோசிகம், இருமல், இளைப்பு இவைகளுக்கு மஹாவில்வாதிக் கஷாயம்

சிற்றாமுட்டி, வில்வவேர், சுக்கு இவைகளைச் சமபாகம் சேர்த்து இடித்துக் கஷாயம் வைத்துக்கொடுக்க சுரம், வாந்தி, அரோசிகம், இருமல் இளைப்புத் தீரும்.

## ஆந்திரசூலைஷ, உட்காய்ச்சல், பித்தத்திற்கு தேத்தான்கொட்டை நெய்

ஒரு சிறாங்கை தேத்தாங்கொட்டையைப் பொடி செய்து, முதல்நாள் இரவே ஊறப்போட்டு, மறுநாள் காலையில் பச்சைத்தண்ணீர் விட்டரைத்து விழுதாய் வைத்துக்கொண்டு, சீரகம், வெந்தியம் வகைக்கு அரைச் சிறாங்கை தனித்தனியே அரைத்துவைத்துக்கொண்டு, முசுமுசுக்கையிலை ஒருகொத்து அரைத்து, இந்த நான்கு விழுதுகளையும் 4 படி நெய்யில் கரைத்து எரித்து மெழுகு பதத்தில் வடித்து வைத்துக்கொள்ளவும். காலையில் ஒரு சிறிய கரண்டியும், இரவு படுக்கப்போகும்பொழுது ஒரு சிறிய கண்டியும் சாப்பிட்டுக் கொண்டுவரவும். மேற்படி வியாதிகள் சொஸ்தமாகும். இது கைகண்டது.

## அறிவுமயல் தீர

4 மரக்கால் பசுவின் பாலை 1 மரக்காலாகக் காய்ச்சி குறுக்கி, அத்துடன்,

| | |
|---|---|
| குன்றியிலைச்சாறு | 1 படி |
| முசுறுமுட்டை | 1 படி |
| பேயன்வாழைப்பழம் | 40 |
| வட்டுக்கருப்புட்டி | 40 |
| சர்க்கரை | 1 உழக்கு |

இவைகளை அரிசி 2 படியுடன் சேர்த்து சமைத்து மூன்று நாட்கள் உண்ணத் தீரும்.

**பத்தியம் :** கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும். காய்கறி ஒன்றுமாகாது.

## பிரகடம் பேசுவது தீர

முற்றிய கோவைத்தண்டு, முற்றிய முடக்கொற்றான் தண்டு இவைகளைச் சரியெடை கூட்டி இடித்து அவித்துப் பிழிந்த சாறு 1 உழக்கில் பழையகாடி சரிகூட்டி சர்க்கரை சேர்த்துக் கொடுக்கத் தீரும்.

## மருட்கொண்ட பித்தத்திற்குத் தைலம்

பொன்னாங்கண்ணிச்சாறு, சிறுகீரைச்சாறு, கோவைத் தண்டுச்சாறு, சிற்றாமுட்டிவேர்க்கஷாயம், சீந்திற்தண்டு, நன்னாரிவேர், தண்ணீர்விட்டான்கிழங்கு, நிலப்பனைக் கிழங்கு, அமிர்தவல்லிக்கிழங்கு, முசுமுசுக்கை இலைச்சாறு, ஆலம்விழுது, குன்றியிலைச்சாறு, தாழைவிழுதுச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு இவைகளை ஒன்றாகச் சேர்த்து, பசுவின் பால் ஒரு மரக்கால் சேர்த்து நல்லெண்ணெய் (வேண்டிய அளவு) விட்டு,

| | | |
|---|---|---|
| **கல்கம் :** | இலவங்கம் | அதிமதுரம் |
| | செண்பகப்பூ | செங்கழுநீர் |
| | கோட்டம் | கலைமான்கொம்பு |

வகைக்கு அரைப்பலம் பொடித்து விழுதாக அரைத்துச் சேர்த்து சிறிய தீயிலெரித்து மெழுகு பதத்தில் வடித்துவைத்துக் கொண்டு முழுகிவர மருட்கொண்ட பித்தம் தீரும்.

## பயித்தியம் பிடித்தவனுக்குக் கஷாயம்

வில்வவேர், காட்டுப்பயற்றம்வேர், பேய்ப்புடல், முசுமுசுக்கை, பச்சைப்பயறு இவைகள் வகைக்கு 1 பலம் பொடித்துத் தண்ணீர்வார்த்து அதில் 1 பலம் நல்ல சீரகத்தைப் பொடித்துத் துணியில் முடிந்துபோட்டு எட்டில் ஒன்றாகக் குறுக்கிக் கஷாயம் செய்யவும்.

ஆறியபிறகு சீரகத்தை அந்த கஷாயத்துடன் விட்டரைத்துக் குழப்பி, கஷாயத்துடன் சேர்த்துச் சாப்பிட பயித்தியம் தீரும். இதை இரவு சாப்பிட்ட பிறகு படுக்கப்போகும்போது கொடுக்கவும்.

## பயித்தியம் பிடித்தவனுக்குச் சுரசம்

| | |
|---|---|
| எலுமிச்சம்பழம் | 3 எண்ணிக்கையில் |
| நெல்லிக்காய் | 2 பலம் |
| இஞ்சி | 1½ பலம் |
| சீரகம் | 1 பலம் |
| சர்க்கரை | ¾ பலம் |

மேற்கூறிய மூன்று சுரசத்தையும் ஒன்று சேர்த்து அதில் சீரகத்தையும் சர்க்கரையும் பொடித்துப்போட்டுக் குடிக்க பயித்தியம் தீரும்.

### சாராயக்குடி வெறுக்க

சாராயத்தில் 1 சேர் நெய் கலந்து கொடுக்க, பின் ஒரு காலமும் பிடிக்காது.

### மூர்ச்சை சோஷைக்குக் கஷாயம்

| | |
|---|---|
| நெருஞ்சில்வேர் | அமுக்கிராக்கிழங்கு |
| காஞ்சோரி | சதாவரிக்கிழங்கு |
| சுக்கு | சீரகம் |

இவை சமபாகம் எடுத்துப் பொடித்துக் கஷாயம் வைத்து மூன்று நாட்கள் குடிக்க மூர்ச்சை, சோஷை தீரும்.

### மதமூர்ச்சைக்கு திராட்சாதி கஷாயம்

கொடிமுந்திரிகைப்பழம், அதிமதுரம், இலுப்பைப்பூ, திப்பிலி, மிளகு, கோரைக்கிழங்கு, கர்ச்சூரம், சந்தனம், இலாமிச்சம்வேர் இவை ஒன்று சேர்த்துக் கஷாயம் வைத்துத் தேன் சேர்த்துக் கொடுக்கவும். மதமூர்ச்சை, காமாலை, மேகம், பயித்தியம், சுரம் முதலியவை தீரும்.

### வேறு கஷாயம்

| | |
|---|---|
| கிராம்பு | 1/8 பலம் |
| சித்திரத்தை | 1/8 பலம் |
| சுக்கு | 1/8 பலம் |
| அக்கிராகாரம் | 1/8 பலம் |
| அரிசித்திப்பிலி | 1/16 பலம் |
| கண்டத்திப்பிலி | 1/16 பலம் |
| மிளகு | 4 பலம் |
| தேன் | 1/4 பலம் |

சரக்குகளை இடித்துப்போட்டு கஷாயம் வைத்து தேனைச் சேர்த்துச் சாப்பிடவும். மேற்கூறிய ரோகங்கள் தீரும்.

## குத்துக்காயம், வெட்டுக்காயத்திற்கு

| | |
|---|---|
| உலவநாயகம்யிலை | குறிஞ்சியிலை |
| புங்குயிலை | கழற்சியிலை |
| கடலிராஞ்சிப்பட்டை | தென்னயிலை |
| பாவட்டையிலை | தாணியிலை |
| பெரும்பீளையிலை | பருத்தியிலை |

இவைகளை பச்சையாக இடித்து வெட்டுக்காயங்களின்மேல் வைத்துக்கட்டத் தீரும். இவைகளையே போட்டுத் தையிலமாகக் காய்ச்சி வைத்துக்கொண்டு வெட்டுக்காயம், குத்துக்காயம் முதலியவைகளுக்குப் போடலாம்.

குறிப்பு :- சரக்குகள் எல்லாம் அகஸ்தியர் வாகடப்படி எடுத்திருந்தாலும் எழுதியது வேறு. வாகடமில்லை.

## பிப்பல்யாதி லேகியம்

| | |
|---|---|
| திப்பிலிப்பொடி | 1 உழக்கு |
| தேன் | 1 உழக்கு |
| சர்க்கரை | 1 படி |
| நீர்வள்ளிக்கிழங்குச்சாறு | 1 படி |
| பசுவின் பால் | 1 படி |

இவைகளைக் கலந்து அத்துடன்

| | |
|---|---|
| கொத்தமல்லி | நெல்லிப்பருப்பு |
| ஏலம் | இலவங்கம் |
| இலவங்கப்பத்திரி | நாகப்பூ |
| சுக்கு | மிளகு |
| கடுக்காய் | கோரைக்கிழங்கு |
| சடாமாஞ்சில் | சீரகம் |
| கருங்காலித்தோல் | |

இவைகள் வகைக்கு 1¼ வராகனெடை கூட்டிச் சூரணித்துக் கல்கமாகப் போட்டு, மந்தாக்கினியிலிட்டு லேகியம் செய்து, நெய் பழகிய குடுவையிலிட்டு, காலையிலும் மாலையிலும் 1¼ வராகனெடை திரிபலைப் பொடியும் தேனும் சேர்த்து லேகியத்தை உட்கொள்ளவும்.

தீரும் வியாதிகளாவன :- வாந்தி, அரோசிகம், உழலை, நெஞ்சடைப்பு, மூர்ச்சை இவைகள் எல்லாம் தீரும்.

## பித்த முதலானதற்கும், வாதத்திற்கும் எண்ணெய்

ஆயில்பட்டை 2 சேர் கொண்டுவந்து நெல்லிடையாகப் பொடித்து நீரிலிட்டு நாலொன்றாகக் காய்ச்சி எண்ணெய் சேர்த்து

***கல்கம் :***

| | |
|---|---|
| சித்தாமுட்டிவேர் | 1 பலம் |
| நன்னாரிவேர் | 1 பலம் |
| பெருங்காயம் | $3\frac{3}{4}$ வராகனெடை |
| அரத்தை | $3\frac{3}{4}$ வராகனெடை |
| விழாலரிசி | $3\frac{3}{4}$ வராகனெடை |
| சதகுப்பை | $3\frac{3}{4}$ வராகனெடை |
| கடுக்காய் | $3\frac{3}{4}$ வராகனெடை |
| மரமஞ்சள் | $3\frac{3}{4}$ வராகனெடை |
| தேவதாரம் | $3\frac{3}{4}$ வராகனெடை |
| பெருங்குரும்பை | $3\frac{3}{4}$ வராகனெடை |
| இந்துப்பு | $3\frac{3}{4}$ வராகனெடை |
| செவ்வியம் | $3\frac{3}{4}$ வராகனெடை |
| வெப்பாலையரிசி | $3\frac{3}{4}$ வராகனெடை |

இவைகளை பொடி செய்து பால்விட்டரைத்துக் கலந்து பதத்தில் காய்ச்சி இறக்கி உபயோகிக்கப் பித்த முதலான வியாதிகளும், வாத ரோகங்களும் தீரும்.

## மயக்கத்திற்கு நெய்

| | |
|---|---|
| நெய் | 1 சேர் |
| விதை எடுத்த பேரீச்சம்பழம் | 1 சேர் |
| சுக்கு | 1 சேர் |

இவைகளை ஒன்றுசேர்த்துச் சூரியபுடமாக 3 நாட்கள் வைத்திருந்து பிறகு காலையில் தின்றுவர மயக்கம், வெட்டை தீரும்.

## கைகாலெரிவு, உடம்பெரிவு, பயித்தியம், அஸ்தியில் உஷ்ணம் முதலியவை தீர சந்தனாதிச் சூரணம்

| | |
|---|---|
| சந்தனம் | இலாமிச்சம் |
| கோஷ்டம் | கோரைக்கிழங்கு |
| நெல்லிப்பருப்பு | செங்கழுநீர்க்கிழங்கு |
| சன்னநாகேசுரம் | அதிமதுரம் |
| கோரோசனை | இலுப்பைப்பூ |
| முந்திரிகைப்பழம் | பேரீச்சம்பழம் |

இவைகளை சமனாக எடுத்துச் சூரணித்து, மேற்படி சூரணத்திற்குச் சமன் வங்காள சர்க்கரை கூட்டிக் கலந்து காலையில் வெறுகடிப்பிரமாணம் கொள்ள கைகாலெரிவு, உடம்பெரிவு, பயித்தியம், பிரமேகம், அஸ்தியில் உஷ்ணம் இவைகள் தீரும்.

## பத்துவகை பயித்தியம், உந்மாதம், கைகால், உடம்பெரிவுக்கு ஏலாதிச் சூரணம்

| | |
|---|---|
| ஏலம் | நுண்ணேலம் |
| இலுப்பைப்பூ | சீரகம் |
| கருஞ்சீரகம் | முந்திரிகைப்பழம் |
| சீந்திற்சர்க்கரை | அதிமதுரம் |
| நன்னாரிவேர் | சுக்கு |
| திப்பிலி | நீர்வள்ளிக்கிழங்கு |
| அமுக்கிராவேர் | கோரைக்கிழங்கு |
| சாதிப்பத்திரி | நிலவேம்பு |
| கொத்தமல்லி | தாமரை உள்ளிருக்கும் அரும்பு |
| கூகைநீர் | நற்பாலைவேர்ப்பட்டை |
| கோஷ்டம் | அகில் |
| சடாமாஞ்சில் | இலாமிச்சம்வேர் |
| இருவேலிவேர் | சந்தனம் |
| கஸ்தூரிமஞ்சள் | இலவங்கப்பட்டை |
| சாதிக்காய் | நெருஞ்சில்வேர் |
| நெருஞ்சிக்காய் | பூனைக்காலிபருப்பு |
| ஏலவாலுகம் | இலவம்பிசின் |

இவைகளை சமனாகவெடுத்துச் சூரணித்து வஸ்திரகாயம் செய்து, காலையில் தேனிலோ அல்லது வெண்ணையிலோ அனுபானமாகக் குழைத்து உட்கொள்ள பத்துவகை பயித்தியமும், உன்மாதம், கை, கால், உடம்புபெரிவு, வயிறெறிவு இவையெல்லாம் தீரும். பலம், புஷ்டி உண்டாகும். வீரிய விருத்தி உண்டாகும்.

### வாய்நீர், கோளுதிர்தற்கு மருந்து

*1)* வசம்பைப் பொடி செய்து தேனில் குழைத்துக் கொடுக்கத் தீரும்.

*2)* ஏலம், இலவங்கம், பருத்திப்பருப்பு, இலந்தைக் கொட்டைப்பருப்பு, நல்ல கற்பூரம் இவையெல்லாம் பொடி செய்து, தேனோடு கலந்து நாவில் தடவ தீரும்.

### சீதபித்தத்தின் குணம்

கறியாது உடல், தலை முதலிய இடங்களில் பெருந்தினவெடுத்து, சிவந்து காசுபோல் தடித்திருக்கும். சிறிது காலத்தில் மறுபடியும் மறையும். **சீதபித்தம் என்பது பேய்ச்சொறி.**

### சீதபித்தம் அல்லது பேய்ச்சொறிக்குக் குடிநீர்

| | |
|---|---|
| கோரைக்கிழங்கு | சந்தனம் |
| வெப்பாலையரிசி | வெப்பாலைப்பட்டை |
| அதிமதுரம் | மஞ்சள் |

இவைகள் ஒவ்வொன்றும் 3 வராகனெடை எடுத்துப் பொடித்து 2 படி தண்ணீரில் போட்டு உழக்காகக் காய்ச்சி மூன்று நாட்கள் காலையிலும், மாலையிலும் சாப்பிட சீதபித்தம் தீரும்.

### வேறு

துளசி, அகத்தி, எள்ளு, இலாமிச்சு, இந்துப்பு இவைகளை சமபாகம் கூட்டி அரைத்து உடலிலே துவாலை இட்டு, நெய்யில் இந்துப்புப்பொடி போட்டுக் காய்ச்சி மூன்று அல்லது நான்கு தரம் தலைக்குத் தேய்த்து, வெந்நீரில் ஸ்நானம் செய்ய பேய்ச்சொறி தீரும்.

## உவாந்தித் திரவியம்

*பீர்கொடு வசம் பேய்ப்பீர்க்கு பேய்ப்புடோல் பேய்த்தும்பட்டி*
*தீக்கொடு வேலி வேம்பு திப்பிலி தேவ தாளி*
*காற்கடு கறுகிந் துப்பு கருமருக் காரை புங்கு*
*ஏற்கிலு கிலுப்பை ஏலம் யேரண்டங் குடசைப் பட்டை*
*ஊற்க மதாய் விளங்க மீதீது வாந்திக்கு முரைத்த தென்றே.*

## வாந்திக்கு ஏற்ற அவுடதங்களாவன

பீர்க்கு, வசம்பு, வேம்பு, பேய்ப்பீர்க்கு, பேய்ப்புடோல், திப்பிலி, பேய்த்தும்மட்டி, கொடுவேலி, தேவதாளி, கருங்கடுகு, கருப்புப்பு, கருமருக்காரை, புங்கு, கிலுகிலுப்பை, ஏலம், ஏரண்டம், குடசப்பட்டை இவை வாந்திக்கு ஏற்ற அவுடதங்களாகும்.

## பேதித்திரவியங்கள்

*காட்டா மணக்குச் சிவதை கொன்றை கடுக்காய்*
*நெல்லிமுள்ளி தான்றிக்*
*காட்டார் சதிரக் கள்ளி வெள்ளைக் காக்கணான்*
*வேருடன்தில்லை*
*வாட்டார் பொன்னா வாரையுடன் வருங் கோசல*
*மிவை யெல்லாந்*
*தீட்டார் பேதித் திரவியங்காண் சொன்னோந்*
*தெரிந்து கொள்ளே*

இ-ள் :- ***(பேதித் திரவியங்களாவன)*** காட்டாமணக்கு, சிவதை, கொன்றை, கடுக்காய், நெல்லிமுள்ளி, தான்றிக்காய், சதுரக்கள்ளி, வெள்ளைக்காக்கணம்வேர், தில்லை, பொன்னாவாரை, கோசலம் இவைகள் பேதிக்கு ஏற்ற திரவியங்களாகும்.

## உடம்பெரிவுக்கு சுரசம்

சிறுசெருப்படிச்சாறு, வெள்ளாட்டுப்பால் இவைகளை கலந்து குடிக்கத் தீரும்.

### சீதபித்தத்திற்கு சீந்தில் நெய்

சீதபித்தம் என்பதில் உடல், தலை முதலிய இடங்களில் எல்லாம் பெருந்தினவெடுத்து உடல் முழுவதும் காசுபோல் தடித்து சிவந்து திரும்ப மறையும்.

***அதற்கு சீந்தில் நெய் :*** சீந்தில்கொடி, வேப்பம்பட்டை, பேய்ப்புடல் ஒவ்வொன்றும் 10 பலம் எடுத்து இடித்து 4 மரக்கால் தண்ணீர்விட்டு நாலொன்றாகக் காய்ச்சி வடித்து ஒருபடி நெய்விட்டு, பேய்ப்புடலை சந்தனம்போல் அரைத்துக் கல்கமாகப் போட்டு குழப்பி சிறுதீயால் மூன்று நாட்கள் கொதித்த பிறகு, நான்காவது நாள் வடித்து உள்ளுக்கு இரண்டு நேரமும் காசிடை சாப்பிட்டு, நாசிதனில் நசியமும் பண்ணத் தீரும்.

### பித்தமாய் வாய் கசந்திருப்பதற்கும், கிறுகிறுப்பிற்கும் மருந்து கஷாயம்

*1)* நல்ல சீரகம் ஒரு சிறங்கை எடுத்துக் கஷாயம் காய்ச்சிக் குடித்துவர வாய்கசப்பும் தலை கிறுகிறுப்பும் தீரும்.

*2)* நல்ல சீரகத்தைப் பொடிசெய்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு காலையில் தின்றுவர வாய்க்கசப்பும், தலை கிறுகிறுப்பும் மாறும். தேனுடனே சர்க்கரையுடனே கலந்தும் சாப்பிடலாம். மயக்கமும் போகும். கைகண்டது.

### விக்கல் சத்திக்கு ஏலாதிச் சூரணம்

ஏலம், இலவங்கம், பச்சிலை, நாகப்பூ, கிராம்பு, சாதிக்காய், திப்பிலி, சுக்கு, மிளகு இவைகளைச் சமனாக எடுத்து பொடிசெய்து தேனிலாகிலும், நெய்யிலாகிலும் குழைத்துச் சாப்பிட விக்கல், சர்தி இவை நீங்கும்.

### வாந்தி, விக்கல், வாய் நீரூறலுக்கு

*1)* வாந்தி, விக்கலுக்கு மாதளங்காயை உலர்த்திப் பொடி செய்து தேனில் கொள்ளத் தீரும்.

*2) வாய்நீருறி வருகிறதற்கு இஞ்சிச் சாற்றை வாயில் வைத்துக் கொப்பளிக்க நிற்கும்.*

இத்துடன் 127, **No.** 99 வைத்திய அட்டவணை முடிகிறது. இதில் நாற்பது வகையான பித்தங்களுக்கும், அவை சம்பந்தமான ஏனைய ரோகங்களுக்கும் பலவகையான மருந்துகள் எழுதப்பட்டிருக்கின்றன.

**காமாலைக்கு எண்ணெய்**

*வெருகன்கிழங்கு, நல்ல சீரகம், அரத்தை, மரமஞ்சள், ஈருள்ளி இவைகளை எடுத்து கல்கமாக வரைத்து பசுவின் பால் ஒருபடி, விளக்கெண்ணெய் ஒருபடியுடன் கலந்து குழப்பி பதமாகக் காய்ச்சி வடித்துவைத்துக்கொண்டு உட்கொண்டுவர எரிவு, தாகம், 18 வித காமாலை இவை தீரும்.*

**வறட்சி, எலும்புருக்கி, பிரமேகத்திற்கு பூசணி நெய்**

| | |
|---|---|
| *பூசணிக்காய்ச்சாறு* | *4 படி* |
| *தண்ணீர்விட்டான்சாறு* | *4 படி* |
| *வாழைக்கிழங்குச்சாறு* | *4 படி* |
| *வெள்ளரிக்காய்ச்சாறு* | *4 படி* |
| *நெல்லிக்காய்ச்சாறு* | *4 படி* |
| *வாழைப்பூச்சாறு* | *4 படி* |
| *மாதளம்பழச்சாறு* | *4 படி* |
| *வெட்டிவேர்தண்டுச்சாறு* | *4 படி* |
| *செப்புநெரிஞ்சிச்சாறு* | *4 படி* |
| *கரிப்பான்சாறு* | *4 படி* |
| *இளநீர்* | *4 படி* |
| *பொன்னாங்கண்ணிச்சாறு* | *4 படி* |
| *சிறுகீரைச்சாறு* | *4 படி* |
| *சீந்தில்தண்டுச்சாறு* | *4 படி* |
| *செங்கழுநீர்கிழங்குச்சாறு* | *4 படி* |
| *அமிர்தவல்லிக்கிழங்குச்சாறு* | *4 படி* |
| *பசுவின் நெய்* | *4 படி* |
| *பசுவின் பால்* | *4 படி* |

இவைகளை ஒன்று சேர்த்து பதமாகக் காய்ச்சி வடித்து 1 படி சர்க்கரை சேர்த்துவைத்துக்கொண்டு உட்கொண்டுவரவும்.

***தீரும் வியாதிகளாவன :*** - வறட்சி, எலும்புருக்கி, பிரமேகம், பித்தம், காதுவலி, கைகாலெரிவு, உடம்பெரிவு, குடல் எரிவு, ரக்தரோகம், சிறுசிறங்கு இவைகள் தீரும். தாது விருத்தி உண்டாகும்.

குறிப்பு :- நெய்யைக் காய்ச்சி வடிக்கவேண்டுமானால் 4 படியும், கடுகுடனேயே சாப்பிடுவதாக இருந்தால் 2 படியும் விடவும். மற்ற சாறுகளெல்லாம் 4 படி விடவும்.

### விக்கல் சத்திக்கு நெய்

பொன்னாங்கண்ணிவேர், சிறுகீரைவேர், நெய்ச்சட்டிவேர், ஓரிலைத்தாமரைவேர், முத்தக்காசு, நன்னாரிவேர், நீர்ப்பூலாவேர், ஆவாரைவேர்ப்பட்டை, கூவிளைவேர், நெல்லிமுள்ளி, சந்தனம் இவை ஒவ்வொன்றும் அரைத்தவிழுது எலுமிச்சங்காயளவு,

| | |
|---|---|
| சாதிக்காய் | 2 எண்ணிக்கையில் |
| செண்பகப்பூ | ஏலம் |
| இலவங்கம் | அதிமதுரம் |
| கோஷ்டம் | திப்பிலி |

இவைகள் ஒவ்வொன்றும் நெல்லிக்காய் அளவு அரைத்து விழுதாக்கி சீந்தில்தண்டுச்சாறு விட்டுக் குழப்பி, மற்ற விழுதுகளையும் சேர்த்து, பசுவின் பால் 2 படி, பசுவின் நெய் 2 படி விட்டு கலந்து எரித்து வடித்துக்கொண்டு உள்ளுக்குக் கொடுக்கவும். தலையிலும் பூசி, நெஞ்சிலும் பூசி நசியம் செய்ய விக்கல், சத்தி நிற்கும்.

### சகல உஷ்ணத்திற்கும் ஏலாதிச்சூரணம் இதற்கு சஞ்சீவிச்சூரணம் என்றும் பெயர்

ஏலம், சீரகம், சன்னலவங்கப்பட்டை, இலவங்கப் பட்டை, அதிமதுரம், நெல்லிமுள்ளி இலவங்கப்பத்திரி,

சிறுநாகப்பூ, கருவேப்பிலை ஈர்க்கு, சந்தனத்தூள், சடாமாஞ்சி, சோம்பு இவை வகைக்கு ஒரு பலம், கொத்தமல்லி 12 பலம், கற்கண்டு 24 பலம் இவை முறையே இடித்து வஸ்திரகாயம் செய்துவைத்துக்கொண்டு வேளைக்கு 1 பலம் உட்கொள்ள சகல உஷ்ணமும் தீரும்.

## பல பித்தத்திற்கு வேறு ஏலாதிச்சூரணம்

ஏலம், மிளகு, திப்பிலி, கடுக்காய், தாணிக்காய், நெல்லிமுள்ளி, திப்பிலிமூலம், சீரகம், செண்பகப்பூ, கூகைநீறு, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, நாகேசுரம், பெருநாகேசுரம், சயிந்தவலவணம், வாய்விடங்கம், பேரீச்சம்பழம், முந்திரிச்சம்பழம், இலுப்பைப்பூ, வெட்டிவேர், இலாமிச்சம்வேர், அதிமதுரம், நெற்பொரி இவை வகை ஒன்றுக்கு அரைப்பலம் இளவறுப்பாக வறுத்திடித்து வஸ்திரகாயம் செய்து சமனெடை சர்க்கரை சேர்த்து மூவிரல் (திரிகடி) பிரமாணம் நெய்யாகிலும், தண்ணீராகிலும், தேனிலாகிலும் உட்கொள்ள பலவித பித்தம், அம்லபித்தம், பைத்தியம், கிறுகிறுப்பு, பழவெதுப்பு, மார்நோய், எரிகுல்மம், பித்த பாண்டு, ரக்தபித்தம் இவை தீரும்.

## அம்லபித்தம், தலைகிறுகிறுப்புக்கு ஏலாதிச்சூரணம்

| | |
|---|---|
| ஏலம் | சிற்றேலம் |
| அதிமதுரம் | இலுப்பைப்பூ |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| முந்திரிச்சம்பழம் | கிரந்திதகரம் |
| நன்னாரிவேர் | சுக்கு |
| திப்பிலி | தண்ணீர்விட்டான் |
| நிலப்பனைக்கிழங்கு | அமுக்கிராவேர் |
| முத்தக்காசு | வெட்டிவேர் |
| நெல்லிமுள்ளி | வேப்பீர்க்கு |

| | |
|---|---|
| கொத்தமல்லி | தாமரைவளையம் |
| ஓரிலைத்தாமரை | நல்லபாலைவேர் |
| கோஷ்டம் | சந்தனம் |
| தக்கோலம் | சடாமாஞ்சில் |
| கிச்சிலிக்கிழங்கு | சாதிக்காய் |
| நெருஞ்சிக்காய் | பூனைக்காலி |
| இலவம்பிசின் | சிறுநாகப்பூ |
| கல்மதம் | முசுமுசுக்கைவேர் |

இவைகள் வகைக்கு ¼ பலம்

கஸ்தூரி 2 பணவிடை, குங்குமப்பூ 2 பணவிடை இவைகளைக் கூட்டி இடித்து வடிகட்டி, சமன் சர்க்கரை சேர்த்துவைத்துக் கொண்டு வெருகடிப் பிரமாணம் தேனிலாகிலும், நெய்யிலாகிலும் அல்லது வெந்நீரிலாகிலும் உட்கொள்ள அலரும்பித்தம், ஆம்பல் பயித்தியம், தலைகிறுகிறுப்பு, மூக்கு நீர் பாய்ச்சல் (பீனிசம்) இவைகள் எல்லாம் தீரும்.

## பழவெதுப்புக்கு சிருங்காதிச்சூரணம்

| | |
|---|---|
| இலவங்கப்பட்டை | 1 வராகனெடை |
| நாகேசுரம் | 2 வராகனெடை |
| ஏலம் | 4 வராகனெடை |
| மிளகு | 8 வராகனெடை |
| திப்பிலி | 16 வராகனெடை |
| சுக்கு | 32 வராகனெடை |
| அமுக்கிராவேர் | 64 வராகனெடை |
| சர்க்கரை | 128 வராகனெடை |

இவைகள் எல்லாம் இடித்துச் சூரணித்து வைத்துக்கொண்டு பச்சைத் தண்ணீரில் கொள்ளவும்.

***தீரும் வியாதிகளாவன :-*** பழவெதுப்பு, அரோசிகம், அஸ்திசுரம், உடம்பு உணர்ந்து போதல் முதலியவை குணமாகும்.

இந்த மருந்திற்கு அச்வகெந்திச்சூரணம் என்றும், பழவெதுப்புக்கு சிருங்காதிச்சூரணம் என்றும் இரண்டு பெயர்கள் உண்டு. மேலெழுதிய ரோகத்திற்குக் கைகண்டது.

## அக்கினி மாந்தியம், அரோசிகத்திற்கு பஞ்சகோலாதிச் சூரணம்

| | |
|---|---|
| திப்பிலி | திப்பிலிமூலம் |
| சுக்கு | செவியம் |
| சித்திரமூலம் | கல்லுப்பு |
| வளையலுப்பு | இந்துப்பு |
| பொட்டிலுப்பு | சீரகம் |
| ஓமம் | சதகுப்பை |
| சத்திச்சாரம் | எவச்சாரம் |
| மிளகு | பெருங்காயம் |

இவைகள் எல்லாம் சமனெடை எடுத்துப் பொடித்து சரியெடை சர்க்கரை சேர்த்து கொம்மட்டிமாதளம் பழச்சாற்றிலாகிலும், நார்த்தம் பழச்சாற்றிலாகிலும் பிசைந்து ஒரு பாத்திரத்தில் வைத்துக்கொண்டு சாப்பிட்டால் அக்கினி மந்தம், அரோசிகம், சூலைகள், உப்பிசங்கள் இவை தீர்ந்து போகும்.

## பயித்தியவாய்வு, பழஞ்சுரம், அக்கினிமாந்தியம் முதலியவைகளுக்கு மகாதாளிசைச்சூரணம்

| | |
|---|---|
| தாளிசபத்திரி | மிளகு |
| இலவங்கப்பட்டை | இலவங்கப்பத்திரி |
| சிறுநாகப்பூ | சுக்கு |
| வாய்விடங்கம் | திப்பிலி |
| செவ்வியம் | அரத்தை |
| கிரந்திதகரம் | கொத்தமல்லி |
| பூலாங்கிழங்கு | கடுக்காய் |

| | |
|---|---|
| தாணிக்காய் | நெல்லிமுள்ளி |
| கொடிவேலி | கிராம்பு |
| இலாமிச்சம்வேர் | தக்கோலம் |
| ரேணுகம் | கோரைக்கிழங்கு |
| சடாமாஞ்சி | நல்லசந்தனம் |
| அகில் | |

இவையெல்லாம் வகைக்கு 2 பலம் எடுத்துச் சூரணித்து அச்சூரணத்திற்கு சமன் சர்க்கரை சேர்த்து கலந்து வைத்துக் கொண்டு வெருகடி பிரமாணம் இரண்டு வேளையும் பூர்ணசந்திரோதயம் வேண்டிய அளவு கலந்து சாப்பிட வாதம், பித்தம், சிலேஷ்மம், பாண்டு, சோகை, அதிசாரம், சுவாசகாசம், சீதசுரம், சிரோபிரமை, மரணவேதனை, ஆத்மானம், அக்கினிமாந்தியம், அன்னத்துவேஷம், அரோசிகம், உத்காரம், சூலம், அசீர்ணம், விக்கல், சர்வாங்கவாயு, ஈளை, தாது நாசம், அசுரவிரணம், நானாவித சுரம், மூர்ச்சை, ருதுசூலை, தேக இளைப்பு, கண்டதோஷம், முழங்கால்வலி, விலாபுறத்துவலி இவையெல்லாம் தீரும்.

## சுகவிரோசனத்திற்கு அவிபத்திசூரணம்

நெல்லிமுள்ளி, கோரைக்கிழங்கு, வாய்விளங்கம், கடுக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, இலவங்கம், இலவங்கப் பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலம் இவைகள் வகைக்கு ஒரு வராகனெடை எடுத்துப் பொடித்து சிவதைவேர் சுத்தி செய்து பொடித்தது 20 வராகனெடை, சர்க்கரை 40 வராகனெடை இவைகளையும் ஒன்று கலந்து 3 வராகனெடை வெந்நீரில் கொள்ள ஆறு தடவைகள் சுகவிரோசனமாகும்.

## அக்கினி மாந்தியத்திற்கு அஷ்டாதிச்சூரணம்

சுக்கு, திப்பிலி, மிளகு, சீரகம், கருஞ்சீரகம், இந்துப்பு, ஓமம், பெருங்காயம் இவைகளைச் சமனெடை எடுத்துச் சூரணித்து சர்க்கரை கலந்து கொடுக்கவும். அக்கினி மாந்தியமும், சர்வாங்கவாதமும் தீரும்.

## இரத்தபித்தம், அம்லபித்தத்திற்குக் கற்சூராதி ரஸாயனம்

| | |
|---|---|
| பேரீச்சம்பழம் | 32 பலம் |
| சர்க்கரை | 32 பலம் |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | இலவங்கப்பட்டை |
| இலவங்கப்பத்திரி | ஏலம் |
| சடாமாஞ்சி | சிற்றாமுட்டிவேர் |
| பேராமுட்டிவேர் | நாகமல்லிவேர் |
| சதகுப்பை | பூலாங்கிழங்கு |
| சிறுநாகப்பூ | கோரைக்கிழங்கு |
| நல்ல சந்தனம் | நன்னாரிவேர் |
| காட்டெருமைப்பால் | தக்கோலம் |
| ரேணுகம் | குடசப்பாலைவிதை |
| கிராம்பு | கருஞ்சீரகம் |
| நற்சீரகம் | வெட்டிவேர் |
| விலாமிச்சன்வேர் | கோஷ்டம் |
| விளாம்பழம் | முந்திரிகைப்பழம் |
| குங்குமப்பூ | பருத்திக்கொட்டை பருப்பு |
| சாதிக்காய் | சாதிப்பத்திரி |
| கரிசாலைச் சூரணம் | |

இவை வகைக்கு 2 பலம்

பசும் பால் 2 படி, தேன் 1 படி இவைகளைச் சேர்த்து ரஸாயனமாகச் செய்துகொண்டு, ராஜமிருகாங்கம் வேளைக்கு அரை பணவிடை சேர்த்து நெல்லிக்காயளவு இரண்டு வேளையும் சாப்பிடவும்.

***தீரும் வியாதிகள் :-*** ரக்தபித்தம், ஆம்பல் பித்தம், சிரோபிரமை, அனல் பைத்தியம், மூர்ச்சை உத்காரம் (ஏப்பம்) மனப்பைத்தியம், பிடகம், தொடர் பித்தம், துர்கந்த பித்தம்

ஆக இருபத்தோரு பைத்தியமும், நானாவித சுரமும், க்ஷயம், உளமாந்தை, அக்கினிமாந்தம், சூலை, அஜீர்ணம், அரோசிகம், தாகம், கோழை இதுவெல்லாம் தீரும்.

## அரோசிகம், மேக உஷ்ணம், தாதுவிருத்திக்கு மதுஸ்நுகி ரஸாயனம்

| | |
|---|---|
| பரங்கிப்பட்டை | 10 பலம் |
| திரிகடு | திரிபலை |
| ஏலம் | கிராம்பு |
| சாதிக்காய் | சாதிப்பத்திரி |
| சன்னலவங்கப்பட்டை | குரோசானி யோமம் |
| ஓமம் | வாய்விடங்கம் |
| சிற்றரத்தை | சிறுதேக்கு |
| செவ்வியம் | திப்பிலிமூலம் |
| கொத்தமல்லி | சீரகம் |
| சடாமாஞ்சில் | கோஷ்டம் |
| விலாமிச்சம்வேர் | அமுக்கிரா வேர் |
| சிறுநாகப்பூ | வெட்பாலையரிசி |
| வாலுழுவையரிசி | ரேணுகம் |
| கசகசா | நீர்முள்ளிவிதை |

இவை வகைக்கு 2½ விராகனெடை எடுத்து

| | |
|---|---|
| தண்ணீர்விட்டான்கிழங்கு | 1 பலம் |
| நிலப்பனங்கிழங்கு | 1 பலம் |
| முருங்கைப்பூ | 1 பலம் |
| தூதுவளைப்பூ | 1 பலம் |
| நெருஞ்சிக்காய் | ½ பலம் |
| முந்திரிச்சன்பழம் | ½ பலம் |

| | |
|---|---|
| பேரீச்சம்பழம் | ½ பலம் |
| சீந்திற்சர்க்கரை | ½ பலம் |
| கற்கண்டு | 5 பலம் |
| தேன் | ¼ படி |
| நெய் | ¼ படி |

இவைகளை கிரமப்படி எடுத்து முறைப்படி லேகியமாகக் கிண்டிவைத்துக்கொண்டு, உட்கொண்டுவர சகலமான மேக உஷ்ணங்கள் தீர்ந்து தாது விருத்தி உண்டாகும் தீரும். அரோசிகம் தீரும்.

## உஷ்ணம், மேகசுரம், பயித்தியத்திற்கு அச்வகெந்தி ரஸாயனம்

| | |
|---|---|
| அமுக்கிராக்கிழங்கு | 26 பலம் |
| ஏலம் | இலவங்கப்பட்டை |
| இலவங்கப்பத்திரி | சிறுநாகப்பூ |
| கொத்தமல்லி | முந்திரிச்சன்பழம் |
| சந்தனம் | சன்னலவங்கப்பட்டை |
| கற்கடகசிங்கி | காட்டெருமைப்பால் |
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | வெட்டிவேர் |
| கிராம்பு | திப்பிலிமூலம் |
| செவ்வியம் | |

இவைகள் வகைக்கு 3 வராகனெடை எடுத்துச் சூரணித்துப் பசுவின் பால் 4 படி சட்டியில்விட்டு, சர்க்கரை 50 பலம் போட்டு பாகு காய்ச்சி அதில் மேற்படி சூரணத்தைக் கலந்து லேகியமாக (ரஸாயனம்) கிண்டி பசுவின் நெய் 2 படி, தேன் ஒருபடி விட்டு கலந்து வைத்துக்கொண்டு சாப்பிட்டுவர உஷ்ணம். மேகசுரம், இரத்தபித்தம், சகல பித்த ரோகங்கள், அஸ்திசுரம் இவையெல்லாம் தீரும்.

### பித்தவாய்வுக்கு கண்டாமலக லேகியம்

| | |
|---|---|
| நெல்லிக்காய்ச்சாறு | 1 சேர் |
| பால் | 1 சேர் |
| தாளிசப்பத்திரி | மிளகு |
| சீரகம் | கெந்தவடியுப்பு |
| சித்திரமூலம் | சாதிக்காய் |
| கிராம்பு | சாதிப்பத்திரி |
| மூங்கிலுப்பு | கூகைநீறு |
| திப்பிலிமூலம் | செவியம் |
| சுக்கு | கொத்தமல்லி |
| ஆனைத்திப்பிலி | அரிசித்திப்பிலி |
| முந்திரிகைப்பழம் | இலாமிச்சம்வேர் |

இவைகள் வகைக்கு 2 வராகனெடை பொடித்து

| | |
|---|---|
| சிவதைவேர் | 2 பலம் (பொடித்தது) |
| சர்க்கரை | 3 சேர் |
| நெய் | ¼ சேர் |
| தேன் | ½ சேர் |

இவைகளை எல்லாம் சேர்த்து லேகியமாகக் கிண்டி உட்கொண்டுவர சகல பித்தவாயுவும் தீரும்.

### எரிவு மயக்கம், பயித்தியத்திற்கு வில்வாதி லேகியம்

| | |
|---|---|
| வில்வவேர் | 30 பலம் |
| சிற்றாமுட்டிவேர் | 30 பலம் |
| கருவேப்பிலைத்தண்டு | 10 பலம் |
| முக்காவேளைவேர் | 10 பலம் |

இவைகளை இடித்து 8 மரக்கால் தண்ணீர் வார்த்து எட்டிலொன்றாய்க் கஷாயம் செய்து அதில் பழைய வெல்லம் 30 பலமிட்டு பாகு காய்ச்சி கம்பி பதத்தில்

| | |
|---|---|
| திப்பிலி | 2 பலம் |
| திப்பிலிமூலம் | 2 பலம் |
| சித்திரமூலம் | 2 பலம் |
| ஏலம் | சீரகம் |

| | |
|---|---|
| கிராம்பு | இந்துப்பு |
| மிளகு | இலவங்கப்பட்டை |
| சிறுநாகப்பூ | தாளிசப்பத்திரி |
| சுக்கு | |

*வகைக்கு 1 பலம்*

தக்கோலம், இலவங்கப்பத்திரி இவை வகைக்கு ½ பலம் எடுத்து எல்லா சரக்குகளையும் பொன்நிறமாக வறுத்துப் பொடித்து வஸ்திரகாயம் செய்து மேற்படி பாகிலிட்டு லேகியமாகச் செய்து தேன் 1 படி கலந்து பதத்திலிறக்கி, பாக்களவு இருவேளையும் கொள்ள வாய் நீருறல், குடல் எரிவு, மயக்கம், தியக்கம், அக்னிமாந்தியம், அன்னத் துவேஷம், வாந்தி இவைகள் குணமாகும்.

***பத்தியம் :-*** பால், தயிர், மோர், நெய் கூட்டவும். கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும்.

**பயித்தியம், மேகம் இவைகளுக்கு கற்சூராதி லேகியம்**

| | |
|---|---|
| பேரீச்சம்பழம் | முந்திரிகைப்பழம் |
| நெல்லிமுள்ளி | இலுப்பைப்பருப்பு |
| நல்ல சந்தனம் | அதிமதுரம் |
| நெருஞ்சிக்காய் | பூமிசர்க்கரைக்கிழங்கு |
| பெரும்பூசணிவிதை | தண்ணீர்மிட்டான்கிழங்கு |
| கொத்தமல்லி | இலவங்கம் |
| நீர்முள்ளிவிதை | |

இவைகளை சமனெடை எடுத்துப் பொடித்துச் சூரணம் செய்து, அதற்கு நிகர் சர்க்கரை கூட்டிக்கொண்டு மூவிரல் (திரிகடி) கொண்டது காலையில் வெறும் வயிற்றில் உட்கொள்ள மூத்திர கிருச்சிரம், ஆகிரண பைத்தியம், சர்வமேகம், அங்கதாகம், சிரோதாகம், கண்ணெரிவு, கைகால் எரிவு, அரோசிகம் முதலான வியாதி எல்லாம் தீரும். (லேகியம் என்று பெயர் கொடுத்திருந்தாலும் சூரண பாகமாகவே எழுதப்பட்டிருக்கிறது.

## இருமல், அக்கினிமாந்தியம், பழம்சுரம் இவைகளுக்கு அசுவகெந்தாதி லேகியம்

| | |
|---|---|
| அமுக்கிரா வேர் | 20 பலம் |
| சர்க்கரை | 10 பலம் |
| பால் | 1 படி |
| நெய் | 1 படி |
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | இலவங்கப்பத்திரி |
| தாளிசப்பத்திரி | சிறுநாகப்பூ |
| கிராம்பு | திராக்ஷை |
| பேரீச்சு | ஏலம் |
| சீரகம் | இலவங்கப்பட்டை |
| கண்டத்திப்பிலி | அரத்தை |
| தூதுவளைவேர்ப்பட்டை | |
| கண்டங்கத்திரி வேர் | வகைக்கு 1 பலம் |

இதில் அமுக்கிரா, தூதுவளை, கண்டங்கத்திரி இவை நீங்கலாக மற்ற சரக்குகளை எல்லாம் பொன்னிறமாய் வறுத்து இடித்து வஸ்திரகாயம் செய்துகொண்டு, பாலில் சர்க்கரையைக் கரைத்துப் பாகு வைத்து பதமாய் வரும்பொழுது தூளைப்போட்டுக் கிளறி நெய், தேன்விட்டுப் பிசிரி வைத்துக்கொண்டு உட்கொண்டுவர அந்தகசுரம் (உட்காய்ச்சல்) இருமல், அக்கினிமாந்தியம் இவை தீரும்.

## பாண்டு, சோகை, காமாலை இவைகளுக்கு அஷ்டசிந்தாதி லேகியம்

| | |
|---|---|
| கடுக்காய் | தாணிக்காய் |
| நெல்லிமுள்ளி | |

வகைக்கு 25 எண்ணிக்கையில்

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | சீரகம் |
| கருஞ்சீரகம் | ஓமம் |
| இந்துப்பு | பெருங்காயம் |

வகைக்கு 1 பலம்

| | |
|---|---|
| லோகம் | 4 படி |
| பசுங்கோமியம் | 2 படி |
| கற்றாழைச்சாறு | 1 படி |
| ஆடாதோடைச்சாறு | 1 படி |

இந்த மூன்று சாறுகளையும் விட்டு அரப்பொடியை நான்கு சாமம் கல்வத்தில் அரைத்துக் கடைச்சரக்குகளையெல்லாம் இடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு முன் சித்தப்படுத்திய மிஞ்சியிருக்கிற சாற்றில் கருப்புட்டி 4 பலம் போட்டு பாகாகக் காய்ச்சிப் பதத்தில் மேற்படி சூரணமும் அரப்பொடியையும் கலந்து லேகிய பதமாய் வரும்பொழுது கொஞ்சம் தேன்விட்டுப் பிசரி வைத்துக்கொண்டு இரண்டு வேளையும் குன்றிப் பிரமாணம் கொண்டால் பாண்டு, சோகை, காமாலை, மகோதரம், நீராம்பல், பெருவயிறு, குடல்வாதம், இருமல், சுவாசகாசம், அநேக பித்தரோகங்கள் இவையாவும் தீரும்.

## பாண்டுவிற்கு சிஞ்சாதி லேகியம்

| | |
|---|---|
| புளிய இலை | 100 பலம் |
| துருப்பிடித்த இரும்பு | 10 பலம் |
| பழைய வெல்லம் | 20 பலம் |
| தண்ணீர் | 8 மரக்கால் |

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தாணிக்காய், நெல்லிமுள்ளி, சித்திரமூலம், சீரகம், செவ்வியம், அரத்தை, வாய்விளங்கம், குரோசானியோமம், ஓமம், கிராம்பு, கரிசாலைத்தூள், கருஞ்சீரகம், இந்துப்பு, லோகசிந்தூரம் இவைகள் வகைக்கு 2 பலம்

| | |
|---|---|
| இஞ்சி | 16 பலம் |
| தேன் | 2 படி |
| நெய் | 1படி |

இவைகளை முறைப்படி லேகியம் செய்து உட்கொண்டுவர பாண்டு முதல் அநேக ரோகங்களும் தீரும்.

## பித்தம், விக்கலுக்கு நிம்பாதி லேகியம்

| | |
|---|---|
| எலுமிச்சம்பழச்சாறு | புளியயிலைச்சாறு |
| முசுமுசுக்கைச் சாறு | வில்வப்பத்திரிச்சாறு |
| கொம்மட்டிமாதளைச்சாறு | இஞ்சிச்சாறு |

இவைகள் வகைக்கு ½ படி

| | |
|---|---|
| ஏலம் | இலவங்கம் |
| சீரகம் | அதிமதுரம் |
| திப்பிலி | நெற்பொரி |

இவை ஒவ்வொன்றும் 4 விராகனெடை

| | |
|---|---|
| சர்க்கரை | 4 பலம் |
| தேன் | 1 ஆழாக்கு |

இவைகளைச் சேர்த்து லேகியமாய் செய்து உட்கொள்ள பித்தாதிக்யம், விக்கல், அரோசகம் இவை தீரும்.

## உஷ்ண வாயு. பைத்திய வாயுவுக்கு சரபங்க வில்வாதி லேகியம்

| | |
|---|---|
| வில்வவேர் | 30 பலம் |
| முக்காவேளைவேர் | 30 பலம் |
| சங்கம்வேர் | 15 பலம் |
| அமுக்கிராவேர் | 7 பலம் |
| ஆயிற்பட்டை | 7 பலம் |
| மூக்கரட்டைவேர் | 7 பலம் |
| அத்திமுள்ளிவேர் | 7 பலம் |
| தூதுவளைவேர் | 7 பலம் |
| முசுமுசுக்கைவேர் | 7 பலம் |
| பெருங்காஞ்சோரிவேர் | 7 பலம் |
| குமிழம்வேர் | 7 பலம் |
| கொடிவேலிவேர் | 7 பலம் |
| முடக்கொற்றான்வேர் | 7 பலம் |
| சித்தாமுட்டிவேர் | 7 பலம் |
| பேராமுட்டிவேர் | 7 பலம் |

இவைகளை 8 மரக்கால் தண்ணீர்விட்டு வார்த்து எட்டில் ஒரு பாகமாகக் கஷாயம் வைத்துக் குறுக்கி, அதில் வெல்லம் 40 பலம் சேர்த்துப் பாகுகாய்ச்சி,

| | |
|---|---|
| தேன் | 2 படி |
| இஞ்சிச்சாறு | 1 படி |
| நாரத்தம்பழச்சாறு | ½ படி |

விட்டுக் கலந்து, மேன்பொடியாக

| | |
|---|---|
| ஏலம் | இலவங்கப்பட்டை |
| இலவங்கப்பத்திரி | சிறுநாகப்பூ |
| தாளிசப்பத்திரி | கொத்தமல்லி |
| அரத்தை | கற்கடசிங்கி |
| இலவங்கம் | சுக்கு |
| மிளகு | திப்பிலி |
| திப்பிலிமூலம் | சீரகம் |
| கருஞ்சீரகம் | கொடிவேலி |
| அதிமதுரம் | கடுக்காய் |
| தாணிக்காய் | நெல்லிமுள்ளி |

இவையெல்லாம் வகைக்கு 3 பலம் இடித்துப் பொடி செய்து பாகில் போட்டு லேகியம் செய்துகொள்ளவும். உஷ்ண வாய்வு, பித்தவாய்வு இவை குணமாகும்.

### வாதசிலேத்துமங்களுக்கும் அக்கினிமாந்தியத்திற்கும் தாளிசை வடகம்

| | |
|---|---|
| தாளிசபத்திரி | செவ்வியம் |
| மிளகு | கிராம்பு |
| ஏலம் | சிறுநாகப்பு |
| லவங்கப்பட்டை | விளாமிச்சம்வேர் |

இவை வகைக்குப் 1 பலம்

| | |
|---|---|
| திப்பிலி | திப்பிலிமூலம் |

வகைக்கு 2 பலம்

| | |
|---|---|
| சுக்கு | 3 பலம் |

இவைகளைச் சூரணித்து அச்சூரணத்திற்கிடை சர்க்கரை சேர்த்துப் பிசைந்து ஒரு பானையில் சீலை நனைத்துக்கட்டி, வட்டுக்குள் பசுவின் பால் 2 படி தண்ணீர் 2 படிவிட்டு மருந்தை வேகவைத்து இறக்கி எடுத்துக்கொண்டு கையில் நெய் தொட்டுத்தொட்டு பாக்களவு உருண்டைகளாகச் செய்து வைத்துக்கொள்ளவும். உதிரியாயிருந்தால் மருந்து வெந்த தண்ணீரை விட்டுக்கொள்ளவும். ஒரு நாளைக்கு 2 வேளை சாப்பிடவும்.

***தீரும் வியாதிகளாவன :-*** வாத சிலேஷ்மம், சத்தி, கிராணி, பாண்டுரோகம், மார்நோவு, சுரத்தில் பிறந்த பாண்டுரோகம், வாயுவில் பிறந்த மூலரோகம், குல்மரோகம், சளி, பீனிசம், உப்புசம், இருமல், நாவறட்சி இவைபோம்.

### பாண்டு வீக்கத்திற்கு தேங்காய் மாத்திரை

| | |
|---|---|
| அரப்பொடி | 1 பலம் |
| கந்தகம் | 1 பலம் |
| கிட்டம் | 1 பலம் |

இவைகளை நன்றாக பொடிசெய்து ஒரு தேங்காயை கண் பொத்து, உள்ளிருக்கும் இளநீரை ஊற்றிவிட்டு அக்கண் வழியாக மேற்படி சூரணத்தை உட்செலுத்தி சாணியினால் தேங்காயை நன்றாக மூடி புடம் போடவும். தேங்காய் உள் கருகாமல் ஓடு மாத்திரம் வெடிக்கும்படியான பதத்தில் எடுத்து மருந்தையும், தேங்காயையும் கல்வத்திலிட்டு கையாந்தகரைச் சாறுவிட்டு 4 சாமம் அரைத்துத் தேற்றான் கொட்டைப் பிரமாணம் மாத்திரை பிடிக்கவும். சாயந்திரத்தில் தேனிலும், காலையில் கையாந்தகரைச் சாற்றிலும் ஏழு நாட்கள் கொடுக்க எப்படிப்பட்ட வீக்கமும் போய்விடும்.

பத்தியம் : உப்பில்லாப் பத்தியம்.

### பித்தபாண்டும், விஷபாகத்திற்கு மாத்திரை

கிட்டங் காந்த மிந்துப்பு
கரியான சீரகம் திரிகடுகு

வட்ட கையான் சாறதனில்
வடிவா யரைத்து அடைபிடித்து
திட்டமாக தேனி லுண்ண
தீரும் பித்த பாண்டுவுடன்
விட்டுக் கொல்லும் விஷபாகம்
விரைந்தே ஓடிப் போகுமென்றே.

இ-ள் : கிட்டம், காந்தம், இந்துப்பு, கருஞ்சீரகம், திரிகடுகு இவைகளை சரியெடை எடுத்துப் பொடித்து கையாந்தகரைச் சாறுவிட்டு அரைத்து மாத்திரைகளாகச் செய்துவைத்துக்கொண்டு தேனிலிழைத்துண்ண பித்த பாண்டு, விஷபாகம் இவைகளெல்லாம் விரைந்து ஓடிப்போகும்.

## சகல வாயுவிற்கும், தீபனத்திற்கும் இங்குவாஷ்டகம்

சுக்கு, மிளகு, திப்பிலி, கண்டத்திப்பிலி, வெள்ளைப் பூண்டு, சீரகம் இவைகள் வகைக்கு ஒருபலம், பெருங்காயம், இந்துப்பு, கெந்தகம் (சுத்தி செய்தது) இவைகளைப் பொடித்து கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்து விராகன் எடையுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொண்டு உட்கொள்ள சகல வாய்வும் பறக்கும். தீபனம் உண்டாகும்.

## அரோசிக மாத்திரை

அதிமதுரம், அக்கிரகாரம், கோஷ்டம், விளாமிச்சம் வேர், நன்னாரிவேர், கலைமான்கொம்பு, ஏலம், சடாமாஞ்சி, கோரோசனை, சந்தனம் இவைகளைப் பொடித்து கல்வத்திலிட்டு கோவையிலைச் சாற்றில் அரைத்து, மிளகு பிரமாணம் மாத்திரைகள் செய்து முலைப்பாலிட அரோசிகம் தீரும்.

## விரேசனத்திற்கு உருண்டை

சுத்தித்த நேர்வாளம், கோஷ்டம், அதிமதுரம், ஏலம், செண்பகப்பூ இவையெல்லாம் சமனெடை எடுத்து

எலுமிச்சம்பழச்சாறு வார்த்து மிளகுப் பிரமாணம் உருண்டை செய்துகொண்டு பெரியவர்கள், சிறியவர்கள் சரீரம் அறிந்து கொடுக்கவும். அதிகமாக பேதியானால் வெந்நீரும் எலுமிச்சம்பழச்சாறும் கலந்து கொள்ளவும். பேதியாகா விடில் மிளகு நீரும், சாதமும் கொடுக்கவும்.

## தீபனத்திற்கு பற்பம்

சீனாக்காரம், பொட்டிலுப்பு, வெங்காரம், இந்துப்பு இவைகள் வகைக்கு 4 வராகனெடை, கற்பூரசிலாசத்து 16 வராகனெடை இவைகளை ஒன்றாகச் சேர்த்து அரைத்துப் புடம்போட்டு எடுத்து சாப்பிட தீபனமுண்டாகும்.

## அக்கினி மாந்தியத்திற்கு சுயமக்கினி

காந்தம், அரப்பொடி, கிட்டம், சங்கு, கடல்நுரை, நவச்சாரம், வெண்காரம், கல்நார், கெந்தகம் இவைகளை வகைக்கு அரைப் பலம் எடுத்து கற்றாழஞ்சாறு விட்டு 12 சாமம் அரைக்க சுயமாக்கினியாம். அக்கினி மந்தியம் தீரும்.

## காமாலை, சோகை, பாண்டு சகல வியாதிகளுக்கும் செம்பீரக்கடுகு

| | |
|---|---|
| சீரகம் | கருஞ்சீரகம் |
| கடுகுரோகிணி | சுக்கு |
| மிளகு | திப்பிலி |
| அசமதாகம் | கிட்டம் |
| இந்துப்பு | கல்லுப்பு |
| சீனாக்காரம் | சவுக்காரம் |
| வெங்காரம் | பெருங்காயம் |
| சாதிக்காய் | கிராம்பு |
| வெள்ளைப்பூண்டு | இவைகள் வகைக்கு ½ பலம் |

அரப்பொடி 2 பலம்

இவை எல்லாவற்றையும் பொடித்து வெள்ளாட்டு மூத்திரம் விட்டு அரைக்கவும். பிறகு, காட்டுமல்லிகை, கையாந்தகரை, கீழாநெல்லி, நொச்சி, மணத்தக்காளி இவைகளை

தனித்தனியே அரைத்த விழுது எலுமிச்சங்காய் அளவு, 2 பலம் (சுத்தித்த) ரஸத்தை குப்பைமேனிச்சாறு விட்டரைக்கவும்.

இந்த மூன்று விழுதுகளையும் ஒன்றாகக் கலந்து 20 எலுமிச்சம்பழங்களை நான்காகக் கீறி மருந்தை எல்லாம் அந்த இருபது எலுமிச்சம்பழங்களுள் அடைத்து, ஒரு கலசத்தினுள்ளிட்டு, மேல் சட்டி மூடி, பசுவின் கோமியம் விழுகின்ற இடத்தில் மூன்று நாட்கள் புதைத்து நான்காவது நாள் எடுத்து, காட்டுமல்லிகைச்சாறு 2 படி விட்டு அடுப்பிலேற்றி சாறு வற்றக் காய்ச்சி, அம்மியில் வைத்து அரைத்துத் தேன்கலந்து வைத்துக்கொள்ளவும்.

இதனை அரை மண்டலம் உட்கொள்ள மகோதரம், பாண்டு, காமாலை, சோகை, நீராம்பல், குடல்வாதம், வாயுகுன்மம் முதலிய சகல வியாதிகளும் குணமாகும்.

பத்தியம் : கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும். உப்பை வறுத்துக் கூட்டவும்.

## கால்கை எரிவுக்குப் பூச்சு

இலந்தையிலை, கருவயிலை, சீயக்காயிலை, நெல்லியிலை, முசுமுசுக்கை இவைகளை சமனெடை எடுத்து இடித்து ஒரு பானையில் குளுமையான தண்ணீர் வார்த்து அதில் போட்டு ராத்திரி முழுதும் வைத்திருந்து காலையில் மத்துகொண்டு கடைந்தால் மேல் நுரைபோலும், வெண்ணெய் போலும் வரும். அதை எடுத்து கால், கைகளில் பூசவும். இவ்வாறு மூன்று நாட்கள் செய்ய பித்தத்தினால் உண்டானதும், மேகத்தினால் உண்டானதுமான எரிவுகள் நிற்கும்.

### *மற்றொருமுறை என்னவெனில் :*

மேற்சொல்லியிருக்கும் பச்சியிலைகளின் சாறுகளை வாங்கி பசுவின் பால்விட்டுக் காய்ச்சி இரவு உறைகுத்தி வைத்திருந்து காலையில் மத்துகொண்டு கடைந்து வெண்ணெய் எடுத்து அந்த வெண்ணெயையும் பூசலாம்.

## வைத்திய அட்டவணை M. 84, D. 110

சாலிவாகன சகாப்தம் 1746 தாரண-ஷு கார்த்திகை மீ 23உ சோமவாரம் காலமே நாழிகை 10-க்கு மகாராசாஸ்ரீ சத்திரபதி சாயபு அவர்களுடைய சரணாரவிந்தத்துக்கு வைத்தியம் கோபாலபிள்ளை குமாரன் கொட்டியம் மத்தியஸ்தம் அய்யாக்கண்ணுப்பிள்ளை அவர்களுடைய சுதசத்தாரினாலே எழுதிவைத்த அவாளுடைய அனுபோக முறையாகிய கைவளைச் சுவடியை இந்த மூலபாடத்தைப் பார்த்து இந்தப் பிரதி எழுதி நிறைவேறி உயிர் நிவேதனம்பண்ணிச் சாஷ்டாங்க விண்ணப்பம். இந்தப்படிக்கு இந்தச் சுவடி எழுதின சுதசத்தார் நிமித்த காரணம் மகாராசாஸ்ரீ உசிர் சரணாரவிந்த தாசன் கொட்டியமத்தித்தம் அய்யாக்கண்ணுப் பிள்ளை கையெழுத்து. வேணும் அனந்தங்கோடி சாஷ்டாங்கம்.

## மூலிகை அகராதி

அகில் : அகரு, அகிற்கட்டை, பூழில்.
அக்கிராகாரம் : அக்ககரகாரம், அக்கராகாரம்.
அங்கோலம் : அழிஞ்சில், செம்மரம், சேய்.
அசமதாகம் : ஓமம், அசமதாஓமம், அசம்தாகம்.
அதிமதுரம் : அதிங்கம், எஷ்டிமது.
அதிவிடயம் : அதிவிடையம், அத்திரணம், பங்குரை, மாதிரி.
அத்தி : அதம், அதவு, உதும்பரம், கோளி.
அத்திமுள்ளி : கறிமுள்ளி, பப்ரமுள்ளி, ப்ருஹதி.
அமிர்தவள்ளி : சீந்தில், சோமவல்லி, அமிர்தக்கொடி.
அமுக்கிரா : அமுக்கிராக்கிழங்கு, அச்வகெந்தி.
அயிலேபகம், அயிலேயகம், அயிலேயம் : முசுமுசுக்கை, இருகுரங்கின்கை.
அரத்தை : சிற்றரத்தை, ராச்நா
அரிசித்திப்பிலி : பிப்பிலி, கணா, தண்டுலி.
அரேணுகம் : சீனமிளகு, வால்மிளகு
அல்லி : ஆம்பல், குமுதம், கைரவம்.
அறுகு : அறுகம்புல், மூதண்டம், தூர்வா.
ஆடாதோடை : ஆடாதொடை, வாஸா, சிம்மமுகி.
ஆதளை : நாட்டுக்காட்டாமணக்கு, வெள்ளைக்காட்டாமணக்கு.
ஆதொண்டை : ஆதண்டை, காகதுரத்தி, காத்தொட்டி.
ஆம்பல் : நெய்தற்கிழங்கு, குமுதம், கைரவம், அல்லி
ஆயில் : பூதிகம், ஆயாமரம்
ஆரை : சதுப்பன்னி, ஆரைக்கீரை, நீர் ஆவாரை.
ஆனைத்திப்பிலி : யானைத்திப்பிலி, கஜதிப்பிலி.
இசங்கு : சங்கங்குப்பி, பீச்சங்கண், முத்தாபலம்.
இச்சில் : இத்தி, இரதகம், இச்சியால், இரளி
இஞ்சி : ஆர்த்ரகம், ஆத்திரம், அல்லல், மதில்.
இடபகம் : ரிஷபகம், இதுகிடைப்பதில்லை. இதற்குப் பதில் நிலப்பூஷணி சேர்க்கலாம்.

இம்பூறல் : இம்பூறாவேர், சிறுவேர், சாயவேர்.
இரளி : இத்தி, இரதகம், இச்சி, இச்சியால்.
இருவேலி : வெட்டிவேர், மூலகந்தம், குருவேர்.
இலந்தை : பதரி, இரந்தை, குல்லரி, கோல்.
இலவங்கம் : கிராம்பு, லவங்கம், அஞ்சுகம்.
இலவங்கப்பட்டை: பட்டை, கருவாப்பட்டை,
இலவங்கப்பட்டை.
இலவங்கப்பத்திரி: லவங்கப்பத்திரி, கிராம்புபத்திரி.
இலவு : சால்மலி, பூரணி, பொங்கா.
இலாமிச்சம் : விலாமிச்சுவேர், ஹ்ரீபேரம்.
இலுப்பை : இருப்பை, மதூகம், குலிகம்.
ஈருள்ளி, ஈரவெங்காயம் } ஈரவுள்ளி, வெங்காயம், பலாண்டு
சுக்கிரகந்தம்.
உகா : உகாய், இவா, பாஹ்வயா.
உலவநாயகம் : இலவு, இலவமரம், சால்மலி.
ஊமத்தை : தத்தூரம், உந்மத்தம்.
எருமுட்டை : பீநாறி, பெருமரம், பூதாகம்.
எலுமிச்சம் : ஜம்பீரம், சம்பழம், எலுமிச்சை.
எள்ளு : திலம், கூறு, கூழம்.
ஏரண்டம் : ஆமணக்கு, சித்திரம், தலரூபம்.
ஏலம் : ஆஞ்சி, கோரங்கம், துடி.
ஏலவாலுகம் : அகப்படுவதில்லை.
ஓமம் : அசமோதா, யவானி, அசமோதம்.
ஓரிலைத்தாமரை: அவ்வியதம், ஓரிதழ்தாமரை.
கசகசா : போஸ்தக்காய், அபினிவிரை.
கச்சோலம் : கிச்சிலிக்கிழங்கு, பூலாங்கிழங்கு.
கடலிறஞ்சி : கடலழிஞ்சில், கடலிறாஞ்சி
கடுக்காய் : அபயா, ஹரீதகி, ப்ராணதா.
கண்டத்திப்பிலி : மோடிக்கட்டை, தேசாவரம், திப்பிலி,
மூலம், நறுக்குமூலம்.
கம்பந்திராய் : திராய், துரா
கரிசாலை, கரிப்பான் } கரிசலாங்கண்ணி, கையாந்தகரை,
ப்ருங்கராஜம்.
கருங்காலி : கதிரம்.

கருங்குங்கிலியம்: குக்குலு, குக்கில்.
கருஞ்சீரகம் : கிருஷ்ணசீரகம், உபகுஞ்சிகா.
கருமருக்காரை : கருமதுக்காரை, கருமருவகம்.
கரும்பு : இக்ஷு, புனர்பூசம்.
கருவாய்ப்பட்டை: லவங்கப்பட்டை.
கருவாழை : வாழையில் ஓர் வகை.
கருவேப்பிலை : கறியபிலை, கறிவேம்பு, காளசாகம்.
கருவேல் : பபூலவிருக்ஷம், கண்டாலு.
கழனி : செங்கழுநீர், குவலயம், உற்பலம்.
கழுநீர்ப்பூ : செங்கழுநீர்ப்பூ.
கற்கடகசிங்கி : கர்கடகசிங்கி, கர்கடகசிங்கி.
கற்சூரம் : பேரீச்சு, பேரீந்து.
கற்றாழை : குமரி, கன்னி, குமாரி.
காகதுண்டம் } ஆதண்டம், ஆதொண்டை,
காகநிம்பம் } காத்தொட்டி, காகதுரத்தி.
காகோளி : அசோகு, அசோகம்.
காசுக்கட்டி : கதிரசாரம்.
காட்டாமணக்கு : ஆதளை, நாட்டுக்காட்டாமணக்கு.
காட்டுப்பயறு : எலிப்பயறு, நரிப்பயறு, முத்கபர்ணீ.
காட்டுளுந்து : மாஷபர்ணீ.
காட்டெருமைப்பால்: கூகைநீர்.
கார்போகம் : கார்போகரிசி, பாகுசி
காற்பாசம் : பருத்தி.
கிச்சிலிக்கிழங்கு: பூலாங்கிழங்கு, கச்சோலம்.
கிரந்திதகரம் : கிரந்திநாயகன், சிலந்திநாயகம்.
கிராம்பு : இலவங்கம், லவங்கம்.
கிலுகிலுப்பை : நரிமிரட்டி, பேய்மருட்டி,
வட்டக்கிலுகிலுப்பை.
கீழாநெல்லி : கீழ்வாய்நெல்லி, கீழ்காய்நெல்லி,
பூமியாமலகி.
குக்குலு : குக்கில், கருங்குங்கிலியம்.
குடசப்பாலை : கசப்புவெட்பாலை, குடஜம்.
குட்டிபிராய் : பிராய், குட்டிபலா.
குப்பைமேனி : பூனைவணங்கி, மேனி.

குருந்தொட்டி : சித்தாமுட்டி, பலாமூலம்.
குருவிச்சி : குருவிச்சிப்பூண்டு.
குரோசானியோமம் : பாரஸீகயவானி, திப்பியம்.
குறிஞ்சா : குரிந்தை, மாதவீ, அதிமுக்தா.
குன்றி : குந்துமணி, குஞ்சா.
கூகைநீர் } காட்டெருமைப்பால்,
கூகைநீறு } கூவைக்கிழங்கு மாவு.
கூவிளம் : வில்வம், கூவிளை, சிவத்துருமம்.
கையாந்தகரை : கையான், கரிசாலை, கரிப்பான்,
கரிசலாங்கண்ணி, ப்ருங்கராஜம்.
கொடிவேலி : கொடுவேலி, சித்திரமூலம், சித்ரகம்.
கொட்டைப்பாக்கு : பாக்கு, க்ரமுகம், கமுகு.
கொத்தமல்லி : தனியா, கொத்தமல்லி விதை,
உருளரிசி, தான்யம்.
கொத்தான் : முடக்கொத்தான், முடக்கற்றான்.
(கொத்தான் என்றொரு பூண்டு இருப்பினும்
இச்சுவடியில் குறிப்பிடுவது
முடக்கொத்தான்)
கொம்பரக்கு : கோலரக்கு, லாக்ஷா.
கொம்மட்டிமாதளை: கொடிநாரத்தை, கடாரநார்த்தை.
கொன்றை : ஆரக்வதம், கொண்ணை.
கோட்டம் : கோஷ்டம், குஷ்டம், குரா, ஓலி.
கோரங்கம் : நெல்லிவிரை, ஆமலகிவிரை,
தாத்ரிவிதை.
கோரைக்கிழங்கு : முத்தக்காசு, முஸ்தா.
கோவை : கொவ்வை, பிம்பி.
கோஷ்டம் : கோட்டம், குஷ்டம்.
சகதேவி : நெய்ச்சிட்டி, தேவகந்தம்.
சங்கம் : சங்கன், சங்கன்செடி, முட்சங்கன்.
சடாமாஞ்சில் : ஜடாமாஞ்சி, பூஜடா.
சதகுப்பை : சோயிக்கீரைவிதை.
சதாவரி : தண்ணீர்விட்டான் கிழங்கு.
சதுரக்கள்ளி : மஹாஸ்நுகி, வஜ்ரதுண்டி.
சந்தனம் : ஸ்ரீகந்தம், பராகம்.
சமுத்திரப்பச்சை : கடற்பாலை, சமுத்திரசோதி.

| | | |
|---|---|---|
| சயிலேயகம் | : | முசுமுசுக்கை. |
| சரளதேவதாரு | : | சரளதேவதாரிக்கட்டை. |
| சன்னநாகேசுரம் | : | சிறுநாகப்பூ. |
| சாதிக்காய் | : | ஜாதிக்காய், குலக்காய். |
| சாயவேர் | : | இம்பூறாவேர். |
| சாரணை | : | சாட்டரணை, புணர்நவா. |
| சித்தாமுட்டி | : | குருந்தொட்டி, பலாமூலம். |
| சித்திரத்தை | : | ராச்நா, அரத்தை. |
| சித்திரமூலம் | : | கொடுவேலி, சித்திரகம். |
| சிவதை | : | சிவதைவேர், த்ருவிருத். |
| சிறுகல்லூரி | : | சிறுகல்லுருவி, அக்னிகர்பா. |
| சிறுகீரை | : | சிறிய தண்டுக்கீரை, கண்டி. |
| சிறுகுமிழ் | : | நிலக்குமிழ். |
| சிறுதேக்கு | : | கண்டுபரங்கி, பார்ங்கி. |
| சிறுநாகப்பூ | : | சன்னநாகேசுரம். |
| சிறுநாகம் | : | சனனநாகேசுரம். |
| சிறுபீளை | : | சிறுகண்பீளை, பாஷாணபேதி. |
| சிறுபுள்ளடி | : | கடமாரி. |
| சிறுமூலம் | : | காமணம், நறுக்குமூலம். |
| சிறுவிளா | : | கூட்டிவிளா. |
| சீதேவி | : | சீதாசெங்கழுநீர், செங்கழுநீர்க்கிழங்கு. |
| சீந்தில் | : | அமிர்தா, அமிர்தவல்லி. |
| சீந்தில் சர்க்கரை | : | சீந்தில்சத்து. |
| சீயக்காய் | : | சீக்காய், சிகைக்காய், ஸப்தளா. |
| சீரகம் | : | போஜனகுடோரி, ஜீரகம். |
| சீவகம் | : | அகப்படுவதில்லை. பதிலாக சீந்தில் சேர்க்கவும். |
| சுக்கு | : | நாகரம், சுண்டி, உலர்ந்த இஞ்சி. |
| சுழலாவாரை | : | பொன்னாவிரை, பேயாவாரை. |
| செங்கழனி | : | சீதாசெங்கழுநீர், கழுநீர் |
| செங்கழுநீர் | : | சீதாசெங்கழுநீர், கழுநீர். |
| செஞ்சந்தனம் | : | ரக்தசந்தனம், சிவப்பு சந்தனம், ஹரிசந்தனம். |
| செண்பகப்பூ | : | சண்பகம். |

| | | |
|---|---|---|
| செப்புநெரிஞ்சில் | : | கோக்ஷுரம், கோகண்டம். |
| செம்பரத்தை | : | ஜபா, அரத்தம். |
| செருப்படி | : | சிறுசெறுப்படி, செருப்படை. |
| செவ்வகத்தி | : | உதும்பரம். |
| செவ்வள்ளி | : | தாமரலதா |
| செவ்வியம் | : | சவியம், சவிகை, கண்டீரை. |
| சேவகன்பூண்டு | : | சித்தாமுட்டி, பலாமூலம், குருந்தொட்டி |
| சோம்பு | : | பெருஞ்சீரகம், ஸ்தூலஜீரகம். |
| தகரம் | : | தகரை, சக்ரமர்தம் |
| தக்கோலம் | : | தக்கோலப்பொட்டு, கோலம். |
| தண்ணீர்மிட்டான் | : | சதாவரி, சதாவேரி, நீர்விட்டான். |
| தாணி | : | தாணிக்காய், விபீதகி. |
| தாமரை | : | குமுதம், பத்மம். |
| தாளிசப்பத்திரி | : | தாளீசபத்திரம். |
| தாழை | : | கேதகி, முண்டகம், முடக்கன். |
| தான்றி | : | தாணிக்காய். |
| திப்பிலி | : | பிப்பிலி, கணா. |
| திப்பிலிமூலம் | : | மோடிக்கட்டை. |
| திராக்ஷை | : | முந்திரிப்பழம், முந்திரிகை. |
| தில்லை | : | தில்வம், உகரு. |
| திரிகடுகு | : | சுக்கு, மிளகு, திப்பிலி மூன்றும் சேர்ந்தது |
| திரிசுகந்தம் | : | ஏலம், லவங்கப்பட்டை, பச்சிலை மூன்றும் சேர்ந்தது. |
| திரிபலா | : | கடுக்காய், தாணிக்காய், நெல்லிமுள்ளி மூன்றும் சேர்ந்தது. |
| திருநாமப்பாலை | : | ஒருவித பாலைமரம். |
| துத்தி | : | கக்கடி, கங்காடிகா, கிக்கசி. |
| தும்பராஷ்டகம் | : | பேரரத்தை, அரத்தை |
| தும்பை | : | துரோணபுஷ்பி, வைகுண்டம். |
| துவரை | : | துவரி, ஆடகம், ஆடகி. |
| துளசி | : | திருத்துளாய், குல்லை, வனம். |
| தூதுவளை | : | தூதூளை, தூதுவேளை, அலர்க்கம். |
| தென்னை | : | தெங்கு, பூலோககற்பக விருட்சம், நாளிகேரம். |

| | | |
|---|---|---|
| தேட்கொடுக்கு | : | தேற்றான், தேறு, கதகம், இல்லம். |
| தேவதாரம், தேவதாளி | } | தேவதாரு, தேவதாரிக்கட்டை |
| தேற்றான் | : | கதகம், தேத்தான்கொட்டை. |
| நரிப்பயறு | : | காட்டுப்பயறு, முத்கபர்ணீ. |
| நாகணம் | : | நகம் |
| நாகப்பூ | : | சிறுநாகப்பூ, சன்னநாகேசுரம். |
| நாகமல்லி | : | நாகமல்லிகை, அனிச்சை. |
| நாகேசுரம் | : | நாகப்பூ, சிறுநாகப்பூ |
| நாணல் | : | நாணர்புல். |
| நாயுருவி | : | அபாமார்கம், சிறுகடலாடி, கொட்டாவி விட்டிறுக்கி. |
| நாவல் | : | நாகமரம், ஜம்பு, நவ்வல். |
| நிலக்கடம்பு | : | குயக்காலம், குயகாயம், கோகணம். |
| நிலக்குமிழ் | : | சிறுகுமிழ். |
| நிலப்பனை | : | வாராகிகந்தம், முசலி, தாலமூலி. |
| நிலவாகை | : | வாகையில் ஒரு இனம். |
| நிலவேம்பு | : | கிராதம், கிராததிக்தம், காண்டகம். |
| நீர்ப்பூலா | : | ஒருவகைப் பூண்டு. |
| நீர்முள்ளி | : | கோகிலாக்ஷம், நிதகம். |
| நீர்வள்ளி | : | தண்ணீர்விட்டான், சதாவரி. |
| நுண்ணேலம் | : | ஏலரிசி. |
| நெய்ச்சிட்டி | : | சகதேவி, தேவகந்தம், சிற்றலை. |
| நெய்தல் | : | நெய்தல் கிழங்கு, குமுதம். |
| நெருஞ்சில் | : | கோக்ஷுரம், திரிகண்டம். |
| நெல்லிமுள்ளி | : | ஆமலகி, நெல்லிக்காய் காய்ந்தது. |
| நேர்வாளம் | : | வாளம், தந்தி, நேபாளம். |
| நொச்சி | : | நிர்குண்டி, சிந்துவாரம், நித்தில். |
| பங்கம்பாளை | : | ஆடுதின்னாப்பாளை, புழுக்கொல்லி. |
| பசுமஞ்சள் | : | அரிசனம், காஞ்சனி, ஹரித்ரா. |
| பச்சிலை | : | பத்திரம், தமாலபத்ரம், மட்டிலை. |
| பச்சைப்பயறு | : | சிறுபயறு, பாசிப்பயறு, முத்கம். |
| பதிமுகம் | : | பத்மகாஷ்டம். |
| பராகம் | : | சந்தனம். |

| | | |
|---|---|---|
| பரிமளப்பூ | : | மராட்டிமொக்கு. |
| பருத்தி | : | காற்பாசம், பரி, உத்திரி, பன்னல். |
| பலாமரம் | : | சக்கை, பனசம், ஏகாலவல்லி. |
| பறங்கிப்பட்டை | : | மதுஸ்நுகி, பரங்கிச்சக்கை. |
| பற்பாடகம் | : | பற்படகம், பற்பாடகப்புல்லு. |
| பாகல் | : | காரவல்லி, கூரம், கூலம். |
| பாதிரி | : | பாடலா, பாடலம், புன்காலி |
| பாலிருள்கிழங்கு | : | பால்வள்ளிக்கிழங்கு. |
| பாலை | : | சீவனி, சீவந்தி. |
| பாவட்டை | : | பற்பணம் |
| பிரண்டை | : | வஜ்ரவல்லி |
| பிராமுட்டி | : | பேராமுட்டி, மஹாபலா, சாயவேர். |
| பிராய் | : | குட்டிபலா, குட்டிப்பலா. |
| பீதரோகணி | : | உரோகணி. |
| பீர்க்கு | : | கோசவதி |
| புங்கு | : | கரஞ்சம், புன்கன் |
| புடோல் | : | புடல், சிச்சிண்டம். |
| புரசு | : | பலாசு, முருக்கு, க்ருமிநாசம். |
| புளி | : | திந்திருணி, சிஞ்சா. |
| பூமிசர்க்கரை | : | பூமிச்சர்க்கரைக்கிழங்கு |
| பூலாங்கிழங்கு | : | கிச்சிலிக்கிழங்கு, கச்சோலம். |
| பூனைக்காலி | : | கபிகச்சு, ஆத்மகுப்தா. |
| பூஷணி | : | கூஷ்மாண்டம். |
| பெருங்காஞ்சோறி | : | எருமைக்காஞ்சோறி |
| பெருங்காயம் | : | காயம், ஹிங்கு, ராமடம். |
| பெருங்குரும்பை | : | பெருங்குருத்து |
| பெரும்பீளை | : | பெருங்கண்பீளை. |
| பெருவாகை | : | சிரீஷம், சீரிடம். |
| பெருவிளா | : | கபித்தம், வெள்ளில், விளவு. |
| பேய்புடோல் | : | படோலம். |
| பேய்த்தும்மட்டி | : | பேய்க்கொம்மட்டி, கலிங்கம். |
| பேராமுட்டி | : | பிராமுட்டி |
| பேரீச்சு | : | கற்சூரம். |
| பொரும்பில் | : | சுழலாவாரை, பேயாவாரை. |

பொன்னாங்காணி : கொடுப்பை, சீதை, மீனாக்ஷி
பொன்முகட்டை : மலைதாங்கி, வட்டத்திருப்பி.
பொன்னாவாரை : பேயாவாரை, சுழலாவாரை.
மகாமேதை : அகப்படுவதில்லை.
பதில் நன்னரி சேர்க்கவும்.
மகிழ் : வகுளம், இலஞ்சி.
மஞ்சள் : நிசி, ஹரித்ரா, காஞ்சனி.
மஞ்சிட்டி : மஞ்ஜிஷ்டா, மஞ்சூகம்.
மணித்தக்காளி : மணித்தக்காளி, காகமாசி.
மயிலிறகு : மயில்தோகை, மயிற்பீலி.
மரமஞ்சள் : தாருஹரித்ரா, தார்வீ, காலேயகம்.
மராட்டிமொக்கு : மராட்டிப்பூ.
மருக்கொழுந்து : தவனம், தமனகந்தம்.
மலைதாங்கி : வட்டத்திருப்பி, பொன்முசுட்டை.
மா : ஆம்ரம், சேகரம்.
மாஞ்சில் : சடாமாஞ்சில், பூதஜடா.
மாதளை : தாடிமம், பீஜபூரம், மாதுலங்கம்.
மாவிலங்கு : மாவிலங்கம், குமாரகம்.
மிளகறணை : காஞ்சனம், கரண்டை.
மிளகு : மரிசம், மிரியல்.
முக்காவேளை : காய்வேளை
முசுமுசுக்கை : அயிலேயகம், மொசுமொசுக்கை,
இருகுரங்கின்கை, அயிலேபகம்.
முசுறுமுட்டை : எறும்பு முட்டை.
முடக்கற்றான் : கொத்தான், முடக்கொத்தான்,
முடக்கறுத்தான்.
முத்தக்காசு : கோரைக்கிழங்கு, முஸ்தா.
முத்தெருக்கஞ்செவி: ஒருவித கள்ளி இனம்.
முந்திரிகை : திராட்சி, திராக்ஷை, கொடிமுந்திரி.
முருங்கை : சிக்ரு, சோபாஞ்சனம்.
முல்லை : வனமல்லி.
மூக்கரட்டை : சாட்டரணை, சாரணை.
மூக்குத்திப்பூண்டு : மூக்குத்திக்காய்கொடி.
மூங்கில் : ஓங்கல், வம்சம், வேணு.

மூங்கிலுப்பு : வம்சலோசனா
ரேணுகம் : அரேணுகம், வால்மிளகு.
வசம்பு : உக்ரகந்தா, வசம், வசை.
வட்டத்திருப்பி : பொன்முசுட்டை.
வரிக்கத்தாழை : ஒருவித கத்தாழை.
வறட்சுண்டி : ஆடுதின்னாப்பாளை
வாகை : சிரீஷம், சீரிடம், பாண்டில்.
வாய்விடங்கம் : விடங்கம், வாய்விலங்கம்.
வாலுழுவை : வாலுளுவை, மால்கிங்கிணி.
வால்மிளகு : லங்கேசம், அரேணுகம், ரேணுகம்.
விசுவாசி : ஜாதிபத்திரி
விலாமிச்சம் : இலாமிச்சுவேர், ஹ்ரீபேரம்
வில்வம் : கூவிளம், பில்வம், சிவத்துருமம்.
விளா : கபித்தம், விளவு, வெள்ளில்.
விழாலரிசி : விழலரிசி.
விஷ்ணுகிரந்தி : விஷ்ணுகிராந்தி, அபராசி.
வீழி : விபூதி.
வெங்காயம் : பலாண்டு, ஈருள்ளி.
வெட்டிவேர் : இருவேலி, குருவேர்.
வெந்தயம் : மேதி, மெந்தியம், மேதிகா.
வெப்பாலை : வெட்பாலை.
வெப்பூலா : வேர்ப்பூலா
வெருகன் : வெறுகன்கிழங்கு, கஜகர்ணிகா.
வெள்ளரிக்காய் : உர்வாருகம், கற்கடி.
வெள்ளைக் காக்கணம் : காக்கரட்டை (வெள்ளை), சங்கபுஷ்பி (வெள்ளை).
வெள்ளைக்குங்குலியம்: ஸர்ஜரஸம்.
வெள்ளைச்சாரணை : சத்திச்சாரணை, சாட்டரணை, வெள்ளைச்சாரடை.
வெள்ளைவெங்காயம் : பூண்டு, லசுனம், உள்ளி.
வெள்வேல் : ச்வேதபப்பூலம், அரிமேதம்.
வேர்ப்பூலா : வெப்பூலா.
வேம்பு : நிம்பம், அரிட்டம்.
வேளை : நல்வேளை, அஜகந்தா.